மீண்டும் வாழ்ந்தால்.....?



மகாகனம்

வ. ச. ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்

மகாகனம் ஸ்ரீநிவாச சாஸ்திரிகளைப் பற்றி அறியாத இந்தியர் மிகக் குறைவாகத்தான் இருக்க முடியும்.

சாதாரண ஏழைக் குடும்பத்தில் பிறந்து பள்ளிக்கூட உபாத்தியாயராக இருந்த இவர். இந்திய ஊழியர் சங்கத்தில் சேர்ந்து நமது நாட்டுக்காகப் பல வகையில் உழைத்து உலகப் பிரசித்தி பெற்ற பெரியவராய் விளங்கினார்.

இவர் வாழ்க்கை பல பிரச்னைகளும், பிரச்னை விடைகளும் நிறைந்தது.

மீண்டும் வாழ்ந்தால்...?

(கட்டுரைகள்)

மகாகனம்

வ. ச. ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்

பதிப்புரிமை]

கலைமகள் காரியாலயம்

மயிலாப்பூர் : : சென்னை-4

[விலை ரூ. 2/-

முதற் பதிப்பு—ஜூன், 1944.
இரண்டாம் பதிப்பு—செப்டம்பர், 1954.

பொருளடக்கம

		பக்கம்
	பதிப்புரை ..	iii
1.	மீணடும வாழந்தால...	1
2	எஙகள ஊா	27
3	சிரத்தைககு என்ன வேணடுமோ? .	64
4	இனறைப பொழுது போக வேணடுமே! .	73
5.	பஙகாளிக காய்ச்சல ..	92
6.	'நமபராமப்பா' ..	107

PRINTED AT
THE MADRAS, LAW JOURNAL PRESS,
MYLAPORE, MADRAS

பதிப்புரை

தமிழ் மொழியில் இப்பொழுது உண்டாகியிருக்கும் புத்துணர்ச்சி பல வகையாக உருப்பெற்று வெளியாகியிருக்கிறது. இளைஞர்கள், 'பழைய இலக்கிய இலக்கணங்களைப் பயின்று பரம்பரையாக வரும் மரபைக் கற்றுக்கொண்டு எழுதுவதென்றால் நாங்கள் கிழவர்களாகப் போய்விடுவோம் எங்கள் வேகமும் தளர்ந்து போய்விடும். ஊக்கம் இருக்கும் போதே எங்கள் உணர்ச்சியை எழுத்திலே காட்டுவோம்' என்று புதிய மலர்ச்சியை உண்டாக்கினார்கள். முதலில் அவர்கள் முயற்சிக்கு ஓரளவு எதிர்ப்பு இருந்தாலும், தமிழில் எந்த விஷயத்தையும் எழுதுவது, படிப்பது என்ற வழக்கத்தைப் பொதுமக்களிடம் மிகுதியாக உண்டாக்கிய காரணத்தால் அந்த முயற்சியை நாளடைவில் யாவரும் வரவேற்கத் தொடங்கினர். அவர்களுடைய எழுத்துக்களுக்கு இடம் கொடுத்துத் தமிழர்கள் புத்தகம் படிக்கும் வழக்கத்தை அதிகப்படுத்தியதற்கு மூல காரணம் தமிழ்ப் பத்திரிகைகளே ஆகும்.

தமிழ்க் காதல் கொண்டுள்ளவர்கள் பல வகையாகப் பிரிந்து நிற்கிறார்கள். பரம்பரையாகத் தமிழ் இலக்கிய இலக்கணங்களைப் படித்துப் பாதுகாத்துவரும் பண்டிதர்கள் ஒரு வகை, ஆங்கிலம் படித்துப் பெற்ற அறிவைத் தமிழ்த் துறையிலே செலுத்தி இலக்கியங்களை ரஸிக்கும் ரஸிகர்கள் ஒரு வகை; சாஸ்திர ரீதியான ஆராய்ச்சியிலே திறம் பெற்றுத் தமிழ் நூல்களை அலசிப் பார்க்கும் முறையை மேற்கொள்வார் ஒரு வகை; எந்த விஷயத்தையும் தமிழில் எழுத வேண்டும் என்ற துடிப்புடன் நினைப்பதையும் பேசுவதையும் எழுதிக் குவிக்கும் இளைஞர்கள் ஒரு வகை - இவ்வளவு பேர்களுடைய நன் முயற்சிகளுக்கும் இடங்கொடுத்துத் தங்கள் தங்கள் துறையில் உழைக்கும்படி தூண்டிச் சேவை புரியும் வாய்ப்பு இக் காலத்துப் பத்திரிகைகளுக்கு உண்டு ஒரு பத்திரிகையின் விசேஷ மலரை எடுத்துப் பாருங்கள். எத்தனை வகையான மனிதர்கள் எத்தனை வகையான கட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள்

இப்படி வளர்ந்துவரும் தமிழுணர்ச்சி வரவர நல்ல பயனை உண்டாக்கி வருகிறது ஆங்கில மோகம் நிறைந்திருந்த ஒரு காலத்தில் தமிழில் பேசுவதும் எழுதுவதும் அவமானமாகக் கருதப்பட்டுவந்தன. பாரதியார் அந்த எண்ணத்தைத்

தம் சொல்லம்புகளால் தாக்கி இருக்கிறார். அடுத்தபடி, ‘தமிழில் எழுத முடியுமா?’ என்ற சந்தேகம் கனவான்களுக்கு உண்டாயிற்று. ‘தமிழில் எழுதினால் அழகாக இருக்குமா?’ என்ற சந்தேகம் அடுத்தபடி தோன்றியது. இவ்வளவு படிகளையும் தாண்டி இப்பொழுது, ‘தமிழர் தமிழில் எழுதுவதுதான் இயற்கையானது; அழகானது’ என்ற எண்ணம் மேலோங்கி வருகிறது. இதற்கு வேறு சாட்சி வேண்டுவதில்லை; மகா கனம் சாஸ்திரிகளும் ஆங்கில மொழியில் மேதாவிகளாகிய வேறு சிலரும் தமிழில் எழுதிவரும் கட்டுரைகளே போதும்.

மகா கனம் சாஸ்திரியார் முதல் முதலில் தமிழில் எழுதிய போது தமிழ் நாட்டார் வியப்பில் மூழ்கினர்; சிலருக்குச் சந்தேகங்கூட ஏற்பட்டது, ‘சாஸ்திரிகள் ஆங்கிலத்தில் எழுதி யாரோ தமிழ்ப்படுத்தியது’ என்று எண்ணினார்கள். நல்லவேளையாகச் சாஸ்திரியார் தமிழில் பல கட்டுரைகள் எழுதினார்கள். சுய சரிதக் குறிப்புகளையே எழுதினார்கள். பல நூலறிவும் உலக அநுபவமும் தமிழன்பும் உடைய அவர்களுடைய எழுத்தில் அழகு ததும்பி நிற்பது ஆச்சரியமா என்ன?

அவர்கள் எழுதிவந்த கட்டுரைகளைத் தொகுத்துப் புஸ்தகமாக வெளியிட வேண்டுமென்ற எங்கள் விருப்பத்தை அவர்களிடம் தெரிவித்தபோது, சிறிதும் தடையின்றி உடம்பட்டார்கள். அந்த அன்புக்காகக் கலைமகள் காரியாலயத்தார் மாத்திரமல்ல, இதனை வாசித்து இன்புறும் தமிழன்பர்களுங்கூட நன்றி பாராட்ட வேண்டும்.

இதில் உள்ள கட்டுரைகளில், ‘எங்கள் ஊர்’, ‘சிரத்தைக்கு என்ன வேண்டும்?’ என்ற இரண்டும் கலைமகளில் வெளிவந்தவை; ‘மீண்டும் வாழ்ந்தால்...?’ என்பது சுதேசமித்திரன் வாரப்பதிப்பிலும், ‘பங்காளிக் காய்ச்சல்’ கல்கி தீபாவளி மலரிலும், ‘இன்றைப் பொழுது போக வேண்டுமே’ ஆனந்த விகடனிலும், ‘நம்ப ராமப்பா’ ஆனந்த விகடன் தீபாவளி மலரிலும் வெளியானவை. இவற்றைத் தொகுத்துத் தந்தும், சாஸ்திரியாருடைய படத்தை உதவியும் இவ் வெளியீட்டில் ஊக்கங் காட்டிய நண்பரான, சுதேசமித்திரன் உதவியாசிரியர் ஸ்ரீ கே. சுந்தரராகவன் அவர்களுக்கு எங்கள் நன்றி உரியது.

ஜூன், 1944. —பதிப்பாளர்.

மீண்டும் வாழ்ந்தால்?

'மீண்டும் வாழ்ந்தால்.....?' இந்தத் தலைப்பை அநுஸரித்து வியாஸம் எழுதினால் மனக் குதிரையை இஷ்டப்படி தட்டிவிடலாமா? 'ஆறடி உயரம் வேண்டும்; இங்கிலாந்தில் டியூக் வம்சத்தில் பிறக்க வேண்டும்; காளிதாஸனைப் போன்ற கவியாயிருக்க வேண்டும்' என்றெல்லாம் ஆசைகளை வெளியிடலாகாது. நாம் அறியாமல் நேர்ந்த பிறப்பையும் அதன் கால தேச வர்த்தமானங்களையும் மற்றுமல்ல, நமக்கு விவேகம் தோன்றிக் காரியங்களை விடவும் செய்யவும் சுதந்தரம் உண்டான பிறகு நடந்த நிகழ்ச்சிகளைத்தான் கவனிக்க முடியும். அவைகளுள் செய்ய வேண்டியதைச் செய்யாமலும், செய்ய வேண்டாததைச் செய்தும், என்ன என்ன அநுதாபங்களை அநுபவிக்கிறோம் என்பதையும், நேராகவே செய்த காரியங்களை நினைத்து என்ன என்ன திருப்திகளை அடைகிறோம் என்பதையும், உண்மையாக எழுதினால் படிக்கும் இளைஞருக்கு ஒருகால் சிறிது உபகாரம் ஆகலாம்.

நான் பி. ஏ. ஆனவுடன் சம்பாதிக்கத் தொடங்க வேண்டியதாய் இருந்தது குடும்பம் வறியது; பெரிதுங் கூட பி. எல் வகுப்பில் சேர்ந்து உடனே அதை விட வேண்டி வந்தது. ஸர்க்கார் வேலையிலோ பதினைந்து இருபது ரூபாய்க்குமேல் கிடைக்காது. மாயூரத்தில் ஐம்பது ரூபாய் சம்பளத்துடன் முனிஸிபல் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் ஆனேன் அது எனக்கு மனத்திற்கும் பிடித்தது. பிள்ளைகளின் பேரன்பும் படிப்பில் அவாவும் எனக்குத் தக்க வெகுமதிகளாயின. இங்கிலீஷ் சொல்லி வைக்கும்படியான அவகாசம் கிடைத்தவுடன்

அப பாஷையின் கடினமான உசசரிபபைக கற்றுக் கொளள வேணடுமெனறு தீரமானிததேன். தகுநத விததுவானகளின உதவி இலலாததால 'வெபஸ்டா டிகஷனெரி'தான் கதியெனறு அதையே ஓழிந்த பொழு தெலலாம் பாாததுககொண டிருபபேன. அபபொழுது பிடிதத அகராதிப பைததியம மேனமேல அதிகரிதது இனனும விடடபாடு இலலே. ஆனால ஒரு நாளுமே பிளளேகளாவது சிநேகிதாகளாவது எனனிடம் இதைக கற்கவேணடுமெனறு கவலே காடடியதிலலே. எனககும் ஒருவரைக் கடடாயபபடுததிக கேடகுமபடி செயவ தறகு வேணடிய தைரியம் இலலே. இவவளவு காலம் கழிநத பிறகு, 'வீடு போ போ, காடு வா, வா' எனகிற பொழுது, 'ஐயோ, வீண போகிறதே' என்று துககிதது என்ன? கூபபிடடும் தேடிப்போயும சொல லிப் பாாககிறேன கேடபாா இலலே. 'இவருககுததான் பைததியம்! நம்மையும் பைததியமாககப பாாககிறுரே' என்பா போலும்!

இப்போதும் பெருமை

நான் உபாததியாயராக இருந்தபொழுது இப் பொழுதுபோலதான பிளளேகள 'நோடஸ, நோடஸ' எனறு அடிததுககொணடாாகள. பாடமாக நியமிதத புஸ்தகஙகளேப படியாமல் சுருககஙகளேயும் வினு விடை களேயும் உரு ஏற்றுவாாகள. ஜெனரல இஙகிலீஷ் எனறும், இநதியாககு உரிய 'கிராமா' என்றும், 'ரீட' ரென்றும் போடடச சொலலிப புஸதகததை அசசிடடுப் பிரசுரம் செயபவாகள எனககு ஏராளமான பரிசளிதது எழுதச சொலலிப பாாததார்கள. பணம வேணடு மென்கிற ஆசை இருந்தாலும் நான் அதற்கு இணஙகிய திலலே அததகைய புஸதகஙகளால திரவியம் சம்பாதிப பது நற்படிபபுககுக கடும் துரோகம் என்பது என் கொளகை. நலல வேலேயாய ஒழுஙகு தவறுமல்

னின்றேமே என்று இப்பொழுது நினைக்கையில் பெருமையா யிருக்கிறது.

மற்றும் ஒரு பெருமையையும் கூறிக்கொள்ளத் துணிகிறேன். உபாத்தியாயர் தொழிலென்ற இழிவான நிலையை மாற்றவேண்டுமென்று என்னால் முடிந்த வரையில் நடத்தையாலும் வேறு வகையாலும் முயன்றேன். முரட்டுத்தனம் செய்யாவிடினும் நமக்கு என்ன என்று ஒதுங்கி ஓடுவதில்லை. காங்கிரஸ் இயக்கம் முதலான ராஜாங்கக் கிளர்ச்சிகளில் கலப்பதுண்டு. ஒரு சமயம் சென்னைத் துரைத்தனத்தார், மானேஜர்களும் உபாத்தியாயர்களும் சர்க்காருக்கு விரோதமான பொதுக் காரியங்களில் தலையிடக்கூடாது என்று உத்தரவு போடுவதற்கு ஏற்பாடு செய்தார்கள். டாக்டர் மில்லர் தலைமையில் பெரிதும் போராடி அந்த ஏற்பாடு தடைப்பட்டது. அந்த வித்தியா வீரனின் தலைமையின் கீழ்ப் படைஞர்களாய் நின்றவரில் நானும் ஒருவன்.

இரண்டு வருஷத்திற்கு முன்னர், காங்கிரஸ் கவர்ன்மெண்டார் அதுபோன்ற உத்தரவைப் பிறப்பித்தார்கள். எல்லா உபாத்தியாயர்களையுந்தான் பிடித்தது. ராஜ்ய சுதந்தரம் பெற வேண்டும் என்று சிறை முதலிய கடுந் துன்பங்களை ஏற்றுக்கொள்பவர், தமக்கு அதிகாரம் கிடைத்தபோது பள்ளிக்கூடங்களில் அகப்பட்டுக் கொண்டு சிறுமைப் படுவோர்களை ஆதரியாமல், இருக்கும் உரிமையையுங்கூடப் பிடுங்கிக்கொள்வது தர்மமல்லவென்று ஒரு கிளர்ச்சியைத் துவக்கினேன். உபாத்தியாயர் தொழிலில் இருந்தவர்கள் செய்த பிரயத்தனம் கொஞ்சமேனும் பேர்தாதென்று தோன்றிற்று. பள்ளிக்கூடங்களும், படிக்கும் பிள்ளைகளும் மிகவும் அதிகரித்திருந்தாலும், முன்னிலும் கேடானதும் தாழ்ந்ததுமான நிலையில் இருக்கிறார்களென்பது வெளியாயிற்று. இந்த முன்னேற்றத்திற்குப் பிரதிகூலமான சட்டத்தை நிகழும் அட்வைஸரி கவர்ன்மென்

டார் சற்றுத் தளர்த்தி யிருக்கிறார்கள். இது ஏதோ ஒரு விஷயத்தில் திருப்திதான். ஆனால் நம்முடைய ஜனங்களே அதிகாரம் வகிக்கும்பொழுது இதைச் செய்யவில்லை என்பது பெரும் விசனம்.

சட்ட ஞானம்

நான் உபாத்தியாயராயிருந்த காலத்தில் ஒரு குறை உண்டு. மூன்று வருஷ காலம் லா காலேஜில் படித்தேன் படித்தேனென்ற பேரே ஒழிய, ஒரு 'லா' புஸ்தகத்தைக்கூடத் திறந்து பார்த்ததில்லை. வக்கீலாகப் போகாவிடினும் 'லா'வை ஒருவாறு சாங்கோபாங்கமாயப் படித்திருந்தால், நான் பிறகு புகுந்த பொதுக் காரியங்களுக்கு மெத்தப் பிரயோஜனமாக இருந்திருக்கும். ராஜ்ய நீதிகள், முறைகள், வழக்குகள், சட்ட நிர்மாணம், சுதந்தரம் அடையும் வழிகள் இவையெல்லாம் சட்ட ஞானம் உள்ளவருக்கு எளிதில் வரும். இந்த அபிப்பிராயத்தை அநேகர் மறுப்பர். எனக்குக் குருவான கோகலே தமக்குச் சட்டப் பயிற்சி இல்லையே என்று அடிக்கடி வருந்தினது உண்டு. நானும் அதைப் பெருங் குறையாகவே நினைக்கிறேன். என்னை லாயரென்று பிரமித்தவர் உண்டு. தெளிவாயும் கோவையாயும் மனத்தில் பதியும்படியாயும் யாராகிலும் பேசினால், அவர் லாயராகத்தான் இருக்க வேண்டுமென்று பெரும்பாலோர் கருதுகிறார்கள். மற்றத் தொழில் முறைகளில் பேச்சு அப்பியாசம் மட்டுந்தானே? அரசியல் சாஸ்திரம், பொருள் நூல், ஜுரிஸ்ப்ரூடென்ஸ், சுதந்தர சரித்திரம் முதலியவைகளைக் காலேஜில் படித்தவர்கள் 'ராஜ்ய நீதி' என்பதை எளிதில் அறிந்துகொள்ள முடியும்.

பெரிய பிசகு

எனக்கு இன்னமும் நினைக்கும்பொழுதெல்லாம் தாங்க முடியாத பச்சாத்தாபத்தை உண்டு பண்ணுகிற

பெரிய தவறுதல் ஒன்று உண்டு. அந்தக் கடமையைச் செய்யாமல் ஒதுங்கியது கொடிய குற்றமென்றே எண்ணி வருந்துகின்றேன். அதை விவரித்து வெளியாக்கினால் எனக்கு மனம் சற்று ஆறுதல் அடையும். ஏதோ ஒரு பிராயச்சித்தம் போலும் ஆகும். படிப்போர் தயை செய்து உத்தாரம் கொடுக்க வேண்டிக்கொள்கிறேன்.

திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூலில் நான் வேலையாயிருந்த காலத்தில் என் தகப்பனார் திடீரென்று காலமானார். வைதிகத் தொழிலாதலால் மிக்க ஆசாரமாயும் ஒழுக்கமாயும் இருந்தவர்; குடும்பத்தில் முன்னோர் தவறாத சம்பிரதாயத்தை அனுசரித்துத் தாமும் சந்நியாஸம் செய்துகொள்ள வேண்டுமென்று ஏற்பாடு செய்துகொண்டிருந்தார். அந்த ஆசை நிறைவேறாமல் ஒரு நாள் சாயந்தரத்தில் வியாதி ஒன்றும் தோன்றாமலே மாரவலி உண்டாகி ஒரு மணிக்குள் என் மீது சாய்ந்து பேசிக்கொண்டே காலஞ் சென்றார். நான் அப்பொழுதே நம் பழைய வழக்கங்களை விட்டு மதாசாரங்களில் சிரத்தையின்றி இருந்தேன். ஆயினும் என் அபிப்பிராயங்களை ஒரு பக்கம் கட்டி வைத்துவிட்டு அவருடைய உத்தரக் கிரியைகளை ஊரார் புகழச் செய்தேன்.

என் தாய்க்கும் இவ்வாறே ஒழுங்கு தவறாது இறுதிக் கடமையைச் செலுத்திக் கரையேற்றுவேன் என்று அவள் பூரண நம்பிக்கையுடன் இருந்தாள். எனக்கும் அதே தீர்மானந்தான். ஆனால் வேறுவிதமாக முடிந்தது. புனா இந்திய ஊழியர் சங்கத்தில், 1907-ஆம் வருஷம் ஜனவரி மாதம் சேர்ந்தேன். அது முதல் அநேகமாக ஒவ்வொரு வருஷமும் கோகலே என்னை இங்கிலாந்துக்குப் போய்க் கொஞ்சம் சுற்றிப் பார்த்து வரவேண்டுமென்று வற்புறுத்திக்கொண்டே இருந்தார். எனக்கும் அங்கே போவதில் தீவிரமான ஆசையிருந்தாலும் மாத்ரு கிருத்தியத்தை முடிக்காமல் தேசத்தை விட்டுப்

போவது பெரும் துரோகமென்று பயந்து தங்கி விட்டேன். நாலைந்து மாதந்தானே என்றால், 'கப்பல் யாத்திரை செய்தவன் கையால் போட்ட கொள்ளி என்ன உபயோகம்?' என்று சொல்லி ஏங்குவாள். அவ்வளவு உறுதியுடன் இருந்தவன், 1919-ஆம் வருஷத்தில் இந்திய அரசாங்கத் திருத்தங்கள் சம்பந்தமாக மாண்டேகுவின் பிரேரணைகளைப் பற்றிப் பார்லிமெண்ட் கமிட்டியார் இந்தியர்களைச் சாட்சிகளாக விசாரிக்கப் போகிறார்கள் என்றதும், அந்த விஷயத்திலிருந்த அக்கறையால் நானும் போவது அவசியமென்று நிச்சயம் செய்துகொண்டு சீமைக்குப் போனேன். எண்பது வயசாகித் தள்ளாமையுடன் இருந்த என் தாய் ஒரு மாதத்திற்குள் உயிரைத் துறந்தாள். எத்தனையோ தவம் பண்ணிப் பிறந்த மூத்த மகன் கைவிட்டானே என்ற துக்கம் அவள் முடிவுக்குக் கொஞ்சமாயினும் காரணமாக இருந்திருக்க வேண்டும். இப்பொழுதும் அதை நினைத்தால் மஹாபாதகம் செய்தோமே என்கிற விசனம் தாங்கமுடியாமல் வேதனை செய்கிறது. சாட்சி சொல்லியதால் என்ன பெரிய தேசோபகாரம் செய்தோம்! காத்துக் காத்துக் கடைசியில், 'பெற்ற தாய்க்கு உதவாமற் போனது பிசகுதான்' என்று இப்பொழுது தோன்றுகிறது.

ராஜீயப் பிரபஞ்சம்

முப்பத்தேழாம் வயசில் பள்ளிக்கூட ஆசிரியர் வேலையை விட்டுப் புனாவில் கோகலே ஸ்தாபித்த இந்திய ஊழியர் சங்கத்தில் சேர்ந்தேன். பந்துக்கள், நண்பர்கள் எல்லோரும் கூடாதென்று தடுத்தார்கள். அந்த மாற்றம் நன்மையாக முடிந்ததா? தீமையாகக் முடிந்ததா? முப்பத்து நான்கு வருஷத்திய அநுபவத்தையெல்லாம், ரூபாயைப் பூமியில் தட்டிச் செல்லுமா செல்லாதா என்று தீர்மானிப்பதுபோல்

தீர்மானிக்க முடியுமா? சில காரணங்களுக்காக இப்படியும், சில காரணங்களுக்காக அப்படியும் சொல்ல வேண்டும்போல இருக்கிறது. எனக்கே பெருத்த சந்தேகந்தான்! நல்ல உபாத்தியாயர் என்று பேர் வாங்கி எவ்வளவோ பிள்ளைகளின் பிரீதியை அடைந்து கற்ற வித்தையை வஞ்சனையின்றிப் பிரசாரம் செய்வதைக் காட்டிலும் நம் ஆத்மாவுக்கு மேன்மையான நலம் என்ன? தேசத்திற்குத்தான் உயர்வான சேவை என்ன? உபாத்தியாயராகவே இருந்தால் இவ்வளவு மாணுக்கர், இவ்வளவு பரீக்ஷை, இவ்வளவு 'பாஸ்'கள், இவ்வளவு பாடம் சொல்லிக் கொடுத்தது, இவ்வளவு பேருக்கு உத்தியோகம் என்று கணக்கிட்டுத் திருப்தியடையலாம். இந்த அரசியற் பிரபஞ்சத்திலோ, பேசியது, தீர்மானப் பிரேரணை பண்ணியது, வோட் கொடுத்தது, மகாநாடுகளில் யுக்தி சொல்லியது, அதிகாரிகளிடம் ரகசியமாயும் பகிரங்கமாயும் தேச லாபத்தைப் பேரம் செய்தது, இவற்றையெல்லாம் எந்தத் தராசில் நிறுக்கிறது? விலை எப்படி மதிக்கிறது? லாப நஷ்டம் எவ்வகையில் தீர்க்கிறது! என் கோழை மனத்திற்கு இவை பெரிதும் கெடுதலாய்த்தான் படுகின்றன.

பொதுவாக என்னுடைய வியாபாரங்களால் தேசத்திற்குக் கேடு நேர்ந்திருக்குமென்று மனம் பயந்து கொந்தளிக்கிறது. நானே பிடித்தடித்து அகப்பட்டதையெல்லாம் மேலே தூக்கிப் போட்டுக்கொண்டு, எப்படியாகிலும் முன்னே நிற்கவேண்டுமென்கிற பேராசை பிடித்தவனல்ல. தீராதென்றால்தான் செய்வது வழக்கம். மற்றவர் எனக்கு உனக்கென்று எடுத்துக் கொண்டவை போக, பாக்கி நின்றதைத்தான் அநேகமாக ஏற்றுக்கொள்வேன். எந்த வேலையையும் கூப்பிட்டுக் கொடுத்தால்தான் தொடுவேன். அவ்வளவு மனத்திடம் அற்றவன். நல்லது செய்ய வேண்டும்

என்ற அவாவைக் காட்டிலும் நம்மால் கெடுதல் நேராமல் இருக்க வேண்டுமே என்கிற கவலைதான் அதிகம். நல்லோர் நம்மை மெச்சாமற் போனாலும் நிந்தியாமல் இருந்தால் பரம க்ஷேமம் என்பதே என் உறுதியான கொள்கை. இதை நன்கு அறிந்துதான் பெரும் காரியங்களை நான் ஒருவனாக நின்று ஏற்றுக் கொண்டதில்லை. முன் நின்று தலைமை வகித்து நடத்த முடியாதவன் என்ற பேர் வாங்கினேன். பன்முறை அவகாசம் கிடைத்தும் தலைமை வேண்டாமென்று மறுத்திருக்கிறேன். இவ்விஷயத்தில் நான் துக்கிக்க வேண்டியதே இல்லை.

என் ஸ்வபாவம்

இதை ஒட்டிய வேறொரு தோஷமும் உண்டு. பத்திரிகைகளிலாவது, பேச்சிலாவது யாராகிலும் என்னை நிந்தித்தால் உடனே போரில் கலந்து பதில் சொல்வது, எழுதுவது என்ற வழக்கம் என்பால் இல்லை. ஏதாகிலும் தவறுதலாய்ச் சொல்லியிருந்தால் அதை மட்டும் சரியாகத் திருத்துவேன். வெகுகாலம் இதனால் மிகவும் துயரப்பட்டிருக்கிறேன். சில காலத்துக்கு முந்தி சில வருஷங்களுக்குள் ஒரு நிகரற்ற தேசாபிமானி ஒரு புஸ்தகம் எழுதினார். அது லக்ஷக்கணக்கான பிரதிகள் வெளியாகியது அதைப் படியாதவர் குறைவு அதில் என்னை விஸ்தாரமாகக் கண்டித்துக் கேவலமான அவமதிப்பிற்கு உள்ளாக்கியிருக்கிறார். வெகு நேயர்களுக்கு இது அநியாயமென்று தோன்றி என்னைப் பதில் எழுதும்படி தூண்டினார்கள். எனக்கு வேண்டாம் என்றே தோன்றுகிறது. நமக்குப் பின்னர் உதிக்கும் சிறுவருங்கூட அந்தப் புஸ்தகத்தைப் படித்து 'சீ' யென்று துப்புவார்களே என்று ஒரு வேளை அச்சமுண்டாயினும் நமக்கு விமோசனம் இல்லை என்றே பொறுத்திருக்கிறேன் புகழ்ச்சி, இகழ்ச்சி இரண்டையும் ஒன்றாகப் பாவிக்கவேண்டும் என்ற கீதையின்

உபதேசத்தை ஒட்டியதல்ல இந்த எண்ணம்! அதில் அளவற்ற நம்பிக்கையும் ஆசையும் உண்டுதான் ஆனால் அந்த உயர்நிலை எங்கே, நான் எங்கே! நான் தவறிய தாக எழுதுவதைப் படிப்பவர் எண்ணிக்கை குறைவு. அவர்களுள் நான் சொல்வதை நம்பி மன்னிப்பவர் பின்னும் குறைவு. அரசியல் என்கிற உலக வியாபாரத் தில் புகுந்த பிறகு வெட்கம், ஸ்மரணம் என்பது கூடாமையாயிருத்தல் கூடாது. மனம் செருப்புத்தோல் போன்றதாக வேண்டும். இல்லாவிட்டால் நரகந்தான்.

1923-ஆம் வருஷத்தில் நான் ஒரு சமயம் மூன்று ஜன்மத்தில் அநுபவிக்க வேண்டிய துன்பத்தை அநுப வித்தேன். ஆஸ்திரேலியா முதலிய குடியேற்ற நாடுக ளில் சஞ்சாரம் செய்து திரும்பி வந்ததும், பிராணனுக் குப் பிராணனை பந்துக்களும் சிநேகிதர்களும் ஒருங்கு கூடி நான் அங்கெல்லாம் பேசினதும் செய்த தும் தேசத் துரோகமென்றும் மானக் கேடென்றும் இழிவாகத் திட்டித் தாங்களும் அழுது என்னையும் அழச் செய்தார்கள் அந்தச் சம்பவத்தை நினைக்கிற பொழுதெல்லாம் என் வயிற்றைக் கலக்குகிறது என் பேரில் குற்றம் இல்லை என்று திடமாய்ச் சொல்வேன். என்ன செய்கிறது? களவு செய்யாவிட்டாலும் பதின் மடங்கு சிக்ஷை கிடைத்துவிட்டது. இந்த அவதூறுக் கும் இது வரையில் நான் சமாதானம் சொன்னவனல்ல. மனம் அறியத் தூஷித்தவர் பேரில் எனக்குத் துவேஷ மும் இல்லை. ('Love thine enemies') 'விரோதிகளிட மும் அன்பு காட்டு' என்கிற அளவு எட்டாவிட்டாலும் எதிரிகளுக்கு நான் கேடு விரும்புவதில்லை.

ஸாமோபாயம்

'வணக்கம் வெல்லும்' என்பதை நான் பல முறை அநுபவத்தில் கண்டிருக்கிறேன். இளமை முதலே கோபம், பொறாமை போன்ற துர்க்குணங்களை வெளிக்

காட்டாமல் அழுத்தியவன் நான். தென் ஆப்பிரிக்காவுக்கு ஏஜண்டாக அலுவல் பார்க்கப் போயிருந்த பொழுது தொடக்கத்தில் சிறிது காலம் வெள்ளையர்களிடம் அவமானமே கிடைத்தது. அதையெல்லாம் பொறுத்துக் காலக்கிரமத்தில் நான் மதிக்கத் தக்கவனென்று அவர்கள் மனத்தில் அநுகூல புத்தியை உண்டு பண்ணினேன்.

இம்மாதிரி அநுபவம் வெள்ளையரிடமிருந்து மட்டுமல்ல; நம் ஜனங்களிடமிருந்தும் பெற்றதுண்டு. வெளிநாட்டில் குடியேறியிருக்கும் இந்தியர்களுக்கு மிதவாதிகளிடம் மதிப்பு மிகவும் குன்றியது. இது போதாதென்று ஸர்க்கார் ஆஸாமி என்று நெற்றியில் முத்திரை போட்டுக்கொண்டும் போனேனா! கேட்பானேன்! கானடாவில் வான்கூவர் என்கிற பட்டணத்தில் பஞ்சாபைச் சேர்ந்த சீக்கியர் பெரும்பாலோர் முரட்டுப் போவழிகள். நான் ரெயிலை விட்டு இறங்கும்பொழுது தாங்கள் ஒருவர் கூட வராமல் ஒரு வெள்ளைப் பாதிரியை மட்டும் அனுப்பி, 'இங்கே இடங்கொடோம் தங்காமல் அப்படியே போகலாம்' என்ற செய்தியைச் சொல்லும்படி செய்தார்கள். என்னுடன் இருந்த ஸெக்ரெட்ரி பாஜ்பை (இப்பொழுது அவர் ஸர் கிரிஜா பாஜ்பை) "இதென்ன சங்கடம்? போய் விடலாமே" என்றார். நான் ஸாமம் என்கிற மருந்தைப் பிரயோகம் செய்து பார்ப்போமென்று அவ்விடம் இரண்டு நாள் தங்கி முக்கியஸ்தர்களைத் தனித்தனியே பார்த்து வசப்படுத்தினேன். பிறகு அவர்கள் குருத்துவாரத்தில் கூட்டங் கூடிப் பிரசங்கத்தை மரியாதையாய்க் கேட்டு என்னுடன் உறவாடி என் வேலையை அதாவது தங்கள் வேலையைத்தான் சரிவர முடித்துக்கொண்டார்கள். இதற்குச் சில ஆண்டுகளுக்குப் பிறகு கீனியாவில் நம் ஜனங்கள் என்னைக் கண்ணுற்றுப் பார்க்க மாட்டோமென்று ஒரே பிடிவாதம் பிடித்தார்கள். அங்கும் மிதவாதி, சர்க்கார் உத்தியோகஸ்தன் என்பதுதான் நான் செய்த பாவம்.

நான் போகும் முன்னமே பத்திரிகையில் நன்றாய்த் திட்டி இவரைச் சற்றும் கவனியாது திருப்பி யடிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண் டிருந்தார்கள். வெள்ளையர்களும் ஏறக்குறைய அப்படித்தான். அப்பொழுதும் பணிந்து நயந்துதான் முடிவில் இரு திறத்தாரின் உதவியையும் பெற்று உத்தேசத்தைச் சாதித்தேன்.

இப்போது நினைத்தாலும்...

ஆனால் எப்பொழுதுமே தணிந்து போனேன் என்பதில்லை. முரணின சமயங்களும் உண்டு. சில சமயம் நான் செய்தது பிழையென்று பின்னர் வருத்தப்பட்டிருக்கிறேன். இப்போதும் அச் செயல்களை நினைத்தால் ஏன் அவ்வளவு புத்தி கெட்டுப் போயிற்று என்று துக்கமாயும் வெட்கமாயும் இருக்கிறது. 1922-ஆம் வருஷத்தில் டொமினியன் பிரயாணத்திற்கு முன் லார்ட் ரெடிங் ஸிம்லாவில் எனக்காக ஒரு பெரிய விருந்தளித்தார். மேன்மையான சபை; வைஸ்ராய் மிக்க உசிதமாயும் என் காரியத்திற்கு அநுகூலமாயும் பேசினார். இதற்கு உத்தரம் கொடுக்குங்கால், சமயம், சந்தர்ப்பம், உத்தேசம் எல்லாவற்றையும் ஒரு பக்கத்தில் ஒதுக்கி, ஏதோ இந்த அரசாங்கத்தைத் தாழ்த்தியும், உயர்ந்த பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் இந்தியர்களுடைய விசுவாசத்தை முற்றும் இழந்து விட்டார்களென்று விசனித்தும் பேசினேன். சபையோருக்கு அதிருப்தி உண்டாயிற்று. எனக்கும் 'பார்ப்பான் புத்தி பின் புத்தி' என்றாற்போல், பேச்சு முடிந்ததும் என்ன செய்தோம் என்ற பச்சாத்தாபம் மேலிட்டது. வைஸ்ராய் மறுநாள் வெகு நாசுக்காய், "மனத்தில் எந்த ராஜாங்க முறைத் தவறுதலை நினைத்து அவ்விதம் பேசினீர்கள்?" என்று கேட்டார். ஏதோ தென்பாய்ச் சொல்லி வெளிவந்தேனே ஒழிய மனத்திற்

குச சமாதானமே இலலை ஆாதா மூா புதிதாய் வந்திருந்தாா. அவா மடடும், "அந்த விஷயம் சொலல வேணடியதுதான். நீா சொலலாமல யாா சொலவாா? இச்சமயததை விடடால வேறெபபோது இததகைய சமயம் கிடைககும்?" என்றெல்லாம் சிலாகிததே விவரிததாா. ஆயினும் எனககுமடடும் அது தகாதநடததை எனறே தோனறுகிறது. கொஞ்ச காலததிறகுப் பிறகு ஸா மாலகம ஹேயலி டெலலியை விடடுப பெரிய வேலைககுப போனாா. விடை கொடுப்பதறகாக ஒரு விருநது ஏறபடடது. என்னை அககிராசனம் வகிகக நியமிததாாகள. அபபொழுதும எனககு ஏதோ நாககில சனி பொலலாததனம் செயதான். ஸிவில ஸாவிஸகாராாகளை வேடிககையாகக கடிநது தூஷிததேன. பேசும்பொழுதே, 'பிசகுதான் பணணுகிறோம்; ஆனால இந்தச சமயம் வாயததை விடககூடாது' எனறு ஏதோ அக காலததில அநத ஸாவிஸ பேரில இருந்த கோபததைப போககிககொணடேன. அவாகள ஒனறும காடடிககொளளவிலலை. ஆனால என் நெஞசம் குற்றமுள்ளதாதலால குறுகுறுவென்றே தவிததுககொண டிருந்தது.

கீனியாக் கேடு

சாதாரணமாயக கோபமிலலாதவருககுக் கோபம் வந்தால ஒரு சமயம் ரௌததிராகாரந்தான். கீனியாவில குடியேறியிருககும் நம் ஜனஙகளின கக்ஷியை எடுதது வாதிபபதற்காக இந்திய சடடசபை இந்தியாகளாகச சோநது, தஙகள பிரதிநிதிகளாக, பி எஸ. காமத், ஜமனாதாஸ தவாாகாதாஸ, நான ஆகிய மூவரையும இஙகிலாநதுககு அனுபபினாாகள. அபபொழுது பாலடவின் முதன மந்திரி; டயூக ஆப டெவன்ஷையா கலோனியல மந்திரி ஆனால அவா விசேஷமாய ஒனறிலும் தலையிடடுக கொளளவிலலை. எலலாம் அவா காரிய

தரிசி ஸா ஜேம்ஸ் மாஸ்டாடன் ஸ்மித என்பவா தாம கடததிவந்தாா. இந்தியா ஆபீஸில லாாட பீல காரிய தரிசி ஏால வின்டாடன் உதவிக காரியதரிசி. இவவிருவரும் முதலில நம் கக்ஷியா யிருநதவாகள கொஞசம் கொஞ்சமாய அந்தக கினியா வெளளையா கக்ஷியை ஓடடிப பேசத தொடஙகினா. இவாகளோ ஆயுதஙகள சோத்து 'டரில' முதலானதெலலாம் பழககிக கொணடு இந்தியா சாாபாகத தீாபபாருமானல போராடுவோமே தவிரக கீழ்பபடிய மாடடோமெனறு முரடடுததனம் பணணினாாகள. மேலும் தஙகள ஸ்திரீகளுககும் மககளுககும் கேடு நேரிடும் எனறு பாாலிமெனடு அஙகததினாகளின ஸதிரீகளுககுப பயததை உணடாககி அஙகததினாகளை யெலலாம் குழம்பும்படி அடிததுவிடடாாகள. நாஙகள மூவரும் கினியாவிலிருநது வநத இநதியாகளும ஆதரவறறவாகளாய அஙகும் இஙகும ஓடி அலைநதோம்.

அப்பொழுதுதான், நம் பணததைப போடடுக கடடி ஒரு பெரிய ஆபீஸை வைததும அதில அளவு இலலாமல சம்பளஙகள கொடுததுப பெரிய பெரிய உததியோகஸதாகளை நியமிததும் இவாகள, கஷடததை வநதபொழுது நம்மைப பறககவிடுகிறாாகளே எனகிற துககம் மனததைப புணணாககிறறு. நாஙகள படட வருததததையும் சிறிய தனததையும இப பொழுது நினைததாலும் தாஙகவிலலை. எஙகள கோரிக்கையை ஏற்றுககொளளாமல கவானமெனடாா முடிவான உததரவு போடடுவிடடாாகள. ஸா ஜேம்ஸ மாஸ்டாடன் ஸமித வெகு திறமை வாயநதவா. எனனிடததில அந்தரஙகமாக, "உஙகள கக்ஷி நியாயமாயிருந்தாலும் மநதிரிமாா சபையில ஏறாது. இந்தியா டொமினியன் ஆனலதான் அநத மந்திரி சிபாாசுகள மற்ற மந்திரி சிபாாசுகளுககுச சமமாகும" என்று சொன்னா நாஙகள தததளிப்பதைக கணடு ஸா ஆலி இமாம் ஒரு பேருதவி புரிந்தாா அவா ஹைதராபாத்

நிஜாமுககுப் பேரார திரும்பவும் கிடைகக வேணடும் என்பதறகாக முயறசி செயதுகொண டிருந்தார. அவருககும் காரியம் கைகூடாமல இடையூறுகள நேரநதன. எஙகளுககு ஒரு பெரிய தேநீா விருநது வைதது அநேக வெள்ளையாகளையும் இநதியாகளையும் அழைததார. பெருமை பெறற ஸதிரீகளும் புருஷா களும் கூடினாகள. நான் ஒரு நாளும் இலலாதபடி எஙகள துககஙகளை யெலலாம் வாயால தற்சமயம் சொன்னால முற்றும் சரி வராது என்று பயந்து ஒரு வியாசததில அமைதது, காகிததில எழுதியே படிதது விட்டேன ஒரு க்ஷணததில பொலலாதவனானேன. சிநேகிதர் பலா கோபஙகொணடு கைவிட்டாாகள. பாலடவின கவான்மெனடாருககு வெகு ஆததிரம. அபபொழுதுதான வின்டாடன் துரை எனனைப பாாககமாட்டேனென்று நிராகரிததார. திரும்பி இந்தியாவுககு வந்த பிறகுகூட எனககுக கோபம் தெளியாமல கொடிய சொற்கள அமைந்த அறிககை வெளியிட்டேன்; பல இடஙகளில பேசினேன இப பொழுதுஙகூட எனககு அந்தப புண ஆறவிலலை. ஆகையால இநதக கீனியா கிளாச்சியில என் வழககத திறகு மீறிக கடுமை காட்டியும் கொஞசமேனும் பசசாத தாபமே இலலை. இந்தக கீனியா அநியாயம் பொறுககக முடியாமல லாாட ரெடிஙகூட ஒரு வாாததை ஒழுஙகு தபபிச சொனனாரென்று லாாட பீல கையால ஒரு குட்டுபபட்டாா.

மிதவாதக் கட்சி

1918-ஆம் ஆண்டில இந்திய அரசியல உலகததில பெரிய கலக்கம் வந்து அலலோலகலலோலப்பட்டது மாணடேகு செம்ஸபோாட சோந்து சில பிரேரணைகளை, நம அரசாட்சி முறையைத திருததுவதறகாக வெளியிட்டாாகள. அவை நம்முடைய தலைவாகளுள

சிலருக்குப் பிடித்தன; சிலருக்குப் பிடிக்கவில்லை. வாதம் முதிர்ந்தது. கக்ஷிகள் பிரிந்தன. காங்கிரஸ் துண்டு பட்டது. ஸ்ரீமதி பெஸண்ட், பண்டித மாளவியா முதலியோர் காங்கிரஸில் சேர்ந்து மாண்டேகுவின் உத்தேசங்கள் போதாவெனத் தீர்மானித்து விடுவார்களென்று தோன்றியது. டின்ஷா வாச்சா, ஸுரேந்திர நாத் பானர்ஜி முதலியோர் தேசத்துக்குப் பெருங் கேடு வரும் என்று பயந்து காங்கிரஸை விட்டுப் பிரிந்து புதுக் கக்ஷியொன்றை, மிதவாதிகளென்று பெயர் வைத்துக்கொண்டு பம்பாயில் கூட்டுவதாக நிச்சயித்தார்கள். அப்பொழுது நான் இந்திய ஊழியர் சங்கத்தின் தலைவனாக இருந்தேன். சங்கத்தாரை எந்தப் பக்கத்தில் அழைத்துச் செல்லுகிறது? நானோ மாண்டேகுவுடன் நெருங்கிப் பழகி அவர் பிரேரணைகளை அங்கீகரிக்க வேண்டும் என்று ஊரில் விவகரித்துக் கொண்டிருந்தேன். காங்கிரஸைத் துண்டிப்பதில் பிரீதியில்லாதது மட்டும் இல்லை. அது கடும் பாவம் என்றுகூட எண்ணினேன். அதனால் ஏற்பட்ட தர்ம சங்கடம் இவ்வளவென்று வர்ணிப்பது அசாத்தியம்! என்ன செய்வது என்று சங்கத்தின் நண்பர் அனைவருக்கும் தத்தம் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வேண்டுமென வேண்டுகோள் ஒன்று அனுப்பினேன். வந்த விடைகளையெல்லாம் கவனித்துப் பன்முறை யோசனை செய்து மிதவாதக் கக்ஷியில் சேர்ந்தோம். பம்பாய்க் கூட்டத்துக்குத் தேவையான உதவியும் செய்தோம். இப்படித் தீர்மானித்தது சரிதானென்பதே இப்போதும் உள்ள என் உறுதியான நம்பிக்கை. ஆனால், நான் காங்கிரஸ் சபைக்குப் பிறகுங்கூட இரண்டு தடவை போனேன். பிரயோஜனப்படவில்லை. மிதவாதத் தலைவருக்கு என் மேல் சந்தேகம் உண்டாயிற்றே தவிர, காங்கிரஸ் உறவு முன்போல் நிற்கவில்லை. அதி சீக்கிரத்தில் அந்தச் சபை, பழைய வழிகளை விட்டகன்றது. எனக்கு அதன் சம்பந்தம் அநுசிதமென்று தெரிந்தது.

கோகலே இருநதால காஙகிரஸ் இவவாறு மூரட்டு
மாரககததில செனறிரா'து என்றும் அவவாறு செனறு
லும அவா அதை விடடு விலகியிருககமாடடாரென்றும்
சொலவாா உணடு. இறநதவரைபபற்றி அபிப்பிராயம
வேறுபடுவது வழககநதான. இஙகு விஸ்தரிபபது
நோமையலல எனககு எளளளவேனும் இநத விஷயத்
தில அறுதாபமே இலலை.

குற்றச் சாட்டு

இந்திய சாககாருடைய பிரதிநிதியாகவும், தூத
னுகவும தெனனுபபிரிககாவில அதன ஏஜணடாகவும்
சிறசில சமயஙகளில நான் உழைததேனென்று என்
மேல அநேக நணபா குற்றம சாறறுகிறாாகள. இவா
களில முதனமையானவா காலஞ்சென்ற சாாலி
ஆணடரூஸ, ஒரு தடவை தெனனுபபிரிககாவிலும ஒரு
தடவை இஙகிலாநதிலும் எனனுடன் வாதாடி ஏதோ
நல வழியை விடடு வழுவினவனைச சிகூஷிபபதுபோல
விம்மி விமமி அழுது என்னையும் கணணீா விடும்படி
அடித்தாா நேயாகள இந்தத தகராறைச சற்று
ஊனறிப பாாகக வேணடும். ஆணடரூஸைபபோல,
இநதியா இருககுமிடம் யாவற்றையும் சுறறிப பாாதது
அவாகள சுக துககஙகளை ஆதியோடந்தமாக அறிநதவா
வேறு யாரும் இலலை. இநதியாவில வைஸ்ராய
முதலான அதிகாரிகளையும, சீமையில மநதிரிகள ஆாச
பிஷப போனற பெரியோாகளையும, மறறத தேசஙகளில்
அந்த அநத ஊாத துரைததனததாாகளையும் கிணடிக
கிணடிப பேசி யிருககிறாா கீனியாவுககும் தெனனுப்
பிரிகாவுககும நாலைந்து தடவை போயிருககிறாா மற்ற
இடஙகளை இரணடு முறையாவது பாாததிருப்பாா.
வெளளையா யாராகிலும் கறுபபு நிறமுளளவா சாா
பாகப பாடுபடடால பரம தயாறு என்கிற வியாதி
உணடு. ஒவவோரிடததில் அவமானமும் கிடைககும்.

அதிலும் பாதிரியா யிருந்தவா ஆகையால, தெயவ பகதி உள்ளோரிடம் விசேஷச சலுகை உடையவா; நலலவா; ஏழைமையை வேணடுமேனறே ஏறறுக கொணடவா.

அதிகாரிகள அவருடன சமபாஷிததால அநேக சமாசாரஙகளை எளிதில தெரிந்துகொளளலாம். வெளிபபடையாயப பேசுவாா. பததிரிகைகளிலும் எழுதுவாா. நாரதரைபபோல் அவருககும் எஙகும் தடையிலலாமல பிரவேசம் உணடு; ஆனால கலகம் செயவதிலலை கூடிய வரையில விரோதிகளைக கூட்டி வைபபாா ஆனாலும் அவருடன லோகாபிராமமாயப பொதுப பேசசுககளைப பேசலாமே யொழிய, நெருஙகிப் பிடித்துத் தஸதாவேஜுகளைப பெறறும் கொடுத்தும, ஒரு கவானமெனடாரை மற்றொரு கவான்மென டாருடன விவகாரம் கலககுமபடியாகச செயய முடியாது. நிபந்தனைகள ஏறபடுததிககொளளவாவது, வடட மேஜையில உடகாாநது அபிபபிராயஙகளை அதிகார வாககததினரிடம அறிவிககவாவது முடியாது. நலலது, பொலலாதது எனபதைக காடடி ஜனஙகளுடைய எணணஙகளை ஒரு பககம திருப்பி, அநுகூலமோ பிரதிகூலமோ பணணி வைககலாம.

நாஙகள கேப டெளன ஒபபந்தம் செயது அதை மகா ஜனஙகள அஙகீகரிபபதறகு மகாதமா, தீனபநது இவாகள ஆசீாவாதம் அவசியம தேவை. அது கணடு தான், முதலில கேப டெளன் ஒபபநதம் முடிந்ததும், அசசு மூலம் பிரசாரம் செயவதறகு முன், நான ஒரு பிரதியை ரகசியமாக மகாதமா காந்தியிடம் காடடினேன. அவரது சம்மதியுடன்தான அது வெளியிடபபடடது. மானடேகு சீாதிருததஙகள சடடமாக விளமபரம் ஆவதறகுமுன் இவவாறேதான் எஙகேயோ ரெயில பிரயாணம செயதுகொண டிருககையில, அடி முதல நுனிவரையில படிததுககாடடி, அவா குறறமிலலை

என்று ஆமோதித்த பிறகுதான் பத்திரிகைகளில் வெளியாயின. இதற்குப் பிறகு ஜம்னுதாஸ் த்வாரகாதாஸ் அவரைப் பிரதிகூலமாய்த் திருப்ப முயன்றும் முடியாமல் என்னைக் கண்டு, "நீங்கள் முந்திக்கொண்டீர்கள் போலும் மோசம் போனோம்" என்று பரிகாசமாய் வருத்தப்பட்டார். சர்க்கார் தங்கள் ஏஜன்டை ஒரு காரியத்தில் அமைத்தால் நான்கெல்லை கட்டி ஒரு சங்கேதக் பத்திரம் கொடுப்பார்கள். அதில் எழுதியிருப்பதற்கு மாறாக ஏஜண்ட் செய்யக்கூடாது. அடிக்கடி தந்தி யடித்துத் தெரிந்துகொள்ள வேண்டும்! தும்ம வேண்டுமானாலும் தந்தி மூலமாய் உத்தரவு பெற்றே தும்ம வேண்டும். இத்தகைய நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாகி, அரசாங்கத்தாருக்குப் புத்தியுள்ள ஒரு கருவியாய் நின்று காரியங்களைச் சாதிக்க, தீனபந்து ஆண்ட்ரூஸ் போன்ற சந்நியாசிகள் தகுந்தவரல்லர். நான் மட்டும் அத்தகைய உத்தியோகத்திற்குத் தகுந்தவனா என்றால், அதைக் கொஞ்சம் விரிவாகவே ஆராய வேண்டும்.

உத்தியோக முறைக்குத் தகுதியில்லை

வேலைகளில் உத்தியோகப் பற்றுள்ளது, உத்தியோகப்பற்றற்றது என்று ஸ்தூலமாய் இரு வகை உண்டு. நாம் இப்பொழுது ஆராய்வதற்குப் பின் வருமாறு பிரித்துக்கொள்வோம். நிர்ணயத்துடன் இந்த இந்தக் காரியங்கள் இன்ன இன்ன வேளையில் நடக்க வேண்டுமென்று ஏற்பட்டிருந்தால் அவை உத்தியோகப் பற்றுள்ளவை என்றும், அப்படி ஒரு கற்பனை இல்லாமல் அவரவர் இஷ்டப்பட்ட வேளையில் இஷ்டப்பட்ட காரியத்தைச் செய்யலாமென்றால் அவை உத்தியோகப் பற்றற்றவை என்றும் சங்கேதகம் வைத்துக்கொள்வோம். முதல் வகுப்புக்கு முக்கிய உதாரணங்கள் சர்க்காருக்கும் சர்க்கார் போன்ற ஸ்தாபனங்களுக்கும் அடங்கிய உத்தி

யோகங்கள். இரண்டாவது வகுப்புக்கு உதாரணம் காங்கிரஸ், காங்கிரஸ் போன்ற கண்டிப்பான வரம்புகள் கட்டாத ஸ்தாபனங்களின் கீழ் இருக்கும் வேலைகள்- உத்தியோகப் பற்றற்ற வேலைகளில் தத்தம் மனச் சாட்சியும் சாமர்த்தியமுமே அவரவர் செய்யும் காரியங்களுக்கு அளவு. அதுவும் தொழிலாயில்லாமல் சிறிது நேரந்தான் உழைப்பதென்றால் ஒழுங்கானவர் இருந்தால் காரியமாகும். கொஞ்சம் ஒழுங்கில்லாதவராயிருந்தால் வேலை ஊழல், பாக்கி ஊழல் எல்லாம் உண்டாகும். முக்கால் வாசிப் பொதுக் காரியம் பெரிதாய்த் துவக்கினால், இன்னது முக்கியம், இன்னது இரண்டாம் பக்ஷம், இன்னாரைச் சேர்க்க வேண்டியது, இன்னாரை நீக்க வேண்டியது, இவருக்கு இந்த வேலை, அவருக்கு அந்த வேலை என்றெல்லாம் கொஞ்சம் அதிகாரம் காட்டியும் காட்டாமலும் தந்திரமாய் நடத்தக் கூடியவர் கிடைப்பது அரிது. உத்தியோகப்பற்றுள்ள விஷயங்களில் இரண்டாந் தரம் மூன்றாந் தரப் பேர்வழிகளும் பேர் சொல்லிவிடலாம். உத்தியோகப் பற்றற்ற பிராந்தியத்தில் முதல் தர மனிதரே தேறுவார். தலைவன் சீக்கிரம் தீர்மானம் செய்ய வேண்டும்; நிறைவேற்ற வேண்டும். தர்மம், அதர்மம், முறை, பிசகு என்று யோசனை செய்ய அவகாசம் இராது. 'ஸம்சயாத்மா விநச்யதி' என்பது வட மொழி வசனம். நேரான மொழி ஆங்கிலத்திலும் உண்டு: 'தயங்குவோர் இறப்பர்' என்று அர்த்தம்.

பம்பாயில் பிரோஸ் ஷா மேத்தா என்ற பெரியவர் இருந்தாரே, அவரை மற்றவர் அநேகர் எஜமானரென்று கொண்டாடிக் கீழ்ப்படிந்தார்கள். எவ்வளவோ தடவை பம்பாய்க்கு அவரே தலைவர் என்று கோகலே புகழ்ந்திருக்கிறார். அம் மாதிரி முகவெட்டு உள்ளவர்களை உத்தியோகப் பற்றுள்ள வர்க்கத்தில் போடுவது வியர்த்தம். கோகலேக்கும் அந்த நிர்வாக சக்தி இருந்தது. மகாத்மா காந்திக்குச் சம்பூர்ணமாக இருக்கிறது.

ஸ்ரீமதி பெஸன்டுக்கு நாம் சொல்ல வேண்டுமா? எனக்கோ நாட்டாண்மை நடத்துவதற்குத் திறமை போதாது. இதை நான் நன்கறிந்தேன். ஆதலால், தக்க தலைவருக்குப் பின் நின்று கையாளாய் உதவுவேன். அதற்கு மேல் ஆசையும் இல்லை. எப்பொழுதாயினும் அந்த ஆசை உண்டானால் சீக்கிரத்தில் அடக்கி விடுவேன்.

ஆனால் சர்க்கார் உத்தியோகத்திற்குத் தகுதி உண்டா ஆசையுண்டா என்றால் அதுவும் அவ்வளவாக இல்லை. லண்டனில் இந்தியா கௌன்ஸிலுக்கு அழைத்தார்கள். லார்ட் வில்லிங்டன், 'கௌன்ஸில் ஆப் ஸ்டேட்' தலைவர் பதவி கொடுத்தார். வேண்டாம் என்று நான் கூறிவிட்டேன். தென்னாப்பிரிக்கா ஏஜண்டாகப் போனது மகாத்மா காந்தியின் தூண்டுதலால். லார்ட் இர்வினும், ஸர் முகம்மது ஹபிபுல்லாவும் சேர்ந்தார்கள். தென்னாப்பிரிக்காவில் இன்னும் ஒரு வருஷமாவது இருக்க வேண்டும் என்று மூவரும் வற்புறுத்தினார்கள். எனக்கு அவ்வளவு பேராசை இல்லை. இங்கேயும் வைஸ்ராயினுடைய கௌன்ஸில் வேலை நிச்சயமாகக் கிடைக்கும் என்றிருந்த பொழுதுங்கூட, அதற்குத் தக்கபடி வணக்க ஒடுக்கம் பாராட்டவில்லை. சர்க்கார் சில முறை அபிப்பிராயத்தைத் தெரிவித்தும் நான் வேறு வழியே சென்றேன். 'இழந்தீரே!' என்று சொல்லியும் காட்டினார்கள். எனக்கு அதில் யாதொரு விசனமும் இல்லை. ஏனெனில் அத்தகைய பெரிய ஸ்தானம் நம்மைத் தேடி வர வேண்டும்; நாம் அதைத் தேடக் கூடாது. நம் சொந்த யோக்கியதையால் கிடைத்தால் தான் வேலையைக் கௌரவமாய்க் காப்பாற்றலாம். மற்றொருவர் தயவால் வந்தால் தலை தூக்கி மரியாதையைக் காப்பது கஷ்டம். இக்காலத்தில் பெரிய உத்தியோகங்களுக்குப் போட்டி போட்டு இழிவான உபாயங்கள் செய்து அடைய முயலுகிறார்களே! அது மிகவும் விசனிக்கத் தக்கது.

ரோட்ஸ் பிரசங்கி

ஆறு வருஷங்களுக்கு முன் இங்கிலாந்துக்குப் போகும்படி ஒரு நல்ல அவகாசம் இருந்தது. 'ஸெஸில ரோடஸ்' என்பவர் பெருந் தொகை வைத்து ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடியில் ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தியிருக்கிறார். பிரசித்தரான ஓர் அறிஞரை அழைத்து அந்த வித்தியா நிலயத்தில் மூன்று நான்கு மாதம் வசிக்கச் செய்து அங்கே படிக்கும் வித்தியார்த்திகளுடன் நெருங்கிப் பழகிச் சில பிரசங்கங்கள் செய்ய வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது இந்தியரில் ஒருவர்கூட இதுவரை நாளாக 'ரோட்ஸ் பிரசங்கி' என்கிற இந்தப் பதவிக்கு அழைக்கப்படவில்லை. மகாகனம் எச். ஏ. எல். பிஷர், அந்த ஸ்தாபனத்திற்கு அதிகாரியாயிருந்தபொழுது ஒரு தடவையும், அவருக்குப் பிறகு லார்ட் லோதியன் ஒரு தடவையும் என்னை அழைத்தார்கள். சர்வ கட்சி மகாநாட்டில் இரண்டு வருஷம் லண்டன் குளிரைப் பொறுக்க மாட்டாமல் கஷ்டப்பட்டதால் அதிகக் குளிரான ஆக்ஸ்போர்டு போவதற்குப் பயந்தேன். மேலும் என் மனைவிக்குக் கொடும் வியாதி ஏற்பட்டு டாக்டர் எஸ். ரங்காசாரியாருடைய ஸம்ரக்ஷணை கிருகத்தில் இருந்தாள். எனக்கும் மார்வலி அடிக்கடி வந்தபடியால் அவரை யோசனை கேட்டேன். அவர் சம்மதிக்கவில்லை. தம்மைப் போல ஒரு பெரிய வைத்தியரைக் கூடவே அழைத்துப் போனால் போகலாம்; அதுவும் இரண்டாம் பட்சம் என்றார். மூன்றாவது தடவை கூட ஆக்ஸ்போர்டு சிநேகிதர் ஒருவர், நான் வருவதாயிருந்தால் அழைப்புப் பத்திரம் அனுப்பி வைக்கிறதாகத் தந்தி அனுப்பினார். நான் வேண்டாமென்றால் வேறு இந்தியருக்கு இந்தக் கௌரவம் கிடைப்பது அரிது என்றுகூடச் சொன்னார். அதற்கும் நான் இணங்கவில்லை. இந்த விஷயத்தில் எனக்கு அவ்வளவு தீராத துயரம் இல்லை.

ஏனெனில் அந்தக் காரியம் கால பங்கே தேச சேவையை ஒட்டியது. முக்கால பங்கு என்னுடைய சொந்தப் பெருமைக்குக் காரணமாக இருந்திருக்கும்.

மாணவருக்கு நல் வார்த்தை

என்னை மிக்க சோம்பேறியென்று சொல்லமாட்டார்கள். ஆயினும் உண்மை எனக்குத் தெரியுமே! எவ்வளவோ காலத்தை வீண் போக்கி யிருக்கிறேன். சீட்டாட்டத்திலும் வீண் வம்பு பேசுவதிலும் வெகு காலம் போயிற்று. இதைத் தமிழ்ப் படிப்பிலும் ஸம்ஸ்கிருதப் படிப்பிலும் போக்கியிருந்தால் எவ்வளவோ மேன்மை! தமிழைத் தாய்மொழியாய்ப் படைத்து, அதிலுள்ள அழகிய நூல்களைப் படியாததும், அதில் நேர்த்தியாய்ப் பேசவும் வரையவும் கற்காததும் பெருத்த குற்றமும் வெட்கமு மாகும். அண்ணாமலை யூனிவர்ஸிடியில் கிழப் பருவம் வந்த பிறகு ஐந்து வருஷ காலம் தலைமை ஸ்தானத்தில் இருந்தேன். தேக ஸக்தி இடங்கொடுத்த மட்டில் பிள்ளைகளுக்குப் பாடம் கூடச் சொல்லி வந்தேன். இதுதான் எனக்கு மிக்க சந்தோஷத்தை விளைவித்தது. இந்திய ஊழியர் சங்கத்தில் காலம் கழித்த போதெல்லாம் பிறருக்கு உபதேசம் செய்யும் முறையே மறந்திருந்தது. யூனிவர்ஸிடி மாணவர்களைக் கண்டதும் பழைய உத்ஸாகம் திரும்பக் கிளம்பிற்று. இன்னமும் அதிகமாய்ச் சொல்லி வைக்கவில்லையே என்பதுதான் மனக்குறை. பிள்ளைகளுடன் பழகி அவர்களுக்கு நல்லறிவை ஊட்டி அவர்கள் குணங்களைப் பரிமளிக்கச் செய்து அவர்களைத் தாய் நாட்டுக்குத் தக்க மக்களாக ஆக்குவதைவிடப் புண்ணியம் உண்டோ? உபாத்தியாயர் வேலைக்குக் கீழ்ப்பட்டதுதான் எதுவும்!

ஐயோ, இந்தக் கல்வி நிலயங்களை வேண்டுமென்று கெடுக்க முயலுகிறார்களே! இது தேசத்துக்கு அநேகக்

கேடுகளில் தீராக் கேடு! அண்ணாமலை நகரில் நேர்ந்த ஒரு நிகழ்ச்சியைச் சுருக்கமாக உரைக்காவிடில் என் கதை பூர்த்தி பெறாது. ஆனால் ஸ்ட்ரைக் - அதாவது படிப்பு நிறுத்தம் - யூனிவர்ஸிடியின் வேலை நிறுத்தம் என்கிற கிளர்ச்சி பிரபலமாய் நாளுக்கு நாள் வளர்ந்ததை வரலாறாக எழுதப் போகிறேன் என்கிற பயம் வேண்டாம். நான் அடைந்த கேதங்களும் சரீர நோயும் மன நோயும் போக, முடிவில் என்ன நீதிகள் பாக்கி நிற்கின்றன? உலக இயல்பு என்ன? என்ன தெரிந்துகொண்டேன், என்பதை விளக்கினால் சற்றுப் பயன் படலாம். உலகில், 'அறம் வெல்லும், பாவம் தோற்கும்' என்று ஒரு வசனம் உண்டு. தூங்காமல் பிரயத்தனம் செய்தாலொழிய நல்லது தானாக வெல்லாது. அண்ணாமலை யூனிவர்ஸிடியில் கலகம் நடக்குங்கால் உபாத்தியாயரெல்லாரும் ஒருவர் போல் நின்று ஸ்தாபனத்தைக் காப்பாற்றாவிடில் மோசம் போயிருக்கும். விஷமிகள் சிலரே; சாதுக்கள் அதிகம். ஆயினும் விஷமிகளே மேலிட்டார்கள். அப்படித்தான் எங்கும் எப்பொழுதும். ஆங்கிலத்திலுள்ள ஒரு பழமொழிப்படி யோக்கியர் தூங்கும்போது திருடன் தன் காரியத்தை முடித்துவிடுகிறான். பிள்ளைகள் ஆதியில் கூடிப் படிப்பு நிறுத்தம் செய்யும்போது ஒரு காரணம் இருந்திருக்கும்; ஒரு நாள், தப்பினால் இரண்டு நாள் அமர்க்களப்படும். பிறகு வழக்கம்போல் ஒத்து வாழும் குடும்பம்போல் ஆகிவிடும். புயல் அடங்கிய பிறகு, 'இந்தச் சமுத்திரமும் பொங்குமா!' என்று தோன்றும் அல்லவா?

இப்பொழுதோ என்றால் மாணாக்கருக்குச் சில உரிமைகள் உண்டு. அவை பிறப்புடன் கிடைக்க வேண்டியவை. அவற்றைப் பெற்றோரும் உபாத்தியாயரும் கூடி முரட்டுத்தனமாய்ப் பிடுங்கிக்கொண்டார்கள். அவைகளைத் திரும்பி அடைய இந்தியாவிலுள்ள எல்லா மாணாக்கருமே ஒரு மகா சங்கமாகக் கூடி

ஸேனாபதிகள் போல சிலரை, அதிகார வாககமாகத் திடடம் செயது ஓயவின்றி முயலுதல் அவசியம். கிளாசசி உணடாககுவதையே தொழிலாகக் கொணட சிலா அங்கும் இஙகும சஞ்சரிககிறாாகள. மில முதலிய இடஙகளில எப்படி, புகாாகளுககுக காரணம எப்பொழுது வேணடுமானாலும் கிடைககுமோ, கொஞ்சம் இருநதாலும் படாா எனறு தீககுசசி படடாற்போல வெடிககுமோ, அபபடிப்போல சாசுவதப புகாாகளின வரிசை தயாராக இருககிறபடியால மனக கொந்தளிப்பு, தீராத வியாதிபோல குடியேறி விடடது. காலையில பததிரிகையைத திறநதால எஙகேயாவது பிளளைகள வேலை நிறுததம் கணணில படுகிறது. கலியுகம் முற்றியபடியால ஆஙகாஙகு உபாததியாயாகளும் இவ வழியே செலகிறாாகள. இந்தக கொடிய ஓடடுவாா ஓடடிகுத் தககமருந்து யாரும் கணடு பிடிககவிலலை.

சுயாதீனத்தின் தன்மை

அணணாமலை நகரில கலகம் நோந்து பிள்ளைகள் தலைவிரித தாடுஙகால நான் எவவிதம் அதைச் சமாளித-தேன்? வழககமபோல் வாழ்ததுவாரும் உணடு; தூற்றுவாரும் உணடு. முதலிலேயே கடுமை காடடித துஷடாகளில ஐந்தாறு பேரைத ‘தளளிவிடடிருநதால கம்மெனறு எலலாம் அடங்கியிருககும் எனறு உறுதியாய்ச சிலா அபிப்பிராயப்படுகிறாாகள. இடததைக கொடுததால் மடததைப பிடுஙகுவது மனிதருககு இயலபு. தணடப் பிரயோகமே உததமம் என்று எணணுவோா பலர். எனககு அந்த வழி நியாயமென்று அபபொழுதும் தோன்றவிலலை; இவவளவு துனபப்படட பிறகு இபபொழுதும் தோன்றவிலலை. குறறவாளிகளைச சிடசிககும்போது குறறமற்றவாகளுக்கு மன அமைதியை உணடு பணண வேணடியது கடமை. அவாகள நடுஙகி ஒடுஙகிததான் பிழைக்க வேணடுமென்று

நினைககககூடாது. நாம் ஒழுஙகாயிருந்தால் சுதந்தரம் ஒன்றும் குன்றுதென்கிற தைரியம் நலல பிளளைகளுககு இருகக வேணடும். சுயாதீனம் (Liberty) எனபதில பகுதி திடமாயிருந்தால அதைச சிலா துாவிநியோகப படுத்தினுலும் பொறுததுககொளள வேணடும். பெரும் பாலோருககுச சுயாதீனம அமுதுபோல ஆகும். சில ருககு லாகிரியை விளைவிககும் இதைப பொறுகக வலிமையிலலாது அளவு மீறிச சிடசிகக ஆரம்பிததால எலலாம் நலவழிககு வநதுவிடுமெனறு நிசசயமாயச சொலலவே முடியாது. தீயில எணணெய ஊறறினுற் போல ஆனுலும் ஆகும்.

நான் படபடக்காமல் பிள்ளைகளிடம் நல்ல வாரததை சொனனேன்.- நலலுபதேசஙகளை விளம் பரப் படுததினேன். தகப்பனமாருககு எசசரிககை அனுப்பினேன் இது வெகுவாகப பயனபடாது எனறு அறிந்துகொணடவுடன் வகுப்புகளை மூடிப் பிளளை களை வீடடுககு அனுப்பிப பயமும் நயமும் கலந்து பததிரிகைகளில எழுதிப் பாரததேன் என துரதிருஷ டமோ யூனிவாஸிடியின துரதிருஷடமோ இதுவும் பயன் தரவிலலை. பிளளைகளுககு நான் இணஙகி, விதிதத சிடசையை மாறறி மாணுககரின அன்பை மறுபடி கவாநதுகொளவதே சரியெனறு பெரிய உததியோகஸ் தாகள சிலா புததி சொனனாகள. இவாகளால என் துன்பம் வளுததது. அடிககடி உபாததியாயாகளைக் கேடடுக்கொணடும், கோபம், காவம் முதலான கெடட குணஙகளுககு இடங்கொடாமல நனறுயப பரியாலோசனை செயதும் நடந்து வந்ததால, விசேஷ மாயக காரியஙகளை ரததுச செயயாமலும், உததரவு களை வாபீஸ் வாங்காமலும் பிழைததேன. நாள் அதிகம் பிடிததது; வேதனை அதிகமாயிற்று; இரணடு மூன்று தடவை தலைககுமேல போயவிடும்போலும் இருந்தது.

இதெல்லாம் உண்மைதான். ஆனால் பொய், பித்தலாட்டம் நான் செய்யவில்லை. அநியாய தண்டனை விதிக்கவில்லை. பொறுமை, மன்னிப்பு, ஔதாரியம் இந்தக் கடமைகளைக் கைவிடவில்லை. என் சாந்தத்தைப் பார்த்து அநேகர், 'இளைத்தவன்' என்று குதிரை யேறினார்கள்; வஞ்சனை செய்தார்கள். அதனால் நான் தப்புக் காரியம் செய்தேன் என்று ஆகவில்லை. சாமம் மாக்கம் கூடாது, தண்டத்தையே கையாள வேண்டுமென்று கூறமாட்டேன்.

முடிவில் என் கொள்கை இதுதான். மறுபடியும் ஜ்வாசசி உண்டாகி நான் அதிகாரம் வகித்தால் மிருதுவான உபாயத்தையே தேடுவேன். தீராத அளவுதான், 'ஐயோ, வேறு விதியில்லையே' என்று சிட்சை விதிப்பேன். சுதந்தரங்களின் உண்மையான மேன்மையைப் பிள்ளைகளுக்குக் கற்பித்து, அவர்களிடம் நேரான ஆசையை உண்டுபண்ணுவதற்கு வேறு குறுக்கு வழியே இல்லை.

எங்கள் ஊர்

பண்டை நாள் கொள்கைகளில் வெகு மேன்மையானது ஒன்று, ஜீர்ணோத்தாரணம் என்பது. புதுக் கோவில் கட்டுவதைக் காட்டிலும் பாழடைந்த கோவிலைப் புதுப்பிப்பது பெரிது. இக் காலத்து ராஜீயத் துறையில் தேர்ந்தவர்கள், 'நம் கிராமங்களை முன் இருந்த நிலையில் ஏற்றி வைத்தால், அதுவே ஒப்பற்ற கைங்கரியம்' என்று எண்ணுகிறார்கள்: 'கிராமங்களில் பழைய நிலை எப்படி இருந்தது? அது திரும்புமா? திரும்புவது நலமா?' என்பவையெல்லாம் பெரும் கேள்விகள். விடை சொல்வது எளிதல்ல. எவ்வளவோ சரித்திர ஞானமும் பொது நன்மையின் உண்மையும் தவறாது சீர்தூக்கும் திறமையும் வேண்டும். 'ஓடிய வெள்ளம் திரும்பாது' என்பதுபோல, பழைய மாதிரிகள் அப்படியே திரும்பா. அநேக மாறுதல் செய்வது அவசியம். இம் மாறுதலின் ஸ்வரூபத்தைத்தான் புத்திமான்கள் தீர்மானிக்க வேண்டும். வேறு வேறாய்ச் சொல்வார்கள் பெரும்பாலோரது அபிப்பிராயத்தைக் கண்டுபிடிப்பதுகூடக் கஷ்டம். சிலருக்கு, நாகரிகம் குறைய வேண்டும் என்றும், சிலருக்கு அதிகப்பட வேண்டும் என்றும் கொள்கை உண்டு.

ஒரு பெரியார் இந்த விஷயத்தை ஆராய்ந்தது, ஞாபகத்திற்குத் தெளிவாய் வருகிறது. அது வெகு விசித்திரம். நாட்டுப் பிரதேசங்கள் முன்னேற வேண்டுமானால் படித்தவர்கள் அங்கே குடியேற வேண்டும் என்று அடிப்படையாக அவர் சாதித்தார். அவர்கள் குடியேறுவதற்கு வசதிகள் வேண்டுமே! நல்ல கட்டடங்களும் மகா ஜனங்கள் கூடுவதற்குப் பொது இடங்களும் நல்ல பள்ளிக்கூடமும் மின்சார டிராம்களும்

சினிமாக்களும் வேண்டும் என்று ஒவ்வொன்றாக ஏற்றிப் பட்டண வாழ்க்கைக்கு ஏறக்குறையச் சமமாகவே வருணித்தார்.

'அவ்வளவு தூரம் போவது முடியாத காரியம்; சரி அல்ல' என்று கூடச் சிலர் கட்சியாடுவர். இத்தகைய விஷயங்களைத் தீர ஆராய்ச்சி செய்ய வேண்டுமானால் முதலில் நம் கிராமங்கள் எப்படி இருந்தன என்பதை அறிய வேண்டும். புஸ்தகங்களாலும் தஸ்தாவேஜிகளாலும் பேருதவி பெறலாம் ஆயினும் ஐம்பது அறுபது வருஷங்கள் அநுபவம் உள்ளவர்கள் தாங்கள் நேரில் பார்த்தவண்ணம் சின்ன ஊர்களின் வாழ்க்கையை வருணித்தால் நமக்கு உண்மை நன்கு விளங்கும். கிராமங்கள் எவ்வளவோ மாதிரி. எவ்வளவோ போக்கு எடுத்து உரைத்தால்தான் பயன் உண்டு. இதன் பொருட்டுத்தான் கலைமகள் ஆசிரியர் நல்ல யோசனை செய்து, 'எங்கள் ஊர்' என்ற தலைப்பு வைத்து, ஒரு கட்டுரைத் தொடர்ச்சியைத் துவக்குகிறார். இதில் கலந்துகொள்ள இடம் கொடுத்தது எனக்கு வாய்த்த ஒரு பெருமை.

வலங்கைமான்

என் பிறப்பிடமான வலங்கைமான் கும்பகோணத்துக்கு ஆறு மைல் தெற்கே உள்ளது. இதைப் பற்றிய பெரியோர் இயற்றிய பாடல்கள் இருபதாக மகா மகோபாத்தியாய சாமிநாதையர் அவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். இங்குள்ள சிவாலயத்தில் சிவபெருமானது வலது கையில் மான் இருக்கிறது; அதனால் அப் பெயர் அமைந்தது. கிராமத்துக்கு வடக்கு எல்லை குடமுருட்டி ஆறு. என் பாலியத்தில் ஜலம் நிறைந்து போகும்போது ஏழு எட்டு அடி இருக்கும். இப்பொழுது நாணல் போட்டுக் குறுக்கிவிட்டார்கள்; மேடு இட்டு நீந்தவே முடியாது. அக்கிரகாரத்துக்கு

மேற்கில் விஷ்ணு ஆலயமும் குளமும் இருக்கின்றன. தெற்கே ஒரு சிறு வாய்க்கால், வீடுகளின் கொல்லைகளை ஒட்டி ஓடும். கீழ்த் திசையில் குடியானத் தெருக்களும், மாரியம்மன் கோவிலும் இருக்கின்றன. பெரிய கோவில்களுக்குத் தேர் உண்டு. ஆனால் அவை ஓடி நான் பார்த்ததே இல்லை. என் காலத்துக்கு முந்தியே, அவைகளின் உபயோகம் நின்றுவிட்டது. தேரின் சமர்ட்சணத்திற்காகப் போட்டிருக்கும் கொட்டகைகூட அழிந்து போயிற்று; பழுது பார்ப்பார் இல்லை.

கிராமமோ மிகப் பெரியது. தஞ்சாவூர் ஜில்லாவில் முதல்தரமான கிராமங்களில் சேர்க்கலாம். கீழ் மேலாக ஒன்றரைப் பர்லாங்கு நீளம் உள்ள மூன்று வீதிகளும், அவைகளை இணைக்கத் தென் வடலாக இரண்டு வீதிகளும் உள்ளன. இந்தக் குறுக்கு வீதிகளிலும் வடக்கு வீதியிலும் ஒரு சிறகுதான் உண்டு. நடு வீதியிலும் தெற்கு வீதியிலும் எதிரும் புதிருமாகத் தொடர்ச்சியாகவே வீடுகள் இருந்தன. ஜனங்கள் நிறைந்து இருப்பார்கள். அகங்கள் காலியாகவாவது அதிக காலம் பூட்டியாவது இரா. நான் பிறப்பதற்குப் பதினைந்து வருஷங்களுக்கு முந்தி வலங்கைமான், தாலுக்கா அந்தஸ்தைப் பெற்றிருந்தது. பிற்காலத்தில்தான் கும்பகோணம் ஓங்கியது.

அதன் கீர்த்தி

அந் நாளில் ஒரு வழக்கம், இக் காலத்தவர் நம்பக் கூடாததாக இருந்தது. சர்க்கார் நிலவரி வசூலிப்பது மிகவும் கஷ்டம். ஜனங்களுக்கு நடைமுதலுக்குப் போதுமான அளவு வெள்ளி நாணயமாவது செப்பு நாணயமாவது இல்லை. காசைக் கண்டால் நிதியைக் கண்டது போலத்தான்! விடமாட்டார்கள். ஏராளமாக நெல் இருந்தாலும், அதைச் சமயத்தில் விற்றுப் பணமாக்குவது மிக அரிது. கிஸ்துக் காலம் என்றால் மிராசுதார்களுக்குக்

மிகவும் பொல்லாத காலம். ரெவின்யூ இன்ஸ்பெக்டரும் தாசில்தாரும் டலாயத்தையும் தலையாரியையும் விட்டு நெறிப்பார்கள். பெரிய பிரபுக்கள் கூட அநேக நாள் ஒளிந்துகொண்டே இருப்பார்கள். அகப்பட்டவர்களை மரியாதையின்றிப் பேசுவதல்லாமல் தெருவில் நிறுத்தி, காதைக் கிள்ளுவதும் தோப்புக்கரணம் போடச் செய்வதும் இன்னும் வெகு கொடுமையான தண்டனைகளைத் தருவதும் வழக்கம். இப்படி அநாகரிகமான மானக்கேட்டுக்குப் பெரிய மனிதரையும் உள்ளாக்குவது செய்யத்தகாத அநியாயம் என்று நம்மூருக்கு வந்த பார்லிமெண்ட் அங்கத்தினர் சிலர் சீமையில் கூச்சல் போட்டார்கள். இதன் உண்மையை விசாரிப்பதற்காக 1858-ஆம் வருஷம் ஒரு 'கமிஷன்' நியமித்தார்கள். அதற்கு, 'சரீரக் கொடுமைக் கமிஷன்' (Torture Commission) என்று பெயர். அவர்கள் முடிவில் எழுதிய யாதாஸ்தில், வலங்கைமானின் பெயரும் அதன் உத்தியோகஸ்தர் சுப்பராயர் என்பவர் பெயரும் அமைந்திருக்கின்றன. இத்தகைய கீர்த்தி எல்லாக் கிராமங்களுக்குமே வாய்க்குமா!

கச்சேரி விவகாரம்

சென்ற நூற்றாண்டின் நடுவில் எங்களூருக்கும் கும்பகோணத்துக்கும் கெட்ட பெயர் உண்டு. 'கும்பகோணம்' என்னும் சொல்லுக்கே, 'பித்தலாட்டம், போக்கிரித்தனம்' என்கிற அர்த்தம் கிடைத்து அகராதியிலுங்கூட எழுதப் பெற்றது. இன்றும் சென்னை மாகாணத்தின் மூலை முடுக்குகளிலுங்கூட, 'ஏதோ கும்பகோணம் செய்து விட்டானையா! பாபி!' என்று சொல்லக் கேட்கலாம். நான் கும்பகோணத்தான் ஆச்சுதே என்று தெரிந்தும் கூசமாட்டார்கள் சிலர்.

சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு வலங்கைமான் என்றால் அச்சம் உண்டு. அவ்வூரார் கோள் கடிதம்

எழுதுவதில் பேர் பெற்றவர். வலங்கைமான் இலாகாவுக்கு ஒரு முனிசிப் கோர்ட் தனியாக இருக்கிறது. ஆனால் அதைச் சில சௌகரியங்களுக்காகக் கும்பகோணத்தில் வைத்திருக்கிறார்கள். இது தவிர, கும்பகோணத்தில் நாலைந்து பெரிய கச்சேரிகள் உண்டு. அங்கெல்லாம் வலங்கைமானூர் கட்சிக்காரர்களாயும் சாட்சிகளாயும் தினந்தோறும் காணப்படுவார்கள். ஜட்கா வண்டிக்காரர்களுக்கும் சிற்றுண்டிக் கடைக்காரர்களுக்கும் ஓய்வில்லாமல் வரும்படி கிடைக்கும்.

ஊரில் ஒரு பட்டா மணியகாரர் இருப்பார். அவர் தகுந்த குடும்பத்தில் பிறந்த தெலுங்கர். நல்லவர் என்றும் கெட்டிக்காரர் என்றும் சொல்லுவார்கள். ஆயினும், ஏழை ஜனங்கள்கூட அவரிடம் விவகாரங்களைக் கொண்டுபோவதில்லை. எப்படியாகிலும் பெரிது பண்ணிக் கும்பகோணத்திற்கே செல்வார்கள். வெகு பேருக்குச் சட்டம் போகும் வழியும் வியாஜ்ய முறைகளும் செவ்வையாய்த் தெரியும்.

மோசம் போன கதை

எங்களூர்ப் பிள்ளைகளை ஏமாற்றுவது எளிதல்ல. ஒரு தடவை மட்டும் சிறுவர், பெரியவர் எல்லோருமே மோசம் போனார்கள். அதை இவ்விடம் குறிக்கலாமென்று எண்ணுகிறேன். எனக்கு ஏழெட்டு வயசு உள்ளபோது இங்கிலீஷ்ப் பள்ளிக்கூடம் ஒன்றும் ஊரில் நிலை பெறவில்லை. இங்கிலீஷ் புதுப் படிப்பானதால், அதைக் கைப்பற்ற ஆசை உள்ளவர் குறைவு. கும்பகோணம் சமீபத்தில் இருந்ததால் அங்கேயே சிலர் ஜாகை போடுவார்கள். சோற்றுக்காரிகளை நம்பியும் சிலர் பிள்ளைகளை அனுப்புவார்கள். 'முதல் தரமென்று புகழ் பெற்ற கிராமத்திற்கு இது அழகல்ல. நாலைந்து வகுப்பாவது உள்ள பள்ளிக்கூடத்தை ஊன்றி நாட்ட வேண்டும்' என்ற ஓர் ஆசை பிறந்தது. இதை நிறை

வேறறுவதறகு மெடரிகுலேஷன வரையில படித்த, முபபது வயசுளள ஓா ஐயஙகாா வநதாா. அவா நலல வாசாலகா. ஆள சிவபபு நிறமாயும் வாடட சாடட மாயும் முகவெட டுளளவராயும் இருநதாா அவா உததேசம் வெளியானதும், ஊரில உளள அரைப படிபபு காலபடிபபுககாரப பிளளைகள அவரைச சுற்றிக கொணடாாகள. ஒரு வீடடை வாடகைககு வாஙகி நாலு வகுபபு வைககவே, 'கெஜ கெஜ' என்று குழந்தை கள நிரம்ப வந்துவிடடாாகள. ஐயஙகாரவாகள தம் உடம்பு நலுஙகாமல, சில சடடாமபிளளைகளைக கொணடே பாடம நடததி வநதாா.

ஒரு வாரம், பதது நாள ஆனவுடனே, பளளிக கூடததிறகு எதிா வீடடுத திணணையில பெரிய சீடடுக கசசேரியும வமபுக கூடடமும் ஏறபடடு, அவ விரணடி லும் ஐயஙகாா நாடடாணமை கொணடாா படிப்பில கவனம குறைநதது கணடு சில பெறறோாகள முணு முணுககத தொடஙகினாாகள அதை அடககி ஐயங காருககா தெரியாது? 'தகக கடடிடம இலலாமல பளளிககூடம் நடவாது' என்று ஒரு பேசசைக கிளபபி ஊாப பெரியோாகள அதறகு வேணடுமான அளவு திரவியம் சோகக வேணடுமென்று முயலச செயதாா. மாணுககாகளை விடடுத தாய தந்தையாகளைத துரிதப படுததினாா ஏதோ ஒரு நாளும் இலலாத உதஸாகம தலைபபடடு, இரணடு வாரததுககுள இரணடாயிரம் ரூபாய, வாயமொழியில சோந்தது சிலா பணமாகவும் சிலா 'பிராமிசரி நோட'டாகவும், இரணடொருவா நகைகளாகவும் அவரவா பஙகைச சோபபிததாாகள பளளிககூட ஸதாபகா அவசர அவசரமாக நோடடுக களையும நகைகளையும் கூடியவரையில ரொககமாககிக கொணடு, ஒரு நாள ஒருவரிடமும சொலலிககொளளா மல் ஊரை விடடே போயவிடடாா. உடனே எஙகள ஊரில உணடான துககததுககும் வியப்புககும் அளவே இலலை.

'நம்மை ஏமாற்றுவோன் நல்ல கைகாரனாய் இருக்க வேண்டும்' என்று சொன்னார்கள். துணிந்த குமரர் ஒருவர், 'எங்கிருந்தாயினும் ஆறு மாதத்தில் அவனைப் பிடித்து வருவேன்!' என்று சபதம் கூறினார். 'நமக்குள் ஓர் ஆசாமியைக் கைக்குள் போட்டுக்கொண்டு தான் இந்தச் சாகசத்தை ஐயங்கார் சாதித்திருக்க வேண்டும்' என்று வேறு ஒருவர் யுக்தியாகச் சொன்னார். 'ஆமாம்! தெற்குத் தெரு சுப்பன் மூன்று நாளாய் ஊரில் இல்லை' என்று வேறு ஒருவர் ஞாபகப்படுத்தினார். 'இருக்கும், இருக்கும்! கரடகனுக்குத் தமனகன் வேண்டுமோ, இல்லையோ?' என்றார் வேறு ஒருவர். இப்படிச் சிறிது காலம் வம்புப் பேச்சு நடந்ததே ஒழிய போன ஐயங்கார் போனவரே!

நல்ல மனிதர்கள்

வலங்கைமானின் அதிருஷ்டம் அக் காலத்தில் நேரில்லை. சாஸ்திரங்களில் நன்றாகப் பயின்றவர் ஒருவர் கூட இல்லை. வேதாத்தியயனம் செய்தவர் அநேகர் உண்டு. பூர்வாபரங்களுக்கு நன்றாய்ப் பண்ணிவைக்கத் தெரிந்த உபாத்தியாயர்கள் அநேகர் இருந்தனர். ஒரு ஹவ்ய கவ்யமென்றால், முப்பது நாற்பது பேர்கள் விபூதியும் கோபிச்சந்தனமும் நாமமும் போட்டவர்களாகக் கூடுவார்கள். சேர்ந்து உரக்கப் பஞ்சாதி சொன்னால் தூரத்திலேயே நன்றாய்க் கேட்கும். பாடசாலை என்று ஓர் இடத்தில் ஏற்படாவிடினும், நாலைந்து பண்டிதர்கள் ஏழெட்டுச் சிஷ்யர்களுடன் குடமுருட்டியில் ஸ்நானம், குளத்தில் சந்தியாவந்தனம், கோவிலில் சுவாமி தரிசனம் ஆகிய இக் காரியங்களுக்குப் போகும்போது, கோஷ்டி கோஷ்டியாய், வேதங்களைக் கோஷித்துக் கொண்டு போவார்கள். காவிய, நாடகங்கள் பாடம் சொல்லக்கூடிய வித்துவான்களும் சிலர் இருந்தனர்.

தீக்ஷிதர் என்று எல்லோரும் மரியாதையாய் வணங்கக்கூடிய, நல்ல ஒழுக்கமும் நற்குணமும் உள்ள பெரியவர் ஒருவர் என் வீட்டுக்குச் சமீபத்தில் இருந்தார். அவர் தினம் ஒரு செம்பை நாடாவில் கோத்துக் கழுத்தில் கட்டிக்கொண்டு, கையில் ஜாலர் தட்டிக்கொண்டு, கடவுள் தோத்திரத்தைச் சொல்லியபடியே தெருவில் போவார். ஓர் அகத்திலும் நுழைவதில்லை. சுமார் பத்துப் பன்னிரண்டு அகங்கள் ஆனதும், வேண்டிய அளவு அரிசி கிடைத்துவிடும். சிலர் கறிகாய்களும் கொடுப்பார்கள். வீட்டுக்குத் திரும்பி விடுவார். நான் எப். ஏ. வகுப்பில் படிக்கும்போது, அவரிடத்தில் நைஷதத்தில் இரண்டு சர்க்கம் பாடம் கேட்டேன்.

இல்லாத விஷயங்கள்

தஞ்சாவூர் ஜில்லாவில், பழைய படிப்புக்குப் பெயர் போன ஊர்கள் அநேகம் இருந்தபோதிலும், வலங்கைமான் அவைகளில் ஒன்று அல்ல. தலைமுறை வரிசையாக வரும் வழக்கங்களும் கட்டுப்பாடுகளும் அங்கே ஊன்றி நிற்கவில்லை. வெகு நாளைக்கு முந்தி ஊர்ஜிதமாய் இருந்து அப்பொழுதுதான் தளர்ந்தனவோ! தெரியாது. 'பலபட்டறைக் கிராமம்' என்பார்கள். பிராம்மண ஜாதியில் அநேகம் உள் வகுப்பைச் சேர்ந்தவர்கள் கலந்திருப்பார்கள். கல்யாணம் முதலிய விசேஷங்கள் நேர்ந்தால், ஊரில் எல்லோரையும் அழைப்பதும், அழைப்புக்கு இணங்கிப் போவதும் உதவுவதும் வழக்கம். ஆனால் கிராமவாசிகள் கூட்டங் கூடிப் பொதுக் காரியங்களுக்கு வசூல் முதலிய முயற்சிகளைச் செய்ததையாவது, சண்டை சச்சரவுகளைப் பஞ்சாயத்தார் கூடித் தீர்மானித்ததை யாவது நான் அறியேன். குளங்கள் ஸ்நான பானத்துக்கு அவசியமாக இருந்தாலுங்கூட, பாதுகாப்புப் போதாதுதான். ஜனங்கள் அசுத்தப்படுத்தினால், 'கூடாது' என்று தடுக்கும் உத்தியோகஸ்தரும்

இல்லை; 'இது பொது நன்மைககு விரோதமே; எப்படிச செயயலாம்?' என்று ஓங்கிச சொல்லும் பெரியோரும் இலலை. சந்து பொந்துகள, காலி ஸதலஙகள், வாயககால முதலிய இடஙகளுககுப் போகும் வழிகளு எலலாவற்றையும், குழநதைகளும கிழவாகளும் சரீர பாதைகளைக் கழிபபதற்குத தஙகு தடையின்றி உபயோகப்படுததுவாாகள. 'பாய்கானு' என்பதே தெரியாத நாகரிகம். வீடுகளில கொலலை பெரிதாக இலலாவிடடால மிகத தொலலைதான. வீட்டுச் சாககடைகளைச சரிவரக் கழுவி, நாற்றம் இலலாமல் வைததுககொளவது வெகு கடினம்.

ஊரில பெரும் பாகம் உப்பு மண்ணானதால், சில வீட்டுக் கிணறுகளிலதான் குடிககத தகுந்த தணணீர் கிடைக்கும். கயிறு கட்டிப் பாததிரஙகளை இறககிச் சேநதுவதுதான் வழக்கம். ஆனால கோடைககாலததிலும் தணணீா அதிக ஆழததுககுப போகாது. ராட்டினம் முதலிய வசதிகள அககாலததில வழஙக விலலை. வலஙகைமான் தெருக்களில தென்னை முதலிய மரஙகளை வைததுப் பயிராககுவது அரிது. அதறகுத தகுந்த சாரம் பூமியில இலலை. காவேரிப் போககில அநேகமாய் எலலாக கிராமஙகளிலும், மரம் அடாந்து நிழல வசதி தெருககளில கிடைககும். இந்த விஷயததில எஙகளுககு அதிருஷ்டம் போதாது. இததகைய குறைகளால எலலோருககுமே கஷ்டம் இருந்தாலும், பெணபாலாகளுககு அதிகக கஷ்டம் என்று சொலலவும் வேணடுமா?

நிலபுலன்கள்

வலங்கைமானில கொழுதத பணக்காராகளும் இல்லை; பெருதத மிராசுதாராகளும் இலலை, முககால் வாசி ஜனஙகளுக்குச சிறிய அளவு நிலபுலன்கள் இருககும். நன்செயயும் புன்செயயுமாகச சோற்றுக்

கும துணிகளும் போதிய வரும்படி கிடைக்கும். நாற்பது வேலி, ஐம்பது வேலி அளவு சொததுள்ள கனவான்கள இருநதால அவர்களால பிழைப்பவரும், அவாகள செலவாககுககு அடஙகினவருமான மறறவா கள இருப்பாாகள. அபபடிக கையோஙகினவா நலல வராக இருந்துவிடடால் ஊருக்கு எவவளவோ நனமை உணடு. அவருககுப் பொது நன்மையில கருதது இல்லாமல சிறறினபஙகளிலும் வியாஜ்யஙகளில சொததுச சோககும் வழிகளிலும் மனம் போனால, ஊருககு அழிவு கைககணடதுதான. எஙகளூரில இப்படி நல வழியிலோ கெடட வழியிலோ எலலோரையும் கொணடு செலுதத வல்லவா இலலை. இதனால ஒரு பக்கம் நன்மை விளையும். பிறரைச சாாந்து இராமல தததம் காரியததைதத தாமே நடததிககொளளும் தனமை ஏற்படும். மறறொரு பககம் தந்தலை யாடட மாக அவரவா பிரிந்துபோகக கிராமம் கெடடிலையும்.

பணடைச சம்பிரதாயததில, ஊருககுப் பொதுக் காரியஙகள் செயயச் சில குடும்பஙகள அமைந்து, ஒவவொரு தொழிலுககும், 'மான்யம்' என்று சில நிலஙகள ஒதுககபபடடிருககும். கிராமத தலைவா களுககு அநதஸதும் குணமும் குறையக குறையத தொழிலாளாகள தஙகள வேலையைச சரிவரப பாாககா மல் இந்த மான்யங்களை இழந்து, 'அவா கடடிக கொணடு விடடாா; இவா கடடிககொணடு விடடாா' என்ற புகாா தலைப்படடது. எனககு நினைவு தெரிந்து சில வருஷங்கள வரையில, ஆலயஙகளில பணிகள சரிவரச் செயயபபடடு வந்தன. தினசரி பூஜையும் அந்த அந்தக காலங்களில் உதஸவஙகளும் நோமையாக நிகழும். நாள் தோறும் ஆண பெணகள அநேகா சுவாமி தரிசனததிற்காகப போவது வழககம். திருப பணிகளும் அபபோதைககு அபபோது நடைபெறும். இவை எலலாம வரவரக குறைந்து போயவிடடன.

திருவாதிரை உத்ஸவம்

எனக்கு நன்றாய் இப்பொழுதும் ஞாபகத்தில் வருவது, சிவன் கோவில் திருவாதிரை உத்ஸவம். செவ்வந்திப் பூ மயந்தான்! கீழே எல்லாம் இறையும். கடும் வெப்பமாக இருந்தாலும் பெரும் கூட்டம் கூடும். ஒரு பக்தரைப் பற்றிக் எடுத்துக் கூறவேண்டும். அவர் நல்ல தொண்டு கிழவர். சதை ஆடும். திருநீறு கனமாகப் பூசி இருப்பார். கழுத்தில் ஏக ருத்திராக்ஷ மாலை; புஜத்திலும் கட்டியிருப்பார். தலையிலும் சிறிய குவியலாய்க் கட்டியிருப்பார். அவர் விக்கிரகத்தின் முன்பாக வேர்வை வழிந்தோட ஒரு காலைத் தூக்கிக் கொண்டே தாண்டவம் ஆடுவார். ஒன்றும் அறியாத சிறுவர்களுக்கு வெறும் வேடிக்கையாக இருந்தும், அவர் ஆகம முறைகளில் கண்டிருக்கிறபடியே நடித்தார் என்று சொல்லக் கேள்வி. அவர் காசி முதல் ராமேசுவரம் வரையில் பெரிய உத்ஸவங்கள் நிகழும் இடமெல்லாம் போவாராம். வலங்கைமானைப் பொருட்டாக நினைத்து அவர் ஈசுவர சேவை செய்ய வந்தது, அது ஒரு பெரிய க்ஷேத்திரமாகக் கொண்டாடப்பட்டது என்பதற்கு அடையாளமாம்.

இது தவிர, பல தடவை அக்கிரகார வாசிகள் கூடுவது உண்டு. அவைகளில் சுபமானது ஒன்றையும் அசுபமானது ஒன்றையும் இங்கே விவரிக்கத் துணிகிறேன்.

ஆவணி அவிட்டம்

'ஆவணி அவிட்டம்' வைதிக காரியங்களில் பெரிதாயினும் அதை ஒரு முழக்கமாகக் கொண்டாடுவது கிராம வழக்கம். எங்களூரில் சுமார் பத்துப் பன்னிரண்டு குடும்பத்தாரே சாம வேதிகள். ருக்வேதிகள் இன்னும் குறைவு. பாக்கி எல்லோரும் கிருஷ்ண

யஜுர்வேதிகள். முற்றும் முடமானவரும், வியாதியால் படுத்த படுக்கையாய் இருப்பவரும், தீட்டால் தடுக்கப் பட்டவரும் தவிர மற்ற ஆடவர் யாவரும் அதிகாலையில் எழுந்து ஸ்நானம் செய்து, மற்ற நாட்களில் இல்லாத சிரத்தையுடன் ஜப தபங்களைச் செய்வார்கள். வயசில் முதிர்ந்தவர்கள், அன்று விசேஷம் முடியும் வரையில் ஒன்றும் சாப்பிட மாட்டார்கள் மற்றவர்கள் பலகாரம் செய்வார்கள். ஏது காரணம் பற்றியோ அன்று எல்லா வீடுகளிலும் இட்டிலியாகவே இருக்கும். எங்களுக்கு இந்தத் தின்பண்டத்தைப் புசிப்பது சிராவணச் சடங்குக்கு இன்றியமையாத அங்கம் என்று தோன்றும். வெண்மையாயும் மடியாயும் உள்ள வேஷ்டியை உடுத்துக்கொண்டு, மடிசஞ்சியில் வீட்டிலுள்ள உயர்ந்த பட்டாடைகளை வைத்துக்கொள்ளுவார்கள். நாலைந்து பேர் உள்ள வீடுகளில் இரண்டு மூன்று மடிசஞ்சிகள் உபயோகப்படும். சில பிரபுக்கள் விலை உயர்ந்தனவும், மேனியுள்ளனவுமான தம் வெண்பட்டு ஜோடிகளை வெளிப்படுத்துவார்கள். சுமார் ஒன்பது, ஒன்பதரை மணிக்குத் தெருக்களில் ஒரு பரபரப்பைக் காணலாம். பிள்ளைகள் வீடு வீடாகப் போய், 'நேரமாய் விட்டதே! புறப்படுங்கள்; எல்லாரும் காத்திருக்கிறார்கள்' என்று மெதுவாய் இருப்பவர்களைத் துரிதப்படுத்துவார்கள்.

பத்து மணிக்கு ஒவ்வொருவர் கையிலும் பஞ்ச பாத்திர உத்தரணியும் ஸ்தாலி உத்தரணியும் இருக்கும். விசேஷமாய்ப் பாத்திரம் செம்பாய் இருக்கும். சிலர் தங்கள் செல்வத்தைக் காட்ட இவைகளை வெள்ளியால் வைத்திருப்பார்கள். பூணூல் போடாத சிறுவர்களுக்குக் காரியம் இல்லாவிடினும், அவர்களே பட்டு வேஷ்டி, பாத்திரங்களுடன் முன் நிற்பார்கள். தெற்குத் தெருவார் புறப்பட்டு, நடுத்தெருவார் வந்து சேரும் வரைக்கும் கோடியில் நிற்பார்கள். இவ்விருவரும் வடக்கு வீதியாருடன் சேர்ந்து திரண்டு குடமுருட்டி-

ஆற்றங்கரைக்குப் போவார்கள். நூற்றைம்பது இருநூறு பேர் கூடி அரை மைல் தூரம் போகும்போது கூச்சலும் விளையாட்டும் வெகு ஜோராக இருக்கும்.

எங்களூர் ஸ்நான கட்டம் விஸ்தாரமாய் இருக்கும். படித்துறை மூன்று உண்டு. ஒன்று ஆடவர்களுக்கும் ஒன்று பெண்டிர்களுக்கும் மற்றொன்று பிராமணர் அல்லாதார்களுக்கும் என்று பிரிவினை. அரசும் வேம்பும் நடுவில் கொண்ட பெரும் மேடையும், அதை ஒட்டி, 'ட' என்னும் எழுத்தைப் போன்ற பெரிய மண்டபமும் உண்டு.

அங்கே எல்லோரும் ஒன்று கூடியதும், வைதிகத் தொழிலால் பிழைக்கும் பிராம்மணர்கள் லௌகிகர்களிடம் சென்று ஒரு பஞ்சாதி சொல்லி ஒரு ஜோடி 'யஜ்ஞோப வீதம்' கொடுப்பார்கள். லௌகிகர்கள் அவைகளை வணக்கமாய்ப் பெற்று இரண்டணாத் தக்ஷிணை கொடுப்பார்கள். சிலர் அதே யஜ்ஞோப வீதத்தையும் திருப்பி ஓர் அணாவையும் வைத்துக் கொடுப்பார்கள். இப்படிச் செய்பவர் கொஞ்சம் பேர்தான் இருப்பார்கள். பூணூல் தானம் செய்யும் வைதிகர்கள் அநேகர், சுற்றியுள்ள கிராமங்களுக்கும் போயிருப்பார்கள். அவர்களும் மண்டபத்துக்குச் சரியான வேளைக்கு வந்து சேர்ந்து விடுவார்கள். தத்தம் சிஷ்யர்களுடன் மூன்று நான்கு உபாத்தியாயர்கள் ஊரில் இருந்தாலும், அன்றைக்கு மட்டும் ஒருவரை முதல்வராக வைத்து எல்லோருமே அவருடைய சிஷ்யர்களாக நடந்துகொள்வது வழக்கம். வரவரத் தந்தலை யாட்டம் ஏற்படவே ஒருவருக்குள் மற்றொருவர் அடங்கும் முறை மறந்து, சிலர் தனிக் கோஷ்டியும் ஒவ்வொரு சமயம் கூட்டுவது உண்டு.

கர்மா தொடங்கியதும் முக்கிய வாத்தியார் சங்கற்பம் சொல்லி வைப்பார். இதில்தான் அறியாப் பிள்ளைகள் தங்கள் குரலின் வலிமையைக் காட்ட உரக்கக்

கத்துவார்கள். ஏதோ அன்று ஜபிக்கும் மந்திரங்களில் அதுதான் உத்தமம் என்று வாலிபர்களுக்கு எண்ணம். அந்தச் சங்கற்பம் என்பதில் கால தேசங்களை வெகு நுட்பமாயும் வேடிக்கையாயும் குறிப்பதும் தவிர; பாபங்கள் வரிசையாய் அடுக்கி இருக்கும். அதில், செய்த பாபம், செய்யாத பாபம், உடலால் செய்யும் பாபம், மனசால் செய்யும் பாபம்-இவைகளைச் சொல்லும்போது, என்ன யுக்தி செய்தாலும் நினைக்கவே முடியாத சில பாபங்களையும் கணிப்பார்கள். அது ஆன பிறகு, ஸ்நானமும் தர்ப்பணமும் நடைபெறும். எல்லோரும் மந்திரத்துடன் புதுப் பூணூல் ' அணிவார்கள். கொண்டுவந்த உயர்ந்த வஸ்திரங்களுக்கெல்லாம் இச் சமயந்தான் உபயோகம். இது ஆனதும் ஆவணி யவிட்டத்தின் இணை பிரியாத ப்ரங்கு ஒன்று நிகழும். சின்னவர்கள் மூத்தவர்களைத் தேடி, ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, 'அபிவாதயே' என்று தம் கோத்திரம், சாகை, சூத்ரம் எல்லாவற்றையும் தெரிவிப்பார்கள். இதனால் சிறுவர்களுக்குத் தேக சிரமம் அதிகம். வயது ஏற ஏறச் சிரமம் குன்றும் கிழவர்கள் தங்களையும்விடக் கிழவர்களைத் தேடுவது, பார்க்க விநோதமாகவே இருக்கும். அப்பொழுதுதான் அவர்கள் பிறந்த நாளை மறைக்காது சொல்லுவார்கள். இந்தப் பணிவு எவ்வளவு திமிருடையவனும் செய்தே தீரவேண்டும். இது எவ்வளவு முக்கியம் என்பதற்கு அத்தாட்சியாக, சாதாரணப் பேச்சு முறையில், 'மிகவும் தணிந்து விட்டான், சரணாகதி செய்தான்' என்பதற்கு, 'ஆவணியவிட்டம் பண்ணிவிட்டான்' என்று சொல்வது உண்டு.

உடனே அக்கினி வளர்த்து உபாத்தியாயர் ஹோமத்திற்கு ஏற்பாடு செய்வார். பண்டைக் கிராம வழக்கம் தெரிந்தவர்கள் அரிசி, தேங்காய், பழம், பாக்கு வெற்றிலை இவைகளை அவரிடம் சேர்ப்பிப்பார்கள். ஜாக்கிரதையாய் உள்ளவர்கள் சின்னச் சவுக்கத்தைப்

போட்டு அதன் மேல் உட்காருவார்கள். அக்கினியை
வளர்த்து ஹோமம் செய்ய ஆரம்பித்து, வேதாத்தி
யயனம், சாஸ்திர பாடம் சொல்லி வைப்பார்கள். அப்
பொழுதும் பையன்கள் கூக்குரல் போடுவார்கள்.
ஆனால் சங்கவபத்திற்கு உதவிய புத்த தொண்டை
இல்லாததால், அவ்வளவு தூரம் கேட்காது. இந்தச்
சிட்சை ஆன பிறகு, இளம் பசிக்காரர் சிலர், 'இன்னும்
ஆகவில்லையா? சீக்கிரம் ஐயா!' என்று உபாத்தியா
யரை அவசரப்படுத்துவார்கள். அவரும், 'இதோ
ஆய்விட்டது, இதோ ஆய்விட்டது' என்று ஓடுவார்.
நிகழ்ச்சி முடிந்ததென்பதற்கு அடையாளம், வந்த
தேங்காய் உடைபட்டுச் சர்க்கரை, கற்கண்டு, பழத்
துடன் - உபாத்தியாயர் சிஷ்யகோடிகளுக்கு அட்சதை
தலையில் போட்டதும் - கொடுபடுவதுதான். பலமுள்ள
குழந்தைகளுக்கு இரட்டிப்புப் பாகம் கிடைக்கும். சில
தள்ளாத பிள்ளைகளுக்கு ஒன்றுமே கிடைக்காமல் போவ
தும் உண்டு. இந்தச் சந்தர்ப்பத்தில் உபாத்தியாயருக்கு
ஸம்மானம் சேர்க்க வேண்டி, மங்களகரமாய்க் குங்கும
அட்சதையுடன் விளங்கும்-உபாத்தியாயரைச் சேர்ந்த-
ஒருவர், பெரிய தாம்பாளத்தோடு சிஷ்ய கோடிகள்
இருக்குமிடமெல்லாம் போவார். நிர்ப்பந்தம் ஒன்றும்
இல்லாமலே அவரவர் நிலைக்கு ஏற்பத் தக்ஷிணை போடு
வார்கள்; முழு ரூபாய்கள் சில இருக்கும்; அரை, கால்,
அரைக்கால் விசேஷமாக இருக்கும்; ஜாஸ்தி செப்புக்
காசுதான். ஒரு குடும்பக்காரராவது ஒன்றும் கொடாமல்
ஏமாற்றிவிடமாட்டார். இவ்விஷயத்தில் தவறினால்,
பாபமும் மானக்கேடும் உண்டு என்ற உறுதியான
கொள்கை யாவருக்கும் உண்டு.

கிராமத்திற்குத் திரும்ப வேண்டிய வேளை வந்ததும்
அவரவர் ஈர வேஷ்டி, மடிசஞ்சியைச் சேகரித்து ஊர்
வலம் நேராய்க் கூடுவதற்காக, 'அவரெங்கே?
இவரெங்கே?' என்று ஒருவருக்கொருவர் அழைப்
பார்கள். உபாத்தியாயர் மட்டும் கொஞ்சம் பின்

தயங்குவார்! அரிசி, தேங்காய் எல்லாம் மூட்டை கட்டுவ தில் ஒரு கண் இருக்க, மற்றொரு கண்ணுல தக்க தொகை ஸம்பாவனையாகக் கிடைக்கவில்லை என்று சில பெரியோர்களுடன் குறை கூறுவார். அப்பொழுது கிருகஸ்தர்களில் சிலர், தங்களுக்காகக் காக்கவில்லை என்றும், தங்களைச் சரியான்படி விசாரிக்கவில்லை என்றும், வரவரக் கிராம மரியாதை எல்லாம் அழிந்து போகிறது என்றும் முறையிடுவார்கள். எப்படியோ தகராறு எல்லாம் தீர்ந்து கூட்டம் திரும்பும்பொழுது, வைதிகர்களும் அவர்கள் சிஷ்யர்களும் சேர்ந்து, கணீ ரென்று பஞ்சாதி சொல்வதைக் கேட்க வெகு ஆனந்தமாய் இருக்கும். ஒருவரும் முந்தி ஓடி விட மாட்டார்கள். வடக்கு வீதி ஜனங்கள் திரும்பும் பொழுது மற்றவர் நின்று, 'க்ஷேமமாயப் போய் வாருங்கள் க்ஷேமமாயப் போய் வாருங்கள்' என்று அழகாய விடை கொடுப்பார்கள். அப்படியே நடுத் தெரு மூலையிலும் நடைபெறும். என் வீடு தெற் குத் தெரு மையத்தில் இருந்ததால், நான் வீட்டில நுழையும்போது சிலரே பாக்கி இருப்பார்கள். சுமங்கலி யாராவது மஞ்சள் நீர் சுற்றிக் கொட்டிய பிறகுதான் உள்ளே நுழைவது வழக்கம். மணி இரண்டு ஆகி இருக்கும். கை, கால், முகம் எல்லா வற்றையும் அலம்பியதும், தாய், தமக்கை, மதனி முதலிய ஸ்திரீகளுக்கு நமஸ்காரம் செய்வார்கள்; கோத்திரம், வேதம், சாமா இவைகளைச் சொல்வதில்லை. இம் மரியாதை பெறுவதில் அவர்களுக்கு மெத்த சந்தோஷம். செய்யத் தவறினால் வெகு காலம் மனத்தில் வைத்திருந்து, வேறு குறைகள் ஏற்பட்ட பொழுது, 'ஆவணி யவிட்டத்திற்குக்கூட ஒரு நமஸ காரம் கறிப்பாயக் கிடந்தது!' என்று வருத்தப்பட்டு, நம்மையும் துன்பப்படுத்துவார்கள். 'மஹா ராஜனாய வெகு காலம் நன்றாய இருக்க வேண்டும்' என்று அவர்கள் வாழ்த்துவது திருப்தியாய இருக்கும்.

எனக்கு ஒரு சந்தேகம் நெடுநாளாக இருக்கிறது. அதை யாராகிலும் தீர்த்தால் நலம். வங்காளம், ஐக்கிய மாகாணம், பம்பாய் இங்கெல்லாம் நமஸ்கரிக்கும் போது பெரியவர்து கால்களைத் தொடுவதும், தொட்டுக் கையைக் கண்ணில் ஒற்றிக்கொள்வதும் இக்காலத்தில் கூட வழக்கம். நம் தமிழ் நாட்டில் மட்டும் இது நின்றுவிட்டது. இதேன்? சிலர் நாகரிகம் ஓங்கினதால் என்பர்; அளவைக் கடந்து மடி யென்று கொண்டாடும் ஆசாரத்தாலென்று நான் நினைக்கிறேன். ஒருவரை ஒருவர் தொட்டாற் கூட, பரிசுத்தி போய்விட்டதென்று சிலர் தமிழ் நாட்டில் சொல்கிறார்கள். புருஷர்கள், பெண்டிர்களைப்போல அவ்வளவு கவலைப்படுவதில்லை. இந்தக் கதை நிற்க.

நமஸ்காரம் முடிந்ததும் விசேஷத்திற்குக் கட்டிய பட்டை அவிழ்த்துத் தினப்படி வேஷ்டியை உடுத்துச் சாப்பிட உட்காருவார்கள். 'ஆவணி யவிட்டத்திற்கு அசடியும் சமைப்பாள்' என்றபடி, அன்று சாகங்களும் சுவைப் பண்டங்களும் அதிகமாயத் தயாரா யிருக்கும். புருஷர்கள் எழுந்த பிறகு உடனே இலையெடுத்துப் பசுவின் சாணி போட்டுச் சுத்தப்படுத்துவார்கள். சில இலைகளை மட்டும் வைத்திருப்பார்கள். கணவன்மார் கலத்தில் சாப்பிட வேண்டுவது பெண்டிருக் குரிய கடமை. விசேஷ நாட்களில், இந்த ஒழுக்கத்தைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும். பதார்த்தங்கள் மூன்றரை மணி, நான்கு மணிக்கு நன்று யிருக்குமா? ஆறி அவலாயப் போயிருக்கும் நல்ல தின்பண்டங்கள் குறைவாய இருக்கும்; இல்லாமலும் போகும். புருஷர் கள் நன்றுயப் புசித்தார்களே என்கிற பெருமை மேலிட்டு, தங்களுக்குப் பூஜயமாய விட்டதே என்று பெண்டுகள் கொஞ்சமாயினும வருந்தார்கள். ஊர் வம் பைக் கொட்டி அளந்துகொண்டு, நாக்கை நப்புக்கொட்டி, காலை மாற்றி மாற்றி அவர்கள் உண்பதை வேடிக்கை பார்க்கப் பயன்கள் ஆசைப்படுவார்கள்.

சாவுக் கூட்டம்

தெருவில் ஓர் அகத்தில் சாவு நேர்ந்தால் பந்துக்களும் தெருவாரும் கூடுவார்கள். ஸ்திரீகளும் கைக்காரியத்தை விரைவாய் முடித்துவிட்டுப் போவார்கள். இந்த நாளை விட முன்னெல்லாம் ரோதனம் மிகுதி. பெண்டிர் மார்பில் அடித்துக்கொண்டு அழுவதும், சிட்டையாய்ப் 'புலாக் கணம்' பாடுவதும், ஒருவரை ஒருவர் அணைந்து துக்கம் கொண்டாடுவதும் பார்க்க வியப்பாக இருக்கும். பிணத்தை எடுத்துப் போன பிறகுதான் ஸ்நானம் பண்ணி அவரவர் காரியத்தைப் பார்ப்பார்கள். பலர் மயானத்திற்கும் போவார்கள். முன்னால் புருஷரும், பின்னால் கைகோத்து உரக்க அழுதுகொண்டு பெண்டிரும் போவார்கள். இறந்தவர் புருஷனாயிருந்து, பெண்சாதியும் இருந்தால் அவளையும் ஒரு விதவை, பக்கத்தில் கட்டிக்கொண்டு அலறிக்கொண்டு போவாள்.

வலங்கைமானில் சுடுகாடு ஆற்றின் படித்துறைக்கும் கிழக்கே கால் மைல் தூரம் இருக்கும். பெண்டுகளும் பாலர்களும் படித்துறையில் தங்கிவிடுவார்கள். பிணத்திற்கு நெருப்புப் போட்டு. புகையைக் கண்ட பிறகுதான் ஸ்நானம் செய்வார்கள். இதில் ஒரு விசித்திரம். மாண்டவர் சிறுவராய் இருந்தால், துக்கம் அசாத்தியமாய் இருந்தாலும், வெளி முழக்கம் எல்லாம் குன்றும்; செலவு அதிகப்படாது. சடங்குகளை அசட்டை செய்வார்கள். 'ஏன் இப்படி? இவர் ஆன்மா நல்ல கதியை அடைய வேண்டாமா?' என்றால், 'யார் அற்பாயுசாய்ப் போகச் சொன்னார்?' என்று நிர்தாக்ஷிண்யமாய்ப் பேசுவார்கள். போனவர்கள் பேரில் கோபமா? ஏதோ ஒரு தாழ்ந்த சம்பிரதாயம் உண்டாகி அதையே வளர்த்து வருகிறார்கள். கிழப் பிணம் விழுந்தாலோ, கல்யாணமென்று சொல்லி எல்லா முறைகளையும் விரிவாய் நடத்துவார்கள். புலாக் கணம், அடிபுடை,

கூட்டம், செலவு, வைதிக அநுஷ்டானம், பேரப்பிள்ளைகள் நெய்ப்பந்தம் பிடிப்பது, எல்லாம் கூடிய அளவு விரியும்.

என்னுடைய ஒன்பதாம் பிராயத்தில், சேஷப்பையர் என்று எண்பது வயசான கிழவர் ஒருவர் மாண்டார். சுற்றுவட்டக் கிராமங்களிலிருந்து பந்துக்களும் மித்திரர்களும் ஊரில் உள்ள ஜனங்கள் எல்லோருமே பெருங் கூட்டம் கூடினார்கள். மூன்றில் ஒரு பாகம் பெண்பாலார். படித்துறைக்குப் போகும்போது, சூரியாஸ்தமனம் ஆகிவிட்டது. மண்டபம், மேடை எல்லாம் நிறைந்து ஒரே சந்தடியாய் இருந்தது. திடீரென்று, நடுக்கூட்டத்தில் இரு பெண்கள் ஜோடியாய் நின்று என்ன என்னவோ சத்தங்கள் போட்டு, விகாரமாய்க் குதித்து, முகம் கண் வாய் எல்லாவற்றையும் கோணங்கி பண்ணிக்கொண்டு, அழுவதுபோல பார்க்கிறவர் சிரிக்கக் கூத்தடித்தார்கள். என் போன்ற சிறுவர்களுக்கு ஒரு பக்கம் வேடிக்கையாய் இருந்தாலும் பயம் அதிகப்பட்டது. முறை அறிந்த சில பெரியவர்கள், 'இப்படிச் செய்வது பிராம்மண ஜாதியின் வழக்கமல்ல' என்று கூடிய வரையில் சொல்லிப் பார்த்தார்கள். வேடிக்கை பார்ப்போர், 'நடக்கட்டும், கலியாணந்தானே?' என்று மேலும் கிளப்பிவிட்டார்கள். அவ்விரண்டு ஸ்திரீகளில் ஒருவர் எனக்கு நெருங்கிய பந்துவாதலால் துணிந்து, 'இந்தக் கோரம் எதற்கு?' என்றேன். 'இப்படி எல்லாம் வேடிக்கை பண்ணினால்தான், உங்கள் பயம் நீங்கிக் களிப்பீர்கள்' என்றார் அவர். எனக்கு மட்டும் பயமும் நீங்கவில்லை; களிப்பும் உண்டாகவில்லை. இத்தகைய கோலத்தை நான் வேறு ஒரு சமயமும் பார்க்கவில்லை.

குழந்தைகள் விளையாட்டு

தெருவில் குழந்தைகள் விளையாடுவதைச் சற்றுக் கவனிக்கலாம். பெண் குழந்தைகள் பாண்டி, நொண்டி,

கண்ணாமூச்சி என்று நாலைந்து பேருக்கு மேற்படாமல், ஆங்காங்கு வேடிக்கையாய்ப் பொழுதுபோக்குவார்கள். ஆண் பிள்ளைகள் கோலி, பிள்ளையார்ப் பந்து, கிட்டிப் பந்து, உப்புக் கோடு என்பவற்றிலும், மற்றும் உள்ள ஆட்டங்களிலும் ஈடுபடுவார்கள். கிட்டிப்புள் என்பது இந்தியாவில் அநேக பாகங்களில் அநாதி காலமாய் வழங்கி வருகிறது. பெரியவர்கள் சங்கராந்தி ஒரு நாள் தான் வெளியில் வந்து, பந்தாட்டத்தில் எங்களுடன் கலந்து ஆளுக்கு ஓர் அடி இரண்டடி கிட்டியால் அடித்து விட்டுப் போவார்கள். 'இது ஏதோ புராதன வழக்கம்; வழுவக்கூடாது' என்பார்கள்.

சீட்டாட்டம்

வலங்கைமானில் படிப்பில்லாத குமாரர்கள் அதிகம். ஆனதால் சீட்டாட்டம் பலம். சில வீட்டு வெளித் திண்ணைகளுக்குத்தான் இந்தப் பாக்கியம் உண்டு. பெரும்பாலும் ஐந்து பேர், 'பிடி ஆட்டம்' ஆடுவார்கள். சுற்றி ஏழு எட்டுப் பேர் வேடிக்கை பார்ப்பார்கள். ஆட்டத்தில் சண்டை வந்து கூச்சல் பலக்கும் போது இவர்களும் சேர்ந்து கொள்ளுவார்கள். யாரையாவது சனி தத்தால் பக்கத்திலிருந்து பார்ப்பவர் தோஷம் என்று எண்ணி, அவரைப், 'போ, போ' என்று விலக்குவார்கள். ஆட்டம் தோல்வி அடைந்தாலும் தப்பாட்டம் தலையில் சுமந்தாலும், 'பேஸ்து' என்று பெயர். அபராதம் கொடுக்க வேண்டும். மறு ஆட்டம் ஜயித்தால் தப்பினார்கள். சிலருக்குப் பொல்லாத வேளையால் மூன்று பேஸ்துச் சுமந்துவிடும். அப்பொழுது அவர்கள் திருமுகத்தைப் பார்க்கவே முடியாது 'மூணும் பேஸ்து வைத்தவர் முகம்போல!' என்றுதான் உபமானம் இருக்கிறதே!

சிலருக்கு இந்த ஆட்டத்தில் வெகு கூர்மையான ஊக்கம் இருக்கும். இரண்டு மூன்று பிடி ஆனதுமே,

இன்னா கை இப்படி என்று அறிந்துகொள்ளுவார்கள். அவாகள ஒருவா பேரில தப்பாடடம் கடடுவதறகாகக கடசி சொலவதைக கேடடால, வெகு ஆசசரியமாய இருககும. நனறுயப பழககம் ஆன பிறகுஙகூட எனககு அநதக கடசிகள புலபபடுவதிலலை. முனனுளில 'அவுட' என்று ஓா ஆடடம் உணடு; இரணடு போ ஆடுவது. இதில சிலருககு அற்புதமான தோசசி உணடு. வலஙகை மானில நாலைந்து போ இதே அலுவலாய ஆடி கஷடப் படடனா.

ஒரு தடவை ஊரில ஒரு பெரிய கலயாணம் நோந்து, அநேக கிராமஙகளிலிருந்து சீட்டில் தேடடை யானவாகள வந்திருந்தாகள. ஒரு கசசேரி. முதலதா மான போவழிகள சோந்திருநதமையால, நானும் சாப்பாடடைககூடக் கவனியாமல வேடிககை பாாதது வநதேன். அதில எஙகளூாப் புலிஙயக கோமல சிஙகம் ஒன்று ஜயிததுவிடடது எனககு அவரிடம் இருந்த மோகததை இன்னதென்று குறிகக முடியாது. அவர் கைச சீடடைப பாாப்பதிலும, அவா பேசசைக கேட பதிலும், அவருடனகூட அஙகும் இஙகும் போவதிலும் பைததியம் பிடிதது, அவா கோமலுககுத திரும்பும் பொழுது துககக கடலில முழுகினேன்.

இந்தச சீடடுப் பிசாசு, கிழவாகளையும் ஆட்டி வைக்கும். காசு அகப்படாததால புதுககடடு வாஙக முடியாது. தோசை என்று சொலலிககொணடே ஒன்றோடு ஒன்று பிரிகக முடியாமல் ஒடடிககொண டிருக்கும் சீடடைக குனிந்து உற்றுப பாாத்து, கறுபபு சிவபபுத தெரிந்ததும் தெரியாததுமாய, சணடை விபரீதமாய்ப் போடடு விளையாடுவாாகள். அவாகள் பேசிககொளவதைக கேடக வெடகமாக இருககும். எததனை வயசாயினும், கேவலம் இழிவான கெடட வாாததை சொலவா. தாய், பெணசாதி, கூடப் பிறந் தவா, எலலோா கற்பையும் அழிகக நாககுக் கூசாது.

கற்பை அழிக்கும் திருட்டு மாப்பிள்ளைகளோ கீழ்ஜாதியார்; ஒவ்வொரு வேளையில் நாலு கால் மிருகங்களையும் அழைப்பார்கள். இந்த மானக்கேடான வழக்கம் மற்ற இடங்களைவிடத் தஞ்சாவூர் ஜில்லாவில் மிகுதி. 'புழுத்த நாய் குறுக்கே போகாது' என்பர். பெரும் படிப்புப் படித்துப் பட்டண வாசம் செய்யும் தஞ்சாவூராருங்கூட முற்றும் மறக்க முடியாது. எவ்வளவோ ஜாக்கிரதையாய் இருப்பினும், நான் சுயாதீனமாயும் கூட்டுடனும் பேசும்பொழுது நண்பர்கள் கேட்டிருப்பார்கள் நினைக்க அங்கமெல்லாம் சுருங்குகிறது பால்ய சகவாசம் மாறாது.

கல்யாண சம்பிரமங்கள்

ஹிந்துக்கள் நாலாயிரம் வருஷமாய்த் தொன்று தொட்டு வரும் முறைகளை விட்டு வழுவ மாட்டார்கள் என்ற ஓர் அபிப்பிராயம் எங்கும் பரவி நிற்கிறது இது வெளிப் பார்வைக்குத்தான் சரி. ஊன்றிக் கவனித்தால் முக்கியாம்சங்களிலும் வேற்றுமைகள் பல அகப்படும். விவாக வழக்கங்களைக் கொண்டே இந்த உண்மையை அறியலாம். முன்போல், ஜாதியையாவது, அதன் உட்பிரிவையாவது இப்போதெல்லாம் கவனிப்பதில்லை. நாற்பது வருஷத்துக்கு முன் வடமர்களுக்குள் சோழ தேசத்தார், வட தேசத்தார் என்கிற பேதம் பலமாக இருந்தது. பிருகத் சரணத்தாரில் அவாந்தர வித்தியாசங்களை ஊன்றிப் பார்ப்பது உண்டு. அதிக தூரத்திலாவது, நன்றாய்த் தெரியாத குடும்பங்களிலாவது, கொள்வினை கொடுப்பினை செய்யமாட்டார்கள். ஜாதகம் பார்ப்பது இப்பொழுதும் அதிகமே. முன் நாட்களில் இதற்கும் பதின் மடங்கு இருக்கும். கல்யாணங்களுக்குப் பெரும்பாலும் நேரில்தான் அழைக்க வேண்டும். ஆள் கையில் ஓலைச் செய்தி அனுப்புவதையும் கண்டிருக்கிறேன்.

பயணம் போவது

கூட்டமாய்க் கட்டை வண்டியில் மூன்று நாள் பயணங்கூட்டப் போவார்கள். நெருக்கி உட்கார்ந்தாலும் கூட எல்லாருக்கும் இடம் இராது. மாற்றி மாற்றிக் கொஞ்ச தூரம் சிலர், கொஞ்ச தூரம் வேறு சிலர் என்று பிரித்துக்கொள்வார்கள். பெண்டுகளுக்கும் சிறு குழந்தைகளுக்கும் வேறு வண்டிகள்; புருஷர்களுக்கு வேறு வண்டிகள் உண்டு. இரண்டும் கெட்டான் என்கிற வயசுப் பையன்கள் அங்கும் இங்குமாயச் சௌகரியம்போல் சேர்ந்துகொள்வார்கள். வாய்க்கால், பள்ளம், மேடு முதலிய இடையூறுகள் நேர்ந்தால், மாடும் வண்டிக்காரனும் நிர்வாகிகளான புருஷர்களும் படும்பாடு அதிகமாக இருக்கும். சிலர், 'நமக்கு என்ன?' என்று உதாசீனமாய் அதைப் பார்க்காதவர்போல் நழுவுவார்கள். திருட்டுப் பயம் உண்டு. இதற்காகப் பெண்டுகளும் குழந்தைகளும் நகை போடாமல் வருவார்களா! மேலே நகை மிகுதியாக இருக்க இருக்க, உள்ளே நெருப்பைக் கட்டிக்கொண்டிருப்பார்கள். இருட்டினதும் பலமுள்ள புருஷர்களில், முந்திச் சிலரும் வண்டியை ஒட்டிச் சிலரும் பின்னால் சிலருமாகப் பார்த்து காப்பார்கள். குளத்தங் கரையைக் கண்டதும் சிறுவருக் கெல்லாம் பசியும் தாகமும் தாங்கவே முடியாது. தோசைக்கும் இட்டிலிக்கும் புளியஞ் சாதத்துக்கும் தயிர்ச் சாதத்துக்கும் மன்றாடுவது வேடிக்கையாக இருக்கும். மிளகாய்ப் பொடியும் வேப்பிலைக் கட்டியும் வெல்லம் பட்ட பாடு படும். சிறுமிகள் தாம்பூலம் போட்டு 'உன் நாக்கு அதிகச் சிவப்பா, என் நாக்கு அதிகச் சிவப்பா?' என்று நாக்கை நீட்டிக் கண்ணைக் குறுக்கிப் பார்ப்பதும், புல்லாக்கை நக்குவதும் போட்டோ பிடித் தால் வெகு ஆச்சரியமாக இருக்கும்.

கல்யாண ஊர் சேர்ந்த பிறகு சம்பந்திகளுடன் சிநேகம் கொண்டாடுவதும், அற்பக் காரியங்களுக்கும்

சண்டை போடுவதும் வருணித்து அளவிட முடியாது. வரதட்சிணை என்பது அப்பொழுதும் உண்டு. ஐயாயிரம், பத்தாயிரம் என்பது இல்லவே இல்லை. நூறுக் கணக்கில்தான் இருக்கும் ‘கன்யா தானம்’ என்பது சாஸ்திரங்களில் சொன்னபடி சுத்தமாக நடப்பது அப்பொழுதும் அரிதுதான். இதற்கு எதிரான கொள்கையும் ஒன்று உண்டாம். எங்கள் அகத்திலேயே ஓர் உதாரணம் கேட்டிருக்கிறேன் என் தகப்பனாரது விவாக காலத்தில், அவர் தகப்பனார் தம் சம்பந்தியிடம் ராத்திரி ரகசியமாய் ஐம்பது ரூபாய் கொடுத்தாராம். அவர், தாம் கன்யாதானமாக நடத்த வேண்டுமென்று வெகு நாளாய் வைத்திருந்த ஆசை பங்கமாகக் கூடாதென்று வெகுவாய் ஆக்ஷேபித்தார். ‘தாம் சாஸ்திரங்களில் என்ன எழுதியிருந்தாலும், சுற்றியுள்ள ஜனங்கள், ‘பெண்ணைக் கொள்வது’ என்றுதான் விவகரிக்கிறார்கள். கொண்ட பொருளுக்கு ஏதாகிலும் விலை கொடுக்காவிடில் அது நம் வீடு வந்து க்ஷேமத்தைத் தராது என்ற நெடு நாளைய அநுபவத்தை ஒட்டி-நீங்கள் இதைப் பெற்றுக்கொண்டே ஆகவேண்டும்’ என்று இவர் வற்புறுத்தினர்.

சாப்பாட்டு விஷயம்

இப்பொழுதுங்கூடச் சாப்பாட்டுக்கு அழைப்பதும் சாப்பாட்டுக்குப் போவதும் நமக்குள் நாகரிகத்துக்கும் சௌகரியத்துக்கும் ஏற்ப இருக்கின்றன என்று சொல்ல முடியாது. கிராம வாசங்களில் அதுவும் பழைய நாளில், பெண் வீட்டுக்காரனுக்குக் கவலையும் தொந்தரவும் அதிகம் ஆக வேண்டும் என்பதுதான் எல்லாருக்கும் நோக்கம். காலையில் ஒரு முறை ஊரில் உள்ளோரையெல்லாம் பிள்ளைகளும் பெண்களும் சாப்பாட்டுக்குக் கட்டாயம் வர வேண்டுமென்று அழைப்பார்கள். ஆனால் இது போதாது. மறுபடியும்

சாப்பாட்டு வேளையில் அழைக்காவிடில் சரிப்படாது. புருஷர்களுக்குப் புருஷர், பெண்டுகளுக்குப் பெண்கள் போய்த்தான் ஆகவேண்டும். நிழல் இல்லாத வலங்கைமானில் உப்பு மண் நிறைந்த நாலைந்து தெருவுகளும், அழைக்கும் குழந்தைகள் ஒதுங்கி ஒதுங்கி ஓடுவதைப் பார்த்தால், 'ஏன் இந்தச் சங்கடம்?' என்றுதான் தோன்றும்.

இந்தச் சாப்பாட்டு விஷயத்தில் உள்ளதுபோல் தான் மற்ற விஷயங்களிலும் இருக்கும். ஒரு தடவை ருதுசாந்தி முகூர்த்தம் நடந்தது. ஆசீர்வாதத்திற்கு அட்சதை கொடுத்ததும் பெரியவர் ஒருவர் வாத்தியாரை அழைத்து, 'நிறுத்தும்!' என்று அதட்டிச் சொல்லி ஒரு விவாதத்தைக் கிளப்பினார். இதற்கு அடுத்து வேறு வீட்டில் முன் நடந்த ஒரு கல்யாணத்தில் கிராம வழக்கத்துக்கு நேர் விரோதமாகச் சம்பாவனை விஷயத்தில் தவறுதல் நேர்ந்ததாகச் சொல்லி, 'அதற்கு யார் ஜவாப்தாரி? என்ன ஜவாப்?' என்று கேள்வி போட்டார். என்ன சமாதானம் சொல்லியும் கேட்கவில்லை 'லக்னம் வந்துவிட்டது. தயவு செய்ய வேண்டும்' என்று நயந்து கூறியும் பலிக்கவில்லை. கூச்சல் அதிகமாகிவிட்டது. கடைசியில் இதற்கு வேறு வழியில்லை என்று சிலர் ஒருமிக்கப் பேசிக்கொண்டு வெளியே போய்விட்டார்கள். மணையில் பிள்ளையும் பெண்ணும், வாத்தியாரும் சண்டைக்காரப் பெரியவருமே பாக்கி. இனி வழியில்லை என்று அவரும் ஒதுங்க, அவசியமானவர்கள் ஒவ்வொருவராய்த் திரும்பி வந்த பிறகு முகூர்த்தம் காலம் தவறி நடைபெற்றது.

கிராமத்துப் பெண்கள்

இனி ஸ்திரீகளைப் பற்றி ஒரு பாகம் எழுதி, இந்தக் கட்டுரையை முடிக்க வேண்டும். தென்னிந்தியாவில், 'கோஷா' என்னும் அநாகரிகம் இல்லாவிடினும்.

அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய தேசங்களில் பெண்பாலர்களுக்கு உள்ள படிப்பும் உரிமைகளும், புருஷர்களுக்குச் சமானமாகப் பழகும் சுயாதீனமும் நம்முடைய சகோதரிகளுக்குக் கிடைக்க இன்னும் எவ்வளவோ காலம் பிடிக்கும். அறுபது ஆண்டுகளுக்கு முன் வலங்கைமானில் அவர்கள் நிலைமை எப்படி இருந்திருக்கும்? ஸ்திரீகளைப்பற்றி நம் நூலாசிரியர்கள் உள்ளதை உள்ளபடி அறிவார்களா? அதற்கு எவ்வளவு நெருங்கிப் பழக வேண்டும்? புருஷர்களுடைய அந்தரங்க பாவங்களையும் உத்தேசங்களையும் சுக துக்கங்களையும் உள்ளது உள்ளபடியே வருணிக்க முடியுமே. எட்டு ஒன்பது பிராயமானதும் இரு பாலாரையும் பிரித்துவிடுகிறோம். விளையாட்டு வேறு; கூட்டம் வேறு; கற்கும் கலை வேறு; செய்யும் வேலை வேறு; ஆசாரம் வேறு; பேசும் பேச்சுக்கூட அநேக அம்சங்களில் வேறு. நம் உத்தியோக நிகழ்ச்சிகளும் வாழ்க்கையின் பெரும் போக்குக்களும் துயரங்களும் ஆசைகளும் முற்றும் அவர்களுக்குத் தெரியாதவை. நம்முடன் அவர்கள் இந்த முக்கியமான விஷயங்களில் கலந்து சரி சமானமாய்ச் சம்பாஷித்து, உதவி, வாழ்க்கைப் பங்காளிகள் என்று நினைக்கக்கூடிய நிலையை இன்னும் அடையவில்லை. வீட்டுக் காரியங்களுக்கு அவசியமான அளவுதான் அவர்களோடு பேசுவதும் கொண்டாடுவதும் இருக்கின்றன. ஆடவர் எழுதும் புஸ்தகங்களில் பெண்களைப் பற்றிய கருத்துக்கள் தத்துவமாக இருக்க மாட்டா.

எங்களூரில பையன்களுக்கே நல்ல பள்ளி இல்லை என்று சொல்லியிருக்கிறேன். பெண்களுக்குச் சொல்ல வேண்டுமா! படித்த பெண்களும் இல்லை; படிக்க வேண்டும் என்கிற அவா உள்ள பெண்களும் இல்லை. பாட்டுக் கொஞ்சம் கற்பார்கள். அதுவும் பெரும்பாலும் கேள்வியால் வந்ததாக இருக்கும். உட்கார்ந்து ஒழுங்காக ஒருவர் சொல்லிவைப்பது என்பது இல்லை.

கௌரீ கல்யாணம், ஊஞ்சல், நலங்கு, குதித்துப் பாடுவது - இந்தச் சந்தர்ப்பங்களுக்குத் தக்க பாட்டுக்களை மட்டும் தெரிந்துகொள்வார்கள். அம்மானை, கோலாட்டம், பல்லாங்குழி, நாலு மூலைத் தாச்சி, பாண்டி, ஓட்டி, சோழி—இவைகளே ஆட்டங்கள். பெரிய சம்சாரங்களில் இவற்றிற்குக்கூட நேரம் அகப்படாது. தாய்க்குச் சிறிய பணிவிடைகள் செய்ய வேண்டி இருக்கும். குழந்தையை எடுத்து வைத்துக்கொள்வதும் அசுத்தங்களை எடுப்பதும் வீடு கூட்டுவதும் அடுத்த வீடு, அண்டை வீட்டுக்குச் சிறிய தூதுகள் செல்லுவதும் சாமான்கள் கடன் கொடுப்பதும் வாங்குவதும் அவர்கள் பொழுதை எல்லாம் போக்கிவிடும். சிறிய சமையலுங்கூடச் சமாளிக்க வேண்டும். இந்தச் சுற்றுக் காரியங்களுக்குப் பெண்கள் அவசியமாதலால்தான், 'சமுத்தி தலைச்சன் பெண்ணைப் பெற்றுளாம்' என்கிற வசனம் வழங்குகிறது.

பத்து வயசிற்குள் விவாகம் ஆகவேண்டும். அதற்கு முன்னால் இந்தச் சிட்டை ஆகவேண்டும். ஆகாவிட்டால் தாய்க்குப் பெரும் கவலை. "வருகிற வருஷம் புக்ககம் போகவேணுமே! நீ எப்படித்தான் குப்பை கொட்டப் போகிறாயோ?" என்று பலலைக் கடித்துக்கொண்டு கன்னத்தில் இடிப்பாள்.

அந்த நாளில், குழந்தைகளுக்குச் சொறி, சிரங்கு, அம்மை முதலிய நோய்கள் அதிகம். வைத்தியம் மட்டு. சுகாதார வழி ஒன்றுமே தெரியாது. நல்ல அகங்களில் கூடப் பெண்கள் தலைமயிரில் பேன் இருக்கும் வெளியில் உட்கார்ந்து பேனை எடுத்துச் சொடுக்குவது அரிதல்ல. நான் பார்த்திருக்கிறேன்.

எட்டாவது வயசிலேயே மாப்பிள்ளை தேடத் தொடங்குவார்கள் பெண்களை வைத்துக்கொண்டே தான் விவகாரமெல்லாம் நடக்கும். குடும்பக் கஷ்டங்களும் குடித்தனப் பார்த்தைத் தாங்கும் விதமும்

மாமியார் நாத்தனார்களின் கீழ் இருக்க வேண்டிய மாதிரியும் உபதேசம் ஆகும். குழந்தைப் பருவத்திலேயே பார புத்தி வந்துவிடும். பன்னிரண்டு வயசுக்குள் கட்டிக் கொடுக்காவிட்டால் வெட்கம். பெண்ணை வெளியே அனுப்புவது கடினம். ஆகிருதி வளர்ந்தால் தாய் தந்தையருக்குப் பயம். 'என்னடீ, குதிரைபோல வளர்த்து வெச்சுக்கொண்டிருக்கையே!' என்று தாட்சிண்யம் இல்லாமல் கேட்பாள் மாட்டுப்பெண்ணின் சுப்புக் கிழவி. அன்று முதல் சாப்பாடுகூடக் கொஞ்சம் குறையவே போடுவர்.

மாசம் மாசம் வரும் தீண்டலில், நோவும் குணவேற்றுமையும் தாங்க முடியாமல் இருக்கும். வெளியில் சொல்ல மாட்டார்கள். அழுகையையும் அடக்குவார்கள். வைத்தியமும் வெகு மோசம். உடல் வலி, மனத்துயரம் என்பவைகளைப் பொறுப்பதில் ஸ்திரீகளுக்கு நம்மைப் போல நூறு மடங்கு சக்தி இருக்கும் இது போதாதா? பேய், பிசாசு என்று அசாத்தியப் பயத்தை உண்டு பண்ணி, கோவில் குளங்களுக்கு இழுத்து, மந்திரவாதியைக் கொண்டு கோரமாய்த் தலையை அவிழ்த்து ஆடச் செய்து, பிரம்பால் அலற அலற அடித்து, 'இந்த உயிர் எதற்கு? சாவது நலம்' என்று எண்ணும்படி படுத்துவார்கள். ஒரு பெண்ணை மந்திரவாதி அடித்துப் பயமுறுத்திப் பயங்கரமான சத்தங்கள் போட்டுப் பார்த்தான். அவள் ஆடவில்லை. மூன்று நாள் பிரயாசைப் பட்டும் ஒன்றையும் காணவில்லை. 'தலையை அவிழ்த்துத் தானே கொஞ்சம் ஆடினால் அல்லவா, பிடித்த பேய் வரும்?' என்று அதட்டினான். 'நானாக ஆடி வரவழைக்கிற பேய் பேயல்ல' என்று பெண் தைரியமாய் எழுந்திருந்து உள்ளே போய்விட்டாள்.

புக்கக வாழ்க்கை

மற்றொரு விந்தை உண்டு. ஆனால் பழகிப் போனதால் நமக்கு விந்தையாகத் தோன்றாது. பெண்

கள் பிறந்த அகததில இருப்பது வேறு; புகுந்த அகததில இருபபது வேறு. 'இந்தப பெணதானு அவள்!' என்று கேடகலாம். இஷ்டபபடி ஓடி ஆடிக கொணடு, வேடிக்கை விளையாடடில சேர்ந்து, 'கலுக்' என்று சிரிதது, சாதாரணமாயப பேசிககொண டிருப்பாள் ஓர் இடததில. மற்றோர் இடததில தலை நிமிரக கூடாது சீராக நடககவேணடும் ஒருவா கேடகச சிரிககக கூடாது. தூண மறைவில, கதவு மறைவில், நிற்கவேணடும். வாசலில போகக கூடாது. 'சூ, சூ' என்று மடடும் சததம் செயயலாம. அது ஆததமாகாவிடடால, அருகில இருக்கும் குழந்தையிடம் மெதுவாயச சொலலலாம். முறுககு, சீடை தின்றால ஓசைபபடாமல வாயில நன்றாக ஊறின பிறகுதான் தினபது ஒழுங்கு. வீடடில எலலோரும படுதத பிறகுதான் புருஷன் தூங்குமிடம் போகலாம். அதற்கும் மாமியாரககாரி உததரவு வேணடும். தானே போயவிடடால, 'என்ன ராஙகிடி; நம்மைத தாணடிணடு, டாக, டாக என்று போறதைப பாததியா?' எனபாள். துஷட எஜமானியாய இருந்தால், 'கடடேல வைகக' என்றாவது, 'பாம்பு பிடுஙக' என்றாவது ஒரு சாபம் பின் தொடரும். புருஷன வெளியூர் போய ஆறு மாசம் கழிததுத திரும்பி வந்தாலும, மறறவரைப் போல நெருஙகி க்ஷேமம விசாரிததுப பேசலாமா? ஒரு நாழிகை இரணடு நாழிகை பொறுதது ஏதோ தறசெயலாயக கணடவள் போலச சந்திகக வேணடும். பிறந்த அகதது மனிதா வநதால அவருடன அதிகமாயப பேசககூடாது. 'இன்னும் ஒரு நாள இருஙகளேன்' என்று தன வீடாகப பாவிதது உபசாரம் பணணலாகாது.

நான் ஒரு தடவை என் தமககையைப் புககததில பாாககப போனேன். எதிா வீடடுக்காரரை நலல வாாததை சொலலி, அவாகள் ஏதோ காரியததுககுக கூப்பிடடதுபோல கூப்பிடச சொலலி நாலு வார்த்தை

பேசிவிட்டு வந்தேன். மற்றொரு சமயம் ஒன்று விட்ட தமையனார் பெண்ணை அவள் புக்ககத்தில் காணப் போனேன். காலையில் எட்டு மணி இருக்கும். அவள் மைத்துனன் என்னைத் திண்ணையில் உட்கார வைத்து, 'காலைவேளையில் வேலை அதிகமாய் இருக்கும்போது வந்தீர்களே. ஐந்து நிமிஷம் பேசித் திரும்புங்கள்' என்றான். பெண்ணிடம் இந்த ஆக்ஞையைச் சொன்னதும், 'ஐந்து நிமிஷந்தான் எதற்கு? பார்த்தாகி விட்டது. போய் வாருங்கள்' என்று விடை கொடுத்து விட்டாள். அந்த மைத்துனன் ஹைகோர்ட்டு வக்கீல்; நான் அப்பொழுது ஹிந்து ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர். பெண்ணுடைய அகமுடையான் ஒரு வாயில்லாப் பூச்சி.

எல்லா மாமியாருமே பொல்லாதவர்களா? நாட்டுப்பெண்ணை நன்றாய் வைத்துக்கொள்கிறவர்களும் உண்டு. ஆபீஸ்களில் எப்படிச் சில எஜமானரிடம் சேவிப்பது சந்தோஷமாயும் வேறு சிலரிடம் சேவிப்பது சங்கடமாயும் இருக்குமோ அப்படித்தான். பிறர் மனம் நோவாமல் நடந்துகொள்ளவேண்டும் என்கிற புத்தி படிப்பால் வருகிறதன்று; பணத்தால் வருகிறதன்று; குலத்தால் வருகிறதன்று; பிறப்புடன் வருகிறது. 'இயற்கைப் பெரிய மனிதர்' (Nature's Gentlemen) என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே, அப்படியே இயற்கைப் பெரிய மனுஷிகளும் இருக்கிறார்கள். நாட்டுப் பெண்ணின் அதிருஷ்டம் என்று கூற வேண்டும்.

சீக்கிரத்தில் பிள்ளையைப் பெற்றால் புண்ணியசாலி எனலாம். மலடிக்கும் பெண்களைப் பெறும் ஸ்திரீகளுக்கும் இந்த உலகத்திலேயே நரகந்தான். நேரில் வாய் கூசாமல், வருகிறவர் போகிறவர் எல்லாரும் அசட்டையாய்ப் பேசுவார்கள். மூத்தாள் போய் இளையாளாய் வாழ்க்கைப்படும் ஸ்திரீகளுக்கு வேறு எந்தத் துன்பமு

கள் இருந்தாலும், மாமியார் நாத்தனார் படுத்தல் அதிக நாள் இராது. புருஷனுக்குக் கொஞ்சம் கண் திறந்திருக்கும். மோகமாக இருப்பான். தானே கவனிப்பான். இதுதான் ரகசியம். அகமுடையான் பிரீதியாக இருந்தால் வேறு ஒருவரும் கொடுமை காட்டமாட்டார்கள். முக்கால் வாசிப் பிள்ளைகளுக்கு இது தெரிகிறதில்லை. தெரிந்தாலும் அதை வெளியிடுவதற்கு மனத்திடம் சீக்கிரத்தில் வராது. தகுந்த காரணம் இல்லாமல் நாட்டுப் பெண்ணைத் தள்ளிவைத்துப் பிள்ளைகளுக்கு மறு கலியாணம் செய்து வைக்கிற தாயார் முன்னாளில் அதிகம். ஆனால் வெகுவாய் இளையாளாய் வரும் பெண்கள், மாமியாரைச் சீக்கிரத்தில் அடக்கி மூலையில் உட்கார்த்துவார்கள். ஆண்டவன் செயலில் ஒருத்தி கஷ்டம், மற்றொருத்திக்குச் சுகமாய் முடியும்.

உள்ளே நடக்கும் சம்பவங்களை வெளியே சொல்ல யாரும் தயங்குவர். பிறர் உதவி கிடையாது. அடித்துக் கத்தினாலுங் கூட அக்கம் பக்கத்தார் ஏனென்று கேட்பது மரியாதையல்ல 'தாலி கட்டினவன் எல்லா உரிமையும் உள்ளவன். நாம் குறுக்கிடப் பாத்தியம் இல்லை' என்று பார்த்துக்கொண்டே இருந்துவிடுவார்கள் நான் சிறு வயசில் கண்ணால் பார்த்த அக்கிரமமும் கொடுமையும் கணக்கில்லை எழுதினால் புஸ்தகமாகும். எங்களூரில் பெரிய குடும்பத்தில், ஒன்பது மாசம் கர்ப்பம் சுமந்த பெண்ணை மாமியார் தூண்டுதலால், புருஷன் வெயிலில் வெகு நேரம் நிறுத்தி அடித்துக் கீழே தள்ளி, வயிற்றில் காலால் உதைத்துக் கொன்று, வழக்கு, கோர்ட்டுக்குப் போகாமல் போலீஸாரை வசப்படுத்தி அமுக்கியதை அறிவேன். ஒரு பத்திரிகையில் கதையாக இதை வரைந்திருக்கிறேன்.

கற்பு விஷயத்தில், ஆடவர்களை விடப் பெண்டிர் ஐம்பது மடங்கு மேலானவரென்று சந்தேகம் இல்லா

மல் சொல்லலாம். இது நம் ஜாதிககுப் பெருமை தான். வலஙகைமானில வெளிபபடையாகக கெடட ஸதிரீகள, எனககுப் பதினைந்து வயசு நடககுமபோது இரணடே போதாம். தெரிநததும் தெரியாததுமாய இன்னும் இரணடு மூனறு போ இருககலாம். அவா களுககு இவவள்வு உயாவு வருவதறகுக காரணம், பெரும்பாலும் நாம் ஏறபடுததி இருககும் நிாப்பந்தமும் கடடுபபாடுமே. இவைகளை வரவரத தளாந்து வருகின் றன். நவ நாகரிகம் வேணடுமென்று ஸ்திரீ ஜாதிககு முனனேறறம தேடுவோா, அவாகளுடைய நடததை யைபபறறி ஏதாகிலும் காதில படடால, இது தீரா தென்று மனததை ஒருவாறு சமாதானப் படுததிக கொளவது அவசியம் கெடுதல கலவாத நனமை பிரமனுடைய கற்பனையில இலலை.

பெண்டிர் சம்பாஷணை

பழககம், நோககம், தொழில, கோஷடி எலலாம் வேறாக இருக்குமபோது, பெணடிாகளின சம்பாஷணை வேறு படாதா? பெணடிா மடடும் கூடிப் பேசுவதை நாம் கேடக அவகாசம் வெகு குறைவு. நம்மைப் பொருடடாக நினைககும வயசு வருமுன நோந்த அநுபவந்தான் முககிய ஆதாரம். மற்றதெலலாம் கேளவி மூலமும் ஊக மூலமுமே அறிந்தவை. வீண வம்பு பேசுவதில நமககுச சறறேனும் அவாகள் பின வாஙகாா. ஒருவரை ஒருவா பூஷிபபதிலும் தூஷிப் பதிலும் பரீகைஷ வைததால அநேக ஸதிரீகள டாகடா பட்டிககுத தகுதியுளளவாகள. நாவில நரம்பே இலலாமல திடடுவதில, திருவிடைமருதூாப் பெண களுககு நிகரிலலை எனபது பிரசிததம.

நான ஒரு சமயம நேரில இதை அநுபவிததேன். திருவிடைமருதூாச சிமாடடியை மணம் புரிந்த சிநேகிதா ஒருவா வீடடுககுப் போஜனத்திற்குச்

சென்றேன். முன்பே அறிவித்திருந்தாலும் சமையல் பிரயத்தனத்தைக் காணவில்லை. என்னவென்று கேட்கப் போன கிருகஸ்தர் திரும்பி வந்து என்னுடன் உட்கார்ந்தார். அவருக்கு முகத்தில் ஈ ஆடவில்லை. சமாசாரம் என்னவென்று விசாரிக்க எனக்கு மனம் துணியவில்லை. இந் நிலையில் அந்த அம்மாள் குரல் செவியில் எட்டத் தொடங்கியது. சின்னத் தூறலில் ஆரம்பித்துப் பெரு மழை சொரிவது போல், சில மொழிகளை மெதுவாகச் சொல்லிச் சூடேறியதும் சத்தம் ஓங்கி, அதிக வேகமாகத் தன் குறைகளை முறையிட்டாள். வாழ்க்கைப் பட்டுப் புருஷன் அகத்துக்கு வந்தது முதல் தான் பட்ட சிறுமைகளையும் அவமானங்களையும் வரிசையாய் அடுக்கவே, முதலில் திக்கப்பட்ட என் நண்பர் புன்சிரிப்புச் சிரிக்கத் தலைப்பட்டார். சில நிமிஷங்களுக்குள் சரித்திரம் சமத்காரத்தையும் உயர்ந்த நடையையும் பெற்றது. கிருகஸ்தர் கைகொட்டிச் சிரிக்க, அவருக்குச் சித்தம் புரண்டதென்று சந்தேகித்தேன். அவர், தாம் இவ்வளவு காலம் கேட்டதில்லை யென்றும், எனக்காக என்று வெகு காலம் அடக்கிவைத்திருந்து வரிசை யெல்லாம் காட்டுகிறதாகவும் சொன்னார் எனக்கும், புஸ்தக வாசனையே தெரியாத ஒரு குக்கிராமத்துப் பெண் தட்டுத் தடங்கல் இல்லாமல், சொன்னதைத் திருப்பிச் சொல்லாமல் தாரையாக மொழிவதைக் கேட்க, உட் புகுந்து ஏதோ ஒரு பூதம் அவள் வாய்மூலம் தன் வித்தையைக் காட்டுகிறதோ என்று தோற்றியது. வீட்டில் உள்ள மற்றப் புருஷர்களை, 'மாசக் கடன்காரன், வாரக் கடன்காரன், நித்தியக் கடன்காரன்' என்று வகை வகையாய்ப் பிரித்துக்கொண் டிருந்தாள். நான் கேட்டிராததையும் படித்திராததையுமான உபமானங்களும் பழமொழிகளும் சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமாய், ஒன்றன்பின் ஒன்றாய் வெளிவந்தது, மிக்க வியப்பாக இருந்தது. சுமார் முக்கால் மணி இந்த

நாடகம் நடைபெற்றது. ஓய்ந்ததும் எங்கள் இருவருக்கும் பசி தாகம் இல்லை; கோப தாபம் இல்லை; அந்த அம்மாளிடம் ஒரு நாளும் இல்லாத நன்மதிப்பு எனக்கு உண்டாயிற்று. ஏதோ முற்பிறப்பின் வாசனை; வெளியாவதற்கு அநுகூலமான கால தேச வர்த்தமானங்கள் ஏற்பட்டவுடன், அவளும் அறியாது, மலர்ந்து கோலம் செய்தது என்று எண்ணினேன்.

புதுச் செய்தி கேட்டால், அதற்குக் கொஞ்சம் 'மூக்கு முழி' வைத்து, ஊரெல்லாம் விளம்பரம் செய்பவர் சிலர் உண்டென்று எல்லோருக்கும் சொந்த அநுபவத்தால் தெரியும். இந்தக் கியாதியைப் பெற்ற கிழவி ஒருத்தி வலங்கைமானில் இருந்தாள். இவளுக்குப் போட்டி ஒரு சுமங்கலி; வீடுகளில் காரியம் செய்து பிழைப்பவள். பெரியகத்துப் பாட்டியும் காரியக்காரி காமுவும் ஊரை இரண்டாகப் பிரித்துக் கொண்டு அநேகமாய்ச் சந்திப்பதில்லை. ஒரு சமயம் இவ்விரண்டு வம்பரும் ஒரு வளைகாப்புக் கூட்டத்தில் ஏக காலத்தில் வந்து சேர்ந்தார்கள். காரியக்காரி நழுவப் பார்த்தாள்.

"இந்தாடி காமு, போகாதே. இன்னிக்கு என் கதைதான் ஒசத்தி. நீயும் இருந்து கேளு" என்று மூட்டையை அவிழ்த்தாள் கிழவி: "எங்க அடுத்தாத்துக் கல்யாணம்? வேணுமின்னுக் கேளு வேண்டாட்டா விச்சாயிரு. மூணு நாள் ரொம்ப அழகா, சண்டை பூசல் இல்லாதே நடந்தது. வேணுமின்னுக் கேளு வேண்டாட்டா விச்சாயிரு. திருஷ்டிப் படப் போறதே இன்னு சொல்லிண்டிருந்தோம். இன்னிக்குச் சாயங்காலம் பச்செ பூசினதும் சம்பந்திகள் ஒத்திக்கொத்தி ஏசிக்கிண்டா. வேணுமெல்லாம் ரெண்டு கட்சிக்காரியும் பாடிண்டு. வேணுமின்னுக் கேளு வேண்டாட்டா விச்சாயிரு. பிள்ளையாத்துக்காரி ஒருத்தி தேம்பி அழ ஆரம்பிச்சுட்டா. என்ன என்னன்னு கேட்டா, சொன்

ணுத்தானே! தேமேன்னு நம்ம கல்யாணிக்குப் பயம் பிடிச்சுட்டுது. 'அருமையா முத முதல் ஒரு கல்யாணம் பண்றேன். சரியா நடக்கணுமேன்னு எத்தனையோ ஆண்டவனை வேண்டிக்கொண் டிருக்கேனே! எந்தப் பாவியோ கண்ணை வெச்சுட்டாளே!' என்னு ஏங்கிப் போயிட்டா. வேணுமின்னுக் கேளு வேண்டாட்டா விச்சாயிரு. அந்தம்மா அழுகை நிக்கல்லே. கேட்டால் சொன்னுத்தானே? சம்பந்தியம்மாவுக்குத் தம்பி ஆமண்டையாளாம். அவளும் எத்தனையோ பாடினு. வேணுமின்னுக் கேளு வேண்டாட்டா விச்சா யிரு. கல்யாணப் பெண்ணை யாரோ, 'நீயும் பாடேண்டி, நோக்குத் தெரியுமே' என்னு கிளப்பி விட்டுட்டா. வேணுமின்னுக் கேளு வேண்டாட்டா விச்சாயிரு. அது தேமேன்னு சாது, பாடலாமாக்குமின்னு, 'தாவாரத் திலே தட்டாேனாடு போறுளே தையூ' இன்னு பாடினு. அந்தம்மாக்குத் தையூன்னு பேராம். தட்டான் எழவும் கொஞ்சம் உண்டாம். வேணுமின்னுக் கேளு வேண்டாட்டா விச்சா யிரு. கொழுந்தெ கண்டுதோடி? அதும்பாட்டுக்குச் சொல்லிப்பிட்டுது. 'தெரிஞ்சு வேணுமின்னுதான் பாடித்து. நானேன் வந்தேன்? சிவனேன்னு அடைச்சுக்கிண்டு கிடக்கப்படாதோ?' வேணுமின்னுக் கேளு வேண்டாட்டா விச்சா யிரு, இப்படியெல்லாம் கூச்சல் போடவே புருஷா காதிலே யும் பட்டுட்டுதாம். நாளைக்கு ஆசீர்வாதத்துக்குள்ளே, காலிலே விழுந்து கன்னத்திலே போட்டுண்டால் ஒழிய நடக்கப் போறதில்லையாம்; போயேன்! வேணுமின்னுக் கேளு வேண்டாட்டா விச்சா யிரு."

"காலிலே விழுந்து கன்னத்திலே போட்டுண்டா என்ன? அப்படி வணங்கித்தான் போகணும் பொண் ணைப் பெத்தவள்" என்றாள் காரியக்காரி காமு.

"நான் அப்படித்தான் சொன்னேன். வேணு மின்னுக் கேளு வேண்டாட்டா விச்சா யிரு. அத்தோடு

போயிடும் அது. புருஷா வரைக்கும் போயிட்டு தோன்னோ? அந்தப் படுபாவி இருக்கானோன்னோ: ஒத்தன், நம்மூர்ப் பேரைக் கெடுக்கிறத்துக்கு: வெண்டைக்காக் குப்பன்! வேணுமின்னாக் கேளு வேண்டாட்டா விச்சாயிரு. இதுதான் சமயம்; வெசை வெச்சு அம்பது ரூபாய் பிடுங்கிடணுங்கிறாணும். இந்தப் பொண்ணைப் பெத்தவன், 'நானெங்கே போவேன், அம்பது ரூபாய்க்கி?' என்கிறாணும். ஒரே கொழுப்பமாய்க் கிடக்கு. வேணுமின்னாக் கேளு வேண்டாட்டா விச்சாயிரு. நான் வந்துட்டேன். ஒங்களண்டே சொன்னாலொழிய நேக்குத் தீரல்லே."

காரியக்காரி காமு இந்த இடத்தில் தன் பிரசங்கத்தைத் துவக்குகிறாள்:

"அதுக்கு மேலே கொழுப்பமாகக் கிடக்கு, வடக்குத் தெரு சீதையம்மா ஆத்திலே. நமக்கேன் பெரிய மனுஷாளாத்து வம்புன்னு பேசாமே இருந்தேன். கிழவி கதையைக் கேட்டதும் தாங்கல்லே. சொல்றேன்: தோப்பனுக்கும் பிள்ளைக்கும் சண்டை கைகலந்து போய்க் குடுமியைப் பிடிச்சுண்டுட்டா. வம்புக்காரீம்பாளே என்னெப் பிடிச்சு. நானாச் சொல்லலே பாருங்கோ. சீதையம்மா பொண்ணைப் புக்காங் கொண்டுவிடப் போனா. மாமனார்க்காரர் உள்ளே வரப்படாதுன்னுட்டாராம். எப்படியானும் நொழஞ்சுட்ற தின்னு பொண்ணை இழுத்துண்டு சீதையம்மா போனா. அந்தப் பிராம்மணன் கையை விரிச்சுண்டு, தெரியும் சேதீன்னு மறிச்சுட்டார். மாமியாரும் ஆம்படையானும் பாத்துண்டுதான் இருக்கா. இதெல்லாம், நான் ஏழை சொல்லப்படாது. மனசு கேக்கல்லே. சாந்திக் கல்யாணத்தே பிடிச்சு ஏதோ அட்டிகை விஷயமாத் தகரார் இருக்காப் போல் இருக்கு. நூறு ரூபாய் குடுக்கணும் இங்கிறார் சம்பந்தி. குடுக்கிறதில்லேங்கிறார் சீதையம்மா ஆத்துக்

காரா அதுககாகததான், ‘பொண வேணடியதில்லே, நீஙக்ளே வெசசுக்கோஙகோ’ இஙகிறுா தாயாரும பெணணும திருமபி வந்துடடா வந்தது முதல ரோதனை தான. இருககுமோனனோ? பெதத வயறு எரியாதா? ‘இவளுககேன கொழுபபு? இவளை யாா சொலலச சொலறு’னனு சொலலாதேயுஙகோ. பொணணுககு ஓடபபறநதான, தலையெ அடகு வெசசாவது குடுததுடுவம், மானம் போறதேஙகிறுன். தோபபனுா படாதுஙகறுா இபபடி உணடோ ராஜயததிலே! நான நாலெடததிலே சமையலுளளே யெலலாம் போயப பொழைககிறவள. எம் பேரிலே குததஞ் சொலலாதேஙகோ. இததனை வயசிலே நான் இந்த மாதிரிப பாாததிலலே. ‘வாழாதேதான இருககடடுமே; அவாததிலே இலலையா, இவாததிலே இலலையா’ இன்னு ஒரு தோபபன கேககறது? சீதையம்மா நாககெப் பிடுஙகிணடு சாறேஙகிறு. பொண ணுககா, அழுது அழுது மூஞசி அப்பமா இருககு. கணராவியாயிருககு. அவாதது வாசலோடு போற போதெல்லாம உளளே போய ஒரு வாாததை ஆறுத லாச சொலலிவிடடுததான போவேன். தளளி வெச சுடடு வேறே கலயாணம் பணணிவிடடால, எனன செயவேனனனு, மாஞ்சு சாகிறு, பாவம்! பகவான நீலேஙகிறுளே, இபபடிததான நீலே (லீலை) பணண ணுமோ! அவரை யாா கேககறது? தலையிலெழுதது! அவாவா, போன ஜன்மததிலே பணணின பாவம் விடுமா? இதோ பாருஙகோ, எனனெ விடடுதா? போாக காரியம் குமிஞ்சு கிடககு. நான்தானே சேசாகணும்? போயிடடு வரேன்.”

சிரத்தைக்கு என்ன வேண்டும்?

தொன்றுதொட்டு வரும் மதத்தின்கண் நமக்கு இருக்கும் நம்பிக்கைக்கு என்ன காரணம்? தாய் நாடா? அறிவை ஊட்டும் நூற்பயிற்சியா? முறைப்படி வழங்கும் சடங்கா? சுற்றி நடைபெறும் விழாக்களா? ஸ்தல யாத்திரையா? பட்டினி, விழிப்பு, பூசை முதலிய அநுஷ்டானமா? இவையொன்றும் இன்றி மனிதருக்குத் தெய்வ பக்தி இருத்தல் கூடும் உண்மையில் அது வேறொன்றைப் பொறுத்து நிற்பதில்லை. இந்த ஆழ்ந்த தத்துவத்தை அவரவர் தத்தம் அநுபவத்தால் உணர்ந்திருப்பர். எனக்குத் தெரிந்தவைகளுள் அயல்நாட்டு அநுபவங்கள் மூன்றைக் கூறுகிறேன்.

1

1922-ஆம் வருஷத்தில் நியூஸீலண்ட் என்னும் 'டொமினியனி'ல் குடியேறிய இந்தியருக்கு மற்ற இனத்தாரைப் போலவே உரிமைகள் கிடைக்கவேண்டுமென்று வழக்காடப் போனேன். அவ்விடத்து ராஜதானியான வெலிங்டன் நகரில் என்னைக் காண ஓர் இந்தியர் வந்தார். நல்ல உடை அணிந்திருந்ததாலும், நிலை, நடை, பேச்சுத் தோற்றங்களாலும் பெரிய மனிதரென்று அவரைக் கருதினேன். வழக்கமான கேள்வி கேட்டு விடைபெற்ற பிறகு, வந்த காரியத்தை விசாரிக்கலானேன். அவர், துறைமுகத்தில் பளுவான சாமான்களை ஏற்றி இறக்கிப் பிழைப்பவர்; நாளொன்றுக்குச் சுமார் பத்து ரூபாய் கூலி பெறுவார்; குடியிலாவது அது போன்ற வேறு வழியிலாவது பணச் செலவு செய்யாமல் பாங்கியில் தக்க தொகை உள்ளவர். இந்தியாவுக்குத் திரும்ப வேண்டும் என்கிற ஆவல் அவருக்கு வலுத்தது.

ஐக்கிய மாகாணத்தில் கங்கையின் வட கரையில் உள்ள ஓர் ஊரில் அவர் பிறந்தார்; ஊர்ப் பெயர் சரியாக நினைவில்லை. பிராம்மண ஜாதியாம். அவர் மூன்றும் பிராயத்திலேயே வெளியேறினவர். கொடிய பஞ்ச காலத்தில் எவனோ கங்காணி, கூலியாட்களைச் சேர்ப்பதற்கு வந்து ஆசை காட்டி முன் பணம் கொடுத்து அவர் தாய் தந்தையரை அழைத்துக் கப்பலேற்றிவிட்டான். ஆஸ்திரேலியாவில் ஸிட்னி நகரில் துறைமுகத்தில் வேலை செய்து பிழைத்திருந்தார்கள். நாலைந்து வருஷங்களில் முதலில் தாயும், பிறகு தந்தையும் இறந்தார்கள். அவர்பால் இரங்கிக் குழந்தை இல்லாதவர் ஒருவர் காப்பாற்றி வந்தார். சில வருஷங்களான பிறகு அவர் தாமாகவே பிழைக்கத் தெரிந்து வெளிநாட்டுக் கப்பலில் ஏற்றுமதி இறக்குமதியில் நல்ல வேலைக்காரரென்று பெயர் வாங்கி வந்தார்.

நான் எவ்விதம் உதவ வேண்டுமென்று கேட்க, அவரால் சரியாய் உத்தரம் சொல்லக் கூடவில்லை. ஊர் தெரியாது; உற்றார் தெரியாது; மீண்டும் ஜாதியில் புகுதல் வேண்டும்; பிராமமணப் பெண்ணை மணந்து குடும்பத்தை விருத்தி செய்ய வேண்டும். திரவியத்தால் தடை இல்லை. 'கோத்திரம் தெரியுமா?' என்று கேட்டேன். அவருக்குக் கோத்திரம் என்றால் இன்ன தென்பதே புரியவில்லை.

"பூணூல் உண்டா?" என்றேன்.

"தகப்பனார் மார்பில் அணிந்திருப்பதைக் கண்டது உண்டு. அது வேண்டுமானால் உங்களால் கொடுக்க முடியாதா? எவ்வளவோ காலம் மேற்பிறப்பினரான இந்தியரைப் பார்ப்போமா என்று ஆவலுடன் காத்திருந்து சாஸ்திரி என்று பெயர்கொண்ட ஒருவர் வந்தபொழுது கரையேற்றம் பெறுவிடில் எப்பொழுது தான் பெறுவேன்!"

இவ்வாறு அவர் மனமுருகப் பேசக் கேட்ட நான் திடுக்கிட்டேன். "என்னால் ஒன்றும் இயலாது. உம்முடைய விருப்பம் நிறைவேறாது" என்றேன்.

வீணாக அவர் ஆசையைப் பெருக்கக் கூடாதென்பது என் எண்ணம். என் மொழியின் உறுதியைக் கேட்டவுடன் அவர் இருதயம் உடைந்ததுபோலும்! கலகலவென்று கண்ணீர் சொரிய, "ஆனால் நான் இங்கேயே வயிறு வளர்த்துப் பவுனைச் சேமித்தது ஆத்மாவை அழித்துவிட்டுச் சாக வேண்டியதுதானா?" என்று கைக்குட்டையால் முகத்தை மூடித் துக்கித்தார்.

'மரத்தினின்று சிதறிக் காற்றில் ஓடிப்போன சருகுக்குப் பசுமை மீளுமோ?' இந்தக் கருத்து என் மனத்தில் தோன்றியது. நான் அதை அவரிடம் சொல்லவில்லை. கூடினவரையில் ஆறுதல் சொன்னேன். "நல்லது பொல்லாதது, புண்ணியம் பாபம் என்கிற பகுத்தறிவு உண்டாவதற்குமுன் நிகழ்ந்த கேட்டுக்கு நாம் ஜவாப்தாரிகளல்ல. கருணாமூர்த்தியான கடவுள் நம்மை அதற்காகத் தண்டிக்க மாட்டார்" என்றேன். இது அவர் புத்தியில் ஏறவில்லை. "ஆரிய ஸமாஜிகள் இங்கே இருக்கிறார்களா?" என்று கேட்டேன்.

"இருக்கிறார்கள். அவர்கள் செய்யும் சுத்தியால் பிராம்மண அந்தஸ்து வராதே. எனக்கு மற்றொன்றும் தேவையில்லை" என்று முடிவாய்ச் சொல்லிவிட்டார்.

மதத்தை ஒட்டின சமாசாரம் ஒன்றும் தெரியாத அவருக்குத் தீராக் கவலையை விளைவிக்கத் தகுந்த சிரத்தை எங்கிருந்து வந்தது?

2

ஐந்து வருஷத்திற்கு அப்பால் நான் தென்னாப்பிரிக்காவில் இருந்தபொழுது, ப்ரிடோரியா என்னும்

பட்டணத்தில் பட்டேல் என்ற பெயர் கொண்ட ஒரு குஜராத்திப் பிராம்மணர் இருந்தார். வேறு பிராம்மணர் அந்த ஊரில் இல்லை. ஒரு நாள் சாயங்காலத்தில் என்னை அவர் தம் வீட்டுக்கு அழைத்துப் போனார். அங்கே தம் மகன் பதினெட்டு வயசுள்ள சிறுவனை அழைத்து நமஸ்காரம் செய்யச் சொன்னார். அவன் ஸாஷ்டாங்கமாய்ப் பிரணாமம் பண்ணி என் பாதத்தைக் கைகளால் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டான். கோத்திரம், பிரவரம், நாமம் ஒன்றும் தெரிவிக்கவில்லை. நான் அவைகளைக் கேட்டுத் தெரிந்துகொண்டேன். அன்றுதான் அவனுக்கு உபநயனம் பண்ணினாராம்.

"உபாத்தியாயர் யார்?"

"நான்தான்."

"நீங்கள் என்ன மந்திரம் சொன்னீர்கள்? என்ன சடங்கு செய்தீர்கள்?"

"எனக்குக் காயத்திரி தவிர வேறு ஒன்றும் தெரியாது. அந்த மட்டும் சொல்லி வைத்தேன்."

"எங்கே, என்னிடம் சொல்லுங்கள்."

ஏதோ எழுத்துப் பிழைகளுடன் சொன்னார். சில அசௌகரியங்களால் கூஜராத்துக்குப் போக முடியாமற் போனதாகவும், இன்னும் இரண்டு வருஷங்களுக்குப் போக முடியாதென்றும், யக்ஞோபவீதத்தை ஊரிலிருந்து வருவித்ததாகவும் கூறினார். அது எனக்கு வெகு விநோதமாக இருந்தது.

"உங்களகத்தில் இருந்தால் எப்படி நடந்திருக்கும்?" என்று கேட்டேன்.

"பந்துக்களை அழைத்து அக்கினியில் ஹோமங்கள் செய்து, வாத்திய முழக்கத்துடன் விரிவாய்ச் செய்திருப்போம்" என்றார்.

"ஹோமமில்லை, மந்திரமில்லை, தந்திரமில்லை, முழக்கமில்லை, தக்ஷிணை இல்லை, விருந்து இல்லை; இந்த உபநயனம் உபநயனமாகுமா?"

"ஏதோ ஆகுமென்ற நம்பிக்கைதான்."

"நம்பிக்கைக்கு ஆதாரம் வேண்டியதில்லை போலும்!"

"அயலூரில், அயல் நாகரிகம் அயல் மதம் இவைகளிடையில் சிக்கிய எங்களுக்கு ஒரு போக்கு வேண்டுமே!"

இது கேட்டு, "ஆமாம்" என்று மெதுவாய்ச் சொல்லி யோசிக்கலானேன். அநாதியாய் வழங்கி வரும் நடைகளின் மர்மத்தை இப்பொழுது அறிவது இயலாதது. வெளி ஆரவாரத்துடன் உள்ளத்து உணர்ச்சியும் ஒன்றொடொன்று இணைந்து வலிமைகொண் டிருக்கின்றன. சொந்த நாட்டு இயற்கையில் இவை கூடியே இருத்தலால், 'இது காரணம், இது காரியம்; இது ஆதாரம், இது ஆதேயம்' என்று பிரித்து ஆராய முடியவில்லை. வேற்று நாட்டிலோ வெளி ஆடம்பரங்களுக்கு இடம் கிடையாது. உள்ளத்தில் ஆழ்ந்து கிடக்கும் சிரத்தையும் பக்தியும் குன்றுத் எழும். ஹோமமும் மந்திரமும் இருந்தால் சிரத்தை உண்டு என்பது நிச்சயமல்ல. அவை இல்லாமலும் சிரத்தை விளங்கும்.

3

மலேயாவில் ரப்பர் தோட்டம் முதலிய இடங்களில் கூலி வேலை செய்து பிழைத்து வரும் இந்தியரின் நிலையைப் பற்றி விசாரிப்பதற்கு ஐந்து வருஷத்துக்கு முன் சர்க்காரால் அனுப்பப் பெற்றுச் சென்றேன். இவர்களில் சிலர் தோட்டத்தார் கொடுத்த நிலத்தில் தாங்களே வீடு கட்டிக்கொண்டு பயிர் போட்டுப்

பலனை சொந்தமாக உபயோகித்து, குடியேறியவா களாயக கிராமம் கிராமமாகக கூடி வாழ்கிறாாகள். பரீக்ஷாாததமாகத துவககிய இந்த ஏறபாடு நிலைபெறறு நம் ஜனஙகளுககுப் புது ஸதலததில குடியேறி ஸமஷ்டியாய் வாழத திறன உணடு எனறு காட்டி வருகிறது.

இந்த இடததைப பாாப்பதற்கென்று ஒரு நாள் காலையில அழைததுப் போனாாகள். புறபபடும்பொழுது நிகழசசி முறையில சுபபிரமணியா கோயிலில வேல ஊனறுதல எனறு கணடிருந்தது. எனககு அது புரியாத தால எனனவெனறு விசாரிததேன. அவாகள தெரியப் படுததவே, "எனககு ஆகம நூல தெரியாது அதில நியமிததிருககும் முறை தெரியாது. நான் பெயருககு மட்டுமே சாஸ்திரி" எனறு சொலலித தபபபா பாாததேன.

"ஆயிரக்கணககான மனிதர்கள் - ஆண, பெண, குழநதைகள அனைவரும் கூடிக காததுககொண டிருக்கிறாாகளே. நீஙகள எபபடி மறுபபது? நாஙகள எபபடி நிறுததுவது?"

இதைக கேட்டதும என வயிறறில நெருபபைக் கட்டியதுபோல ஆயிறறு ஆஙகில ஆடை ஒரே ஈர மாயிறறு அனறு நலல வெபபம். காறறு லேசமேனும் இலலை

கீற்றுப் பந்தலொனறு பெரிதாக அமைந்திருந் தது. பநதலுககுளளும் வெளியும் ஜனஙகள நிறைநதைக் கணககிட்டு முடியாது அதைக கணடதுமே எனககுக் கிலி பிடிததது பந்தல கோடியில ஒரு செஙகல மேடையில ஒரு சிறு ஓவியததை முருகனெனறு காட்டினாா. சந்தனம, குஙகுமம், ஊதுவததி, தேஙகாய, வெறறிலை, பாககு, கறகணடு, சாககரை, புஷபம, வாழைப் பழம எலலாம் கூட்டததுககு ஏற்ற அளவுக்குக குவிததிருந் தன. மேளம் வாசிததுக்கொண டிருந்தாாகள். தப்பட்

டையையும் ஒரு பக்கத்தில அடித்தார்கள். மேடையருகில, உயிர்ச சேதம் நேரிடுமோ என்று பயப்படும்படி நெருக்கம. விலகுவோரும் இலலை; விலககச் சாததியமும் இலலை. நான மாரபு வலி வந்து மூனறு மாததிரை தினறு எப்படியோ பலலைக கடிதது விழாமல நின்றேன. என்னுடன வந்த ஜி. எஸ். போஸமன துரை வெளியிலேயே தஙகிவிட்டார

இனிச செயவது என்ன? பேயககு வாழககைப் பட்டோம், புளிய மரம் ஏறததான் வேண்டும் உள்ளிருக்கும் நடுக்கத்தை வெளிக காட்டலாகாது. உரககக் கனைதது, "வேல எஙகே?" என்று கேட்டேன பளபளவென்று இருந்த ஆயுததததையும் ஈர்மாகி யிருந்த பூமியையும் காட்டினாரகள.

"வேல நாட்டுவதற்கு முன நடதத வேண்டியது ஏதாவது உண்டா? பூசாரி யாராகிலும் இருக்கிறாரா?"

"நீஙகள இருககும்பொழுது பூசாரி வேறு வேண்டுமா? நீஙகளே மணையில அமாந்து பூசை செயதுவிட்டு வேலை நாட்டுஙகள."

எனககு ஆஸனததில அமாந்து யதோகத ஸஙகறபம் செயய இஷ்டமும் இலலை; செய்யத திறமையும் போதாது. "யாராகிலும் வயசு முதிர்ந்தவா, இததகைய சடஙகைப பாாததவா உண்டானால முன் வந்து சமயததுககு உதவுஙகள" என்று வருநதினேன.

"நீ வா, நீ வா" என்று சிலா சொலலிககொண்டாரகளே தவிர, சிறிது நேரம் ஒருவரும் துணிந்து முன்வரவிலலை. இறுதியில சுமாா நாற்பது பிராயம் கொண்ட ஒருவன கூட்டததினின்று வெளிவநதான். அவனைச சிலா தளளி எனமுன் நிறுததினாரகள. அவன, "வேல நட்டின பிறகுதான பூசை" என்று என்னை ஏவினான்.

அதற்கு இணங்கி நான் வேலைக் கையில் பிடித்ததும் வாத்தியமும் கைதட்டலும் சமுத்திரம்போன்ற சத்தமும் கிளம்பின. மேற்றிசை நோக்கி நின்று சுப்பிரமணியக் கடவுளின் படைக் கலத்தை, குறித்த இடத்தில் பலத்துடன் நட்டேன். மூன்று அல்லது நான்கு அங்குலம் இறங்கியிருக்கும். வேலுக்குப் புஷ்பம் சூட்டினர்.

பிறகு அவன் தன் வேலையை ஆரம்பித்தான். மணையில் இரண்டு நிமிஷம் வீற்றிருந்து கண்களை மூடித் தியானம் செய்து எழுந்தான். தண்ணீர்க் கும்பத்திலிருந்த மாவிலைக் கொத்தைக் கையில் எடுத்து நாலு திக்கிலும் தெளித்துச் சுற்றி இருந்தவர் மேலும் விசிறினான். பிறகு பெரிய தாம்பாளத்தில் சூடத்தைக் கொளுத்திச் சமீபத்தில் இருந்தவருக்குக் காட்டினான். இது வரையில் தந்திரம் மட்டும் இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் மந்திரம் சொன்னான். உரக்கச் சொல்லியும் எனக்குக் கொஞ்ச நேரம் இன்னதென்று புரியவில்லை. 'சாந்தயே' என்ற பொழுதுதான் ஸம்ஸ்கிருத அக்ஷரமென்று நிச்சயித்தேன். மீண்டும் அதையே சொன்ன பொழுது 'சுக்கம் பார' என்று தெளிவாகக் கேட்டது. 'சுக்லாம்பரதரம்' என்கிற விக்கினேசுவரத் துதி என்று நிர்ணயித்தேன். இந்தச் சுலோகத்தையே மடித்து மடித்து ஐந்து தரம் மிகுந்த சொற் பிழைகளுடன் கர்ண கடோரமாக உயர்ந்த குரலில் சொன்னான். கர்ண கடோரமென்னும் உணர்ச்சி என் மட்டுந்தான். ஏனையோர் அனைவரும் கரங்களைத் தூக்கியும், அஞ்சலி செய்தும், 'ஹர ஹர!' என்று கன்னத்தில் அடித்துக்கொண்டும் நெஞ்சம் உருகித் தொழுதார்கள். அவர்கள் காட்டிய பக்தியில் எள்ளளவேனும் டம்பமும் இல்லை; சூதும் இல்லை. அந்தச் சமயம் 'சதிர்த்' தேங்காய்கள் அனேகம் உடைபட்டன. அந்தத் துணுக்குகளைச் சர்க்கரை, கற்கண்டு, பழம் முதலியவற்றுடன் பிரசாதமாகச் சிலர் ஜனங்களுக்குக் கொடுத்தனர். சற்றேனும் சக்தி இல்லாவிடி

னும் நிரபபந்தததுககு உள்ளாகிச சில வாாத்தைகளால வந்தனததைக் காட்டி, அவாகளுடைய குடியேறறக கிராமஙகளே அனறு ஆவிாபபவிதத வேலாயுதக கடவுள கருணை கூாநது ரக்ஷிப்பாராக எனறு ஆசிாவதிதது, விடைபெற்றுத திருமபினேன்.

பிரம குலததிற் பிறந்த எனககுத தெயவ காரியத்தில் புகுதற்கு உரிமை உணடென்று அததனை மனிதரும் நம்பி, என் கையால நாட்டப்பட்ட ஆயுததிற்குள கடவுளின தேஜஸ் நுழைந்ததாக அதைக கொண்டாடிப் பூசிததாாகள. இந்தப பெரிய மோசததைச செயத எனககு என்ன தணடனையோ! தரும சஙகடத்தில அகபபட்டு மீள முடியாமல பாவம செயதேன் என்றால மன்னிபபுக கிடைககுமா?

வெறும் இரும்பைச சிரததையாகப பூசிததால புணணியம் உணடோ, இலலையோ? ஒருகால உண்டென்று சாஸ்திரம் ஒபபலாம். புரட்டு மநதிரததை உசசரிதது ஆகம முறைப்படி நடததியதாகக காட்டியவன் எனனைப போனறவனே அன்று நடைபெற்ற காரியத்திற்கு உததேசிதத பலன் உணடா? வியாததந்தானே? அன்று கைகூப்பிப புணணியம் பெறறோம் என்று எணணியவருள் பெரும்பாலாருககுப பூசாரி ஸதானததில இருந்தவனும, நானும் நூலகளில் விதிதத வழியாக நடததவிலலை எனபது நனகு தெரிந்திருககும். ஆனால, 'நமககு என்ன? அவா பாடு. பிழையானால பிழை, நம்மைத் தொடாாது. சிரததையைக • காட்டுவது நம் கடமை. அதைத தவறாது காட்டினோம். சிரததைககு வேணடிய சாதனஙகள எலலாம் ஒழுஙகாயிருககின்றனவா என்ற கவலை நமககு ஏன? சிரதைதை வேறொனறை வேணடி நிற்பதனறு' எனறே அவாகள நினைததாாகள்.

இன்றைப் பொழுது : :
: : போக வேண்டுமே!

பெரிய சாவடி போன்ற ஒரு கட்டடத்தில் தாழ்ந்த கூரையின்கீழ் ஒரு மூலையில் நாற்காலி ஒன்றில் நீண்ட சட்டை, தலைப்பாகை, கோட்டு இவை அணிந்துகொண்டு ஒருவர் உட்கார்ந்திருக்கிறார். அவர் முன்பாகப் பெரியதொரு மேஜை; அதன்மீது பிறரை அழைக்கும் மணி (Call bell), பெரிய கால அட்டவணை ஒன்று, எழுதுவதற்கு வேண்டிய சாமான்கள், இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும் ஓர் அகராதி, பாதி பார்த்தும் பாதி பார்க்காதும் இருக்கும்படியான அன்றைத் தபால்-இவைகள் இருந்தன. அறைக்குள்ளே நுழையுமிடத்தில் அவருடைய ஜோடும் குடையும் இருந்தன. அவருடைய வலது பக்கத்து மூலையில் ஒரு சிறிய மேஜை, அதன்மேல் ஒரு பெரிய ரிஜிஸ்டர், மைக்கூடு, பேனா-இவை இருந்தன. உடம்பில் கோட்டும் இல்லாமல் தலையில் குல்லாயும் இல்லாமல் கேவலம் காங்கிரஸ் உடுப்புப் போட்டவர்களாக ஒவ்வொருவராகவும் இரண்டிரண்டு பேராகவும் பலர் வந்து அதில் கையெழுத்திட்டுப் போகிறார்கள். வாஞ்சி ஐயர் முகத்தில் ஈயாடவில்லை. ஒரு சட்டை மட்டும் அணிந்திருந்த உபாத்தியாயர் சுப்பையா பிள்ளை, ஹெட் மாஸ்டர் மேஜையில் இரண்டு கைகளையும் வைத்துப் பேசுகிறார்.

வாஞ்சி ஐயர்: என்ன, ஊரில் ஏதாவது விசேஷம் உண்டா?

சுப்பையா பிள்ளை: இந்தச் சிறிய ஊரில் என்ன விசேஷம்! பள்ளிக்கூடத்தில்தான் ஏதாவது உண்டா

ஞல் உண்டு. பள்ளிக்கூடம் திறந்து ஒரு வாரம் ஆச்சே. புது வாத்தியார் வந்தாரகளா?

வா புது வாத்தியாரையும் காணோம், ஒரு வரையும் காணோம்.

சு. பி என்ன, நீஙகள் சோமேனுககு விவரமாய எழுதவிலலையோ?

வா: பளளிககூடம் மூடுவதற்கு முந்தியே மூன்று வேலை காலியென்றும் அதில ஒன்றுககு ஹிஸ்டரி எல. டி. யும் மற்றொன்றுககுக கெமிஸ்டரி எல. டி. யும் மூன்றுவதற்கு இன்டாமீடியட படிததுப போதனு முறை பயின்ற நலல அநுபவமுளள வாததியாரும் வேணடுமென்றும், இவாகள பளளிககூடம் திறக்கும் பொழுதே வேலைக்கு வரவேணடுமென்றும் எழுதி, சோமேன் அநுமதி பெற்றுப் பததிரிகைகளில விளமபர மும் போட்டு, கிடைதத மனுககளையெலலாம் என் சிபாரசுடன் அனுபபி மூன்று வாரம் ஆகின்றன. இவ வளவு பெரிய பளளிககூடத்தில மூன்று வாததியார இலலையென்றுல எப்படி வேலை நடககும்?

சு. பி இந்த முனிசிபாலிடியின் கீழ் நானூறு பிள்ளைகளைப் படிப்பிககும் பளளிககூடத்தை நடததும் ஹெடமாஸ்டா பாடு பொலலாப் பாடுதான்.

வா உஙகளுககு அடுதத மணி ஓயவு இருக கிறது கொஞ்சம மூன்றுவது பாரததைப் போயப் பாரததுககொளகிறீரகளா?

சு. பி: உஙகளுககு என் ஓய்வுதான் கணணை உறுததுகிறதோ!

வா. போன வாரமெலலாம் உஙகளைக கேடகாம லேயே எபபடியோ சமாளிததேன். இந்த வாரம நீஙகள் தயவு செயயததான வேணடும்.

சு. பி: முதல் உதவி உபாத்தியாயா என்று பெயர்தான். ஓயவும் கிடையாது; மரியாதையும கிடையாது. அப்படித்தான போக வேணடுமானால், ஐந்தாவது பாரம் ஆறுவது பாரம் இல்லையா?

வா ஐநதாவது பாரததிறகு நான் போக வேணடியிருககிறது. அதில எனககு மறறொரு காரியமும் இருக்கிறபடியால நான அதற்குப போய உஙகளை மூனறுவது பாரததிற்கு அனுபபுவதாக உததேசிததேன.

சு. பி: உததேசந்தானே? உஙகள் மூன்றும் பாரததிறகு நீஙகளே போஙகள.

சுபபையா பிளளை வெளியே போகிறா.

ஒரு பையனை இழுததுககொணடு ஓர் உதவி உபாததியாயா நுழைகிறா.

வா· (தமககுள) ஒரு மணி அதிக வேலை செய்வதறகு, முதல வாததியாரே இந்தப பாடு படுததி, 'அவரிலலையா, இவரிலலையா, நீஙகள்தான் இலலையா!' எனறெலலாம கேடபாரானால, நான் எப்படி வேலை பாாததுப் போ சொலலுகிறது?

உதவி உ ஸாா, இந்தப பையன் வெகு துஷ்டனாயிருககிறான். கோணமாணவென்று கேள்விகள கேடகிறான். பாடம் படிபபதிலலை. இவனால மற்றப பிளளைகள கெடுகிறாகள. இவனைச சிக்ஷிகக வேணடும்.

வா· பொதுவாயத துஷ்டன் எனறால போதுமா? எனன குற்றம் செயதான், சொலலும்! என்ன சிக்ஷிகக வேணடும்? விவரமாயச சொலலும்.

உ. உ· எனனை வகுபபுககு முன்பாக அவமதிப்பாயப் பேசினான்.

வா· எனன ஐயா! அஙகிருந்து இங்கு வருவதற்குள் மறந்தா போசசு, சொல்லுமே!

உ. உ: எனக்குச் சொல்வதற்கு நாணமாய் இருக்கிறது. ஆனாலும் உங்களிடத்தில் சொல்லியாகவேண்டும். 'வெற்றிலையுடன் புகையிலையும் போடுவானேன்? ஒரு நாளும் தவறுகிறதில்லையே?' என்று கேட்டான்.

வா: என்ன, இப்படி ஒருவன் திடீரென்று கேட்பானா! நீங்கள் அவனை ஏதாவது சொல்லிச் சீண்டினீர்களா?

உ. உ: நானொன்றும் சீண்டவில்லை.

வா: என்னடா அப்பேன், தங்கவேலு, என்ன நடந்தது?

தங்: (கண்ணீருடன்) ஸார், நான் வெற்றிலை போட்டுக்கொண்டு வந்தேன். கிளாசுக்கு 'பையன்கள் வெற்றிலை போட்டுக்கொள்ளக்கூடாது என்று சொல்லியிருக்கிறேனே! புத்தி இல்லையா? கடாவா, கழுதையா?' என்றெல்லாம் மிக்க கேவலமாய்ப் பேசினார். எனக்கு இவர் பிராம்மணராக இருந்தும் புகையிலை போடுவது சரியில்லை என்று மனசில் ஏற்கனவே இருந்தபடியால் இன்றைக்கு வந்த ஆத்திரத்தில் ஏதோ கேட்டுவிட்டேன்.

வா: என்ன ஐயா! பையன் சொல்லுவது நிஜமா, புரட்டா?

உ. உ: ஆனால் பையன் வெற்றிலை போட்டால் அதைக் கண்டிக்க வேண்டாமா? கண்டித்தால் அது ஒரு பிழையாகுமா? அதற்கு இப்படித்தான் துடுக்காய்ப் பேசுகிறதா?

வா: தங்கவேலு, நீ சற்று வெளியே போ.

[அவன் போன பிறகு]

வகுப்பில் இவ்வளவு கிளாசசியைச் செய்துவிட்டு, பிள்ளையையும் இழுத்து வந்தீரே! 'இதைத் தனியாக வகுப்பு முடிந்த பிறகு என்னிடம் சொல்லலாகாதா?

இப்பொழுது எல்லாப பிள்ளைகளுக்கும் தெரியுமே? தங்கவேலு வயசான பையன. அவனை வாயில நோந்த படி யெல்லாம் பேசினுல ஒரு நாள அவன எதிரப் பானே என்று கொஞசமும் அசசம் வேணடாமா?

உ. உ பையனகளுககுப் பயந்துகொணடுதான் பாடம சொலலி வைகக வேணடுமோ!

வா அபபடியா நான சொன்னேன? பெரிய பையனைப பிரமபெடுதது அடிககலாமா? ஒரு ரூபாய, இரணடு ரூபாய அபராதம் எனறுல இவனூத தகப்பன மாாகள நம்மை வைப்பாாகளா?

உ. உ பெரிய பையனகளாயிருந்தால அடிககவும் கூடாது; அபராதமும் கூடாது. அவன் போன வழி தான வாததியாா போக வேணடுமோ!

வா நீஙகள சொலலுஙகளேன? இபபொழுது நான் என்ன செயயலாம்?

உ. உ· நானுக இருந்தால கையை நீடடச சொலலி உளளங கையில மூன்றடி பிரம்பால அடிபபேன.

வா அப்படியா! நீங்கள வித்தியா சாஸ்திரம் படிததிருபபீாகளே! நாம செயயும சிக்ஷையானது குற்றததிறகு ஏறறதென்று, சாமானியமாயப பிள்ளை களுககும், சிக்ஷிககபபடும் பிள்ளைகளுக்கும் ஒருவாறு தோன்ற வேணடும எனபாாகளே? இன்றைககு வகுப் பில நடந்ததைப பாாதத பிள்ளைகள, 'தஙகவேலு செயதது கடுங குற்றநதான்; பிரம்படி வாங்க வேணடி யதுதான' எனறு சொலலுவாாகளா?

உ. உ· (கோபத்துடன்) ஓகோ! இப்படியா இருககு தஙகவேலு ராஜ்யம்! எனனை அடிககாமல விடடால போதும்! நான் போகிறேன.

வெளியே போகிறுா.

ஒரு குண்டல தீக்ஷிதரும் சுமார் பதினைந்து வயதுள்ள ஒரு பையனும் நுழைகிறார்கள்.

வா: வரவேணும், தீக்ஷிதர்வாள், ஏது அபூர்வமா யிருக்கிறது! உட்காருங்கோ!

தீ: ஒன்றும் இல்லை... இந்தப் பையன் விஷயமாக வந்தேன்.

வா: என்ன! பையனை அனுப்பினால் போராதோ? என்னடாப்பா, சோமசுந்தரம்!

தீ: இந்தப் பையனுக்குப் பிரமோஷன் கிடைக்கலை. பட்டணத்திலே என் மருமகன் வீட்டிற்கு அனுப்பி விடலாம் என்று நினைக்கிறேன் லீவிங் சாட்டிபிகேட்டுக் கேட்டு வாங்கினேன். அதில் பிரமோஷனுக்குத் தகாத வன் என்று போட்டிருக்கிறது. அது விஷயமாய்த்தான் உங்களை ஒரு வார்த்தை கேட்க வேணுமென்று வந்திருக்கிறேன்.

வா: என்ன விஷயம்?—ஏனப்பா சோமசுந்தரம், உனக்கு ஒரு பாடத்திலகூட வேண்டிய மார்க்குக் கிடைக்கவில்லையே! உன்னைப் பிரமோஷன் செய்ய லாமா?

தீ: ஏலே, நீ ஒண்ணும் சொல்லாதேடா; நான் பார்த்துக்கறேன். நீங்கள் பிரமோஷன் செய்யாத தற்குத் தகுந்த காரணங்கள் சொல்லுகிறீர்கள். உண்மைதான். இவன் மேல் வகுப்பில் படித்தால் பிரயோஜனம் இல்லை என்றுதானே? அந்தச் சங்கடம் உங்களுக்கு இல்லாமல் நான் அவனை வேறு இடத்திற்கு அனுப்பிவிட்டால் பிரமோஷனுக்கு லாயக்குத்தான் என்று எழுதிக் கொடுக்கலாகாதா?

வா: ஐயையோ! தலை போய்விடுமே! இவ்வளவு பெரியவர்கள் பொய் சொல்லச் சொல்லுகிறீர்களே!

தீ: இது ஒரு பொய்யாகுமா? 'பிராம்மண விஷயமாய்ப் பொய் சொன்னால் பொய்யல்ல' என்று ஸ்மிருதியில் சொல்லியிருக்கிறதே!

வா: அந்தப் பழைய தர்மமெல்லாம் இந்தக் காலத்திற்கு உதவுமா? மேலும் நீங்கள் சாஸ்திரம் தெரிந்தவர்கள். பிராம்மணனுக்காகப் பொய் சொல்லலாம் என்றால், பிராம்மணனுக்கு உயிர்ச் சேதம் வரும் போலிருந்து ஒரு பொய் சொன்னால் அவனை அதிலிருந்து தப்பிக்கலாம் என்று நிச்சயமாய்த் தெரிந்தால் மட்டுந்தான் சொல்லலாம் என்று அர்த்தமே ஒழிய, இம்மாதிரி அற்பக் காரியங்களுக்கெல்லாம் பொய் சொல்லலாம் என்று அர்த்தமாகுமா?

தீ: நான் உங்களுடன் சாஸ்திர விஷயமாய் விவாதம் செய்ய வரவில்லை. சாஸ்திர சம்பிரதாயம் தெரிந்தவர்களுடன்தான் இந்தக் கட்சி பேசலாம். அது நிற்கட்டும். இந்தச் சாட்டிபிகேட்டில் கொஞ்சம் மாற்றிக் கொடுங்கள்.

வா: ஆனால் ஒரு சின்ன விஷயத்தில் பொய் சொல்லலாமா என்று தெரிந்துகொள்வதற்குச் சாஸ்திர நியாயங்களெல்லாம் தெரிய வேண்டுமோ! 'விப்ரஸ்ய சார்த்தே' என்றுதானே இருக்கிறது? இதற்கு ஒரு பிராம்மணன் தனக்கென்று, பொய் சொல்லச் சொன்ன பொழுதெல்லாம் பொய் சொல்லி வந்தால் ஊரில் நிஜமென்று ஒன்று இருக்குமோ!

தீ: இப்பொழுது உங்கள் ஸ்கூலுக்கு நான் ஒன்றும் கெடுதல் சொல்லவில்லையே! இந்தப் பையன் உங்கள் ஸ்கூலுக்கு லாயக்கில்லை என்றீர்கள். வேறு பள்ளிக்கூடத்துக்குப் போய் அவன் முன்னுக்கு வருவதில் உங்களுக்கு என்ன சங்கடம்?

வா: நல்லது, நீங்கள் பொறுங்கள். பையனை ஒரு வார்த்தை கேட்கிறேன்...ஏனடா அப்பேன், இங்கே

நாலாவது பாரததில சமாளிககாதவன் நீ; சென்னப் பட்டணம் ஸ்கூல்களில் இரண்டாயிரம பிள்ளைகள படிககுமிடததில போய, ஒருவருடைய கவனமும் கவலையும் இல்லாமல நீயே ஐந்தாம் பாரததில் பாடங்களைப் படிப்பாயா? உனககுத தைரியம் இருக்கிறதா? சென்னப் பட்டணம் போகிறேன் என்று ஏன் பிடிவாதம் பண்ணுகிருய?

சோ ஐயோ ஸார்! நான் பிடிவாதம் பண்ணவில்லையே! என்னை இப்படித்தான் வருஷந்தோறும் பிரமோஷனுககு லாயக்கில்லாதபொழுது சிபாரசுகளெல்லாம் செயது பிரமோஷன் பண்ணி வநதாாகள. இதனாலதான் என படிபபு உபயோகமற்றுப் போய விட்டது. எங்கேயாவது இரண்டாம் பாரம், மூன்றும் பாரததில் இனனொரு வருஷம் போட்டிருந்தால சரிப் பட்டிருககும் இனி மோசந்தான!

வா: கேட்டீாகளா? பையன நலல புத்திமான். அவனை வீணாகக கெடுததுவிட்டீாகள. தூககித தூககி விட்டுப் படிப்பு வருமா? சராஜ்யம்கூடத தெரியாத பிள்ளைககு மீமாம்ச சாஸ்திரம் சொலலி வைககலாமா? நாலாவது பாரததில இனனொரு வருஷம் போட்டுப் பாருஙகள. பிளளை கவலையாயப படிககிறவனாதலால ஒரு கால கோணல நிமிாநதாலும் நிமிரும்.

தீ இதற்குத்தான் இந்தப பயலை என்கூட வர வேண்டாமென்று சொன்னேன். வந்து கழுததை அறுககிருன. போவோம் வா, சண்டாளப் பயலே, போ!

(போனாாகள.)

ஹெட்மாஸ்டா முதல மணி மட்டும் பள்ளிக் கூடக காரியஙகளைப் பாாததுவிட்டுப் பிறகு உளள பொழுதெலலாம் ஓயவாயிருந்த வகுப்புக்களில போய்ப்

பாடம் சொல்லிவைத்து இடை வேளையில் நாலைந்து உபாத்தியாயர்களுடன் உட்கார்ந்து பேசுகிறார்.

வா: நான் அவ்வளவாகச் சகுனம் பார்க்கிறவன் அல்ல. ஆனாலும் இன்றைக்கு வரும்பொழுது குள்ளிச் சுப்பி எதிரில் வந்தாள். வீட்டில் எஜமானி, 'சற்று வந்து உட்கார்ந்துவிட்டுப் போங்களேன்' என்று சொன்னாள். 'போடி பைத்தியம், நடக்கிறது நடக்கட்டும்' என்று வந்துவிட்டேன். இன்று காலமே நடந்ததெல்லாம் விபரீதமாக இருக்கிறது. சாயந்தரம் என்ன நடக்கப் போகிறதோ? இன்றைப் பொழுது போகவேண்டுமே!

முதல் உபாத்தியாயர்: என்ன உங்களுக்கு? மூணு வாத்தியார்தானே வேணும்? உள்ளூரிலேயே மூன்று பேர்கள் இருக்கிறார்களே? போட்டடிச்சுண்டு போறாங்கோன்னுக்கே? இதற்கெல்லாம் மேலதிகாரி உத்தரவு வேணுமென்று பார்த்தால் ஒரு யுகமாகும்.

இரண்டாம் உ: உமக்கு என்ன! நீர் விளையாட்டாய்ச் சொல்லிப் போகிறீர். நாளைக்குக் கமிஷனர், 'அவனை ஏன் நியமித்தீர்? இவனை ஏன் நியமித்தீர்?' என்று கேட்பானே! யார் ஜவாப்புச் சொல்லுகிறது?

மு. உ: "பள்ளிக்கூடம் திறந்தாய் விட்டது. பிள்ளைகளுக்குப் பாடம் நடக்க வேண்டாமா?" என்பதற்கு யார் ஜவாப்புச் சொல்லுகிறது?

மூன்றாம் உ: இப்படி ஜவாப்புச் சொல்லிப் பிழைக்கலாமா? நம்ம கமிஷனர் பச்சை மிளகாயாச்சே?

வா: ஐயா, ஓர் எஜமானாக இருந்தால் ஒரு வேளை சொல்லிப் பிழைக்கலாம். பதினாறு பேருக்குப் பதில் சொல்லி யார் தப்பிக்கிறது? கௌன்சிலர் எல்லோருமே பள்ளிக்கூட விஷயங்கள் தெரிந்தவர்கள் என்றும், நியாயம் வழங்கும் சக்தியுள்ளவர்கள் என்றும்

எண்ணியிருக்கிறார்கள். ஒரு வருஷத்தில் முன்னூற்று நான்கு வாத்தியார்களைத் திட்டம் செய்ய அவகாசம் இருக்கும்பொழுது அவர்கள் தங்களை வந்து பார்ப்பதும், பெரிய மனிதர்களிடமிருந்து கடிதம் கொண்டு வந்து கொடுப்பதுமாக இருக்க, 'இன்னும் இரண்டு நாள் பொறுத்து வாருங்கள்; இன்னும் ஒரு வாரம் செல்லும் ஐயா; இன்னும் பள்ளிக்கூடம் திறக்கவில்லையே' என்றெல்லாம் பதில் சொல்லி அனுப்பவும் தங்களுக்கெல்லாம் அதிகாரம் வாய்த்தது என்று மார்தட்டிக்கொண்டிருக்கிறார்களே! நான் நியமித்துவிட்டால் என் தலையைக் கிள்ளிவிடமாட்டார்களா!

மு. உ: அதிருக்கட்டும், இன்னும் ஸ்கூல் பாட புஸ்தகங்கள் என்னவென்று சொல்லவில்லையே! பிள்ளைகள் கேட்கிறார்கள், 'என்ன புஸ்தகம் வாங்க வேண்டும்?' என்று. நாங்கள் என்ன ஜவாப்புச் சொல்லுகிறது?

வா: சரி! அது ஒரு வயிற்றெரிச்சல்! அதைக் கிளப்பிவிட்டீர்களா?

நான்காம் உ· (கோபத்துடன்): ஏன்! உள்ளதைச் சொல்லுங்களேன்! சேர்மேன், கமிஷனர் இவர்கள் புஸ்தகப் பதிப்பாளர்களுடன் பேரம் செய்து முடியவில்லை.

மு. உ: ஐயோ! அதை எல்லாம் சொல்வார்களா?

நா. உ: நீங்கள் சொல்ல வேண்டுமாக்கும்? இந்தக் கதை ஊரெல்லாந்தான் நாறுகிறதே? சேர்மேன் இரண்டு வாரமாகப் பட்டணத்திலேயே வாசஞ் செய்கிறார்.

வா: இனிமேல் அவர் வந்து புஸ்தகங்களை நியமித்து நாம் பிள்ளைகளுக்கு வரவழைத்துக் கொடுத்துப் பாடம் சரியான முறையாய்த் துவக்குவதற்கு இரண்டு வாரமாகிலும் பிடிக்காதா?

இ. உ இரண்டு வாரத்தில் ஆனால் பெரும் அதிருஷ்டம்! ஒரு மாதம் பிடிக்குமென்று எனக்குத் தோன்றுகிறது.

நா. உ (கோபத்துடன்) ஒரு மாதமா! இந்தப் பள்ளிக்கூடத்தில் பாடம் சொல்லிக் கொடுத்துச் சந்நிதியிலே போக வேண்டியதுதான்!

(போகிறார்.)

சாயந்தரம் மூன்றரை மணி. வாஞ்சி ஐயா ஒரு வகுப்புக்குப் போய்விட்டுத் தம் அறைக்கு வருகிறார். அங்கே முனிஸிபாலிடி அங்கத்தினர் ஒருவர், செல்வாக்குள்ளவர், கொஞ்சம் வாயாடி, உட்கார்ந்திருக்கிறார். ஹெட்மாஸ்டரைக் கண்டதும் எழுந்திருந்து கும்பிட்டு அவர் உட்கார்ந்த பிறகு தாம் உட்கார்ந்தார்.

வா ஏது! பள்ளிக்கூடத்தில் படித்த போதிருந்த மரியாதை இன்னும் விடவில்லையா! நல்ல பிள்ளையப்பா நீ!

கேள: அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்களே! என்ன இருந்தாலும் குரு விசுவாசம் என்பது போகுமா? எங்கள் தலை முறையிலேயே கிடையாது; நீங்கள் உறுதியாய் வைத்துக்கொள்ளுங்கள்.

வா மிகவும் சந்தோஷமப்பா. பரிகாசமாய்ச் சொன்னேன். என்ன விசேஷம் இங்கே வந்தது?

கேள விசேஷம் ஒன்று உண்டு. நீங்கள் தயவு செய்து உதவி புரியவேண்டும்.

வா அதற்கு என்ன தடை? முடியுமானால் கடமைப்பட்டிருக்கிறேன்

கேள சுற்றிச் சுற்றிச் சொல்லாமல் உடனே சொல்லி விடுகிறேன். நம்முடைய உதவி உபாத்தி

யாயர் முகுந்த ஐயங்கார் இருக்கிறாரே, அவருக்குச் சம்பளம் கட்டவே இல்லையாம். ஐந்து ரூபாயாவது உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று மிகவும் வேண்டுகிறார். அதற்குத் தாங்கள் பலமாய்ச் சிபாரிசு எழுதிக் கொடுத்தால்தான் பலிக்கும்.

வா: இப்பொழுது இது அவ்வளவு எளிதான காரியம் அல்லவே. இப்பொழுது உபாத்தியாயர் சம்பளங்களை மாற்றுவதற்குக் காலம் இல்லை. உங்கள் பட்ஜெட்டெல்லாம் முடிவு பெற்றது. இனி ஓர் உபாத்தியாயரைப் பற்றிச் சிபாரிசு செய்வது முறையல்ல.

கேள: நீங்கள் சொல்லுவது சரிதான். ஆனால் கமிஷனர் ஒப்புக்கொள்வார்போல் இருக்கிறது. பள்ளிக்கூடக் கமிட்டியாரும் இதில் அபிப்பிராயம் உள்ளவர்களாகத்தான் இருக்கிறார்கள். கொஞ்சம் கஷ்டப்பட்டாவது நிறைவேற்றலாம் என்று நம்பியே வந்திருக்கிறேன்.

வா: அப்படியா! இவ்வளவு தூரம் இதைப் பற்றி அதிகாரிகளே பேசிக்கொண்டாகிவிட்டதா? இது முறை அல்லவே? எனக்குத் தெரியாமல் என் உதவி உபாத்தியாயர் உங்களிடமெல்லாம் வந்து இவ்வளவு கிளர்ச்சி பண்ணிவிடலாமா? இப்பொழுது முடியாதென்றால் நான்தானே பொல்லாதவன்?

கேள: ஏன் முடியாதென்று சொல்லவேண்டும்?

வா: இந்த ஓர் உபாத்தியாயரைப்பற்றி மட்டும் ஒழுங்கு தவறிச் சிபாரிசு செய்ய வேண்டுமானால் தகுந்த காரணங்கள் சொல்லவேண்டுமே?

கேள: தகுந்த காரணங்கள் உண்டே! சம்பளம் சிறிது; குடும்பம் பெரிது; சாமான்களெல்லாம் விலை அதிகம்; உபாத்தியாயர் கெட்டிக்காரர்; நன்றாய்ப்

போதிககிறுர்; ஊரில் எலலோருக்கும் தெரிந்தவா. இவவளவு போதாதா?

வா. குடும்பம் பெரிது - யாருககு இலலை? சம்பளம் சிறிது - யாருக்கு இல்லை? சாமான் கிராககி - யாருககு இலலை? இவை யெலலாம் முகுந்த ஐயங காருககு மடடும் எப்படி விசேஷமானவை?

கேள· அதெலலாம் பொதுவாயிருந்தாலும் அவரைப் பற்றி விசேஷிததுச சிலாகிதது எழுதலாம் அலலவா?

வா· அப்படி ஓா உபாத்தியாயரைப்பற்றி அகாலத் தில சம்பள உயாவுககாக எழுதி நான மற்ற உபாததி யாயாகளிடததில எப்படி வேலை வாஙகுகிறது? நீ சொலலும் குணஙகள அவாகளுக்கெலலாம் இலலையா?

கேள: அதென்ன அப்படிச சொல்லுகிறீாகள்? ஊரில விசாரிததுப் பாருஙகள. 'பகுஜன வாககு' என்று ஒன்று உணடு அலலவா? 'ஆபால கோபாலம்' விசாரித தால இந்தப பளளிககூடததுககுள முகுந்த ஐயஙகாா தாம் சிலாககியமானவா, திலகம் போனறவா என்பாா கள.

வா: அப்படியா! நான் இந்த ஊரில்தானே இருக் கிறேன்! என காதில படவிலலையே?

கேள எனககு அது ஆசசாியமாயிருககிறது. அவவளவு தூரம் நான் அவரைப் பாராடடுவது உஙகளுககுப் பிடிககவிலலையாககும்?

வா. எனககு என்ன அதில வருததம்? இந்தப் பள்ளிக்கூடததில நம்முடன் உழைபபவாகளில ஒரு வருககாவது, 'மாசிலாமணி' என்று கீாததி கிடைததது என்றால பொறுமையா? என் சொந்தப் புகழாகவே நினைப்பேன்.

கேள: ஆனால் நீங்கள என்ன சொலலுகிறீாகள்? நான் சொலலுகிறபடி மஹா ஜனங்களுடைய கொளகை இலலை என்று?

வா: (கொஞ்சம் ஸ்வரததை ஏற்றி) ஆம், ஆம்! ஊா அபிபபிராயம் உனககுத தெரியாது. எனக்கு நன்றாயத தெரியும்.

கேள: அபபடியா! இதென்ன வேடிக்கை! எஙகள கௌனசிலர்களுககு இல்லாத அபிப்பிராயம் ஊரில் இருககுமா?

வா: நான் சொலலுகிறேன், கேள. கொஞ்ச காலம் என்னிடம் படிததததால கொஞ்சமாகிலும் அன்பு இருககுமென்று நம்பிச சொலலுகிறேன. ரகஸயமாய வைததுககொள. என்ன, உன்னை நம்பி ரகஸ்யததைச சொலலலாமா?

கேள: சொலலுஙகள, பரவாயில்லை.

வா: இந்த முகுந்த ஐயஙகாா கொஞ்சமேனும் கடமை இன்னதென்று நினையாதவா. கடவுள் அவரைச் சிருஷ்டிககும்பொழுதே மனச்சாடசியை வைகக மறந்து விடடாா என்று நினைககிறேன். வகுபபுகளுககுச சரியான காலததில் போகிறதிலலை. வீடடில பாடங களைப் பாாககிறதிலலை. பிளளைகளின் அபபியாச புஸத கஙகளைப் பாாககாமல் கையெழுததுப் போடுவது வழககம். அவா சொலலி வைககும பாடஙகளெலலாம் பிளளைகளுக்குச சரியாக வருகிறதில்லை நான் அடிககடி வகுபபில போய நடந்த பாடஙகளையே கேடடுப் பரீக்ஷிததிருக்கிறேன் முககியமான அம்சஙகளெலலாம் சொலலிக கொடுததததாகவே தெரியவிலலை. பிளளை களுககும் அவருககும பிரீதி என்பதே கிடையாது. பொழுது விடிந்தால உஙகள வீடுகளுககெலலாம் நடையாக நடந்து உங்களைத தப்பு ஸ்தோததிரமெல்

லாம் செயது உஙகளுடைய தயவைச சம்பாதிப்பதில மடடும் சாமாததியமுடையவரே தவிர, பள்ளிககூடத் திற்கு அவரால உபயோகம் இலலை. எனன செய்ய லாம? 'அவா பாடஙகளை வேறு ஒருவரைக கொணடு சொலலி வைககவும் முடியாது; நாமும் சொலலி வைப்பது அழகலல' என்று கவலைப் படடுக்கொண டிருககிறேன். அவருககா நான் அநியாயமான சிபாரிசு செயகிறது? தெயவததுககு அடுககுமா!

கேள இவவளவு மோசமானால என காதில் படடிருககாதா? உஙகளுககு ஏதோ அவரிடம் மனஸ் தாபம். நான் பாாததிருககிறேன்: என அநுபவததில உபாததியாயாகளுககுள சணடை சசசரவே அதிகம. ஒருவரை ஒருவா தூஷிததுப் பிழைதது வருகிறாாகள. தாஙகளாவது ஹெடமாஸடரான பினபு எலலாரிடத திலும ஒரே மாதிரியான திருஷடி வைதது வருவீாகள என்று எணணினேன. நலலது; இவவளவு தூரம் முகுந்த ஐயஙகாரைத தூஷிததது பிரயோசனம் இலலை; அவரால பளளிககூடததிற்குக கேடு உணடு என்று சொலலுகிறீாகளே, இது உங்கள மனச சாடசிககு ஒததததா? உணமையாக இருந்தால எஙகளுககு அவரைப்பறறிய புகாா எழுதி, நீகக வேணடியதறகு ஏற்பாடு ஏன செயயவிலலை?

வா சரியாயப போசசு! அவருககுச சிபாரிசு கேடக வநதவன, என்மேல குதிரை ஏறுகிறாயா? அவர் மீது நான உனனிடம் புகாா செயயவிலலையே! நீ மற்ற வாகளைக காடடிலும் அதிகபபடியாக அவரைக கொணடாட வேணடுமென்று கேடடாய! அதனால் 'நான பொய சொலலி எழுதமாடடேன், தபபான சிபாரிசு செயயத தகாது' என்பதற்கு வேணடிய முகாந்திரஙகள சொன்னேன். அவாமேல புகாா செயய வேணடுமென்று நிாப்பந்தம் வந்துவிடடால புகாா செயய எனககுத தெரியும்!

கேள: ஆனால் முடிவு என்ன? நாங்கள் எல்லாரும் அறியாதவர்கள்: அநியாயத்திற்குத் துணிந்தவர்கள், நீங்கள் மாத்திரம் தர்ம புத்திரர் என்று சொல்லுகிறீர்களா?

வா: ஐயோ! நான் அப்படியெல்லாம் சொல்லவில்லையே! அப்படியெல்லாம் நினைக்கவும் இல்லையே! உலகத்தில் பெரும்பாலும் அதிகாரம் வந்தால் அதனுடன் கூடச் சில உபத்திரவங்களும் வரும். முக்கியமானது என்னவென்றால் கோள் சொல்கிறவர்களும் தப்பு ஸ்துதி செய்கிறவர்களும் காக்காய் பிடிக்கிறவர்களும் வீட்டைச் சுற்றியே பல்லைக் காட்டி நிற்பார்கள். இவர்களுக்குள் படித்தவர்களும் உண்டு. படியாதவர்களும் உண்டு. படியாதவர்களைக் காட்டிலும் படித்தவர்கள் மிகக் கேடு கெட்டவர்கள். புத்தியுள்ளவர் இவர்கள் சொல்வதைக் கேட்டு முற்றும் நம்பாமல் செவ்வையாக ஆங்காங்கு விசாரித்து உண்மையைத் தெரிந்துகொள்ளவேண்டும். இப்பொழுது நான் உன்னிடம் ஒளிக்காமல் முற்றும் உண்மையைச் சொல்லியிருக்கிறேனே! நீ வேறு அபிப்பிராயம் கொண்டவன். மற்ற உபாத்தியாயர்களையும் முகுந்த ஐயங்காரிடம் பாடம் கேட்கும் பிள்ளைகளையும் அந்தப் பிள்ளைகளின் தகப்பன்மார்களையும் கேட்பாயானால் உண்மை தெரியும். என் மீது கோபம் கொள்ளாதே. இது ரகஸ்யமாகவே இருக்கும் என்று முன்பே வாக்களித்திருக்கிறாய்!

கேள: நான் வந்த சமயம் அநுகூலமான சமயம் அல்ல. பிறகு, இந்தப் பேச்சை முடிப்போம். இது நிற்கட்டும். நான் போய் வருகிறேன்.

(போகிறார்.)

ஒரு பையன் விம்மி விம்மி அழுதுகொண்டு ஓடி வந்து பேச முடியாமல் நின்றான்.

வா: என்ன சுந்தரம், நீ நல்ல பிள்ளையாச்சே! உனக்கென்ன சங்கடம்?

சுந்தரம், "ஸார்!" என்று துவக்கி மேலே ஒன்றும் சொல்லாமல் மறுபடியும் அழுதான்.

வா: (அவனை முதுகில் தட்டிக்கொடுத்து) கொஞ்சம் பொறு; அவசரமில்லாமல், தைரியப் படுத்திக்கொண்டு சொல்!

சுந்: லைப்ரரியிலிருந்து ஒரு புஸ்தகம் வாங்கிப் போனேன். அது ஏற்கனவே கிழிந்து போயிருந்தது. என் வீட்டில் என் தம்பி அதை மீண்டும் கிழித்து விட்டான். லைப்ரேரியன் புஸ்தகத்தின் புது விலையைக் கொடுக்கவேண்டும்; ஒன்றேகால் ரூபாய் அபராதம் என்கிறார்.

வா: அப்படியா! அதுதான் சட்டம் அப்பா. என்ன செய்யலாம்?

சுந்: நீங்கள் மன்னித்துக் கொள்ளுங்கள், ஸார்! என் தகப்பனார் செய்திதான் உங்களுக்குத் தெரியுமே? ஒன்றே கால் ரூபாய் அவரிடம் கிடைத்து எனக்குக் கொடுபடும்?

இதற்குள் லைப்ரேரியனும் நுழைந்தார்.

வா: என்ன ஐயா, பெரிய கேஸ் பண்ணிவிட்டீர்களே?

லைப்: நான் என்ன செய்யலாம்? அந்த எழவு சட்டந்தான்! புஸ்தகம் இருபது நாலு. அதில் மூன்று ஒன்றுக்கும் உதவாத கந்தல். இவைகளைக் குழந்தைகளுக்குக் கொடுத்துச் சரியானபடி திருப்பி வாங்க முடியுமா? புது விலை கேட்பது அநியாயந்தான். ஓரணாப் பெறாத புஸ்தகத்தைக் கொடுக்கிறது; இரண்டு ரூபாய் மூன்று ரூபாய் அடித்துப் பிடுங்குகிறதா?

வா: நீங்கள் சொல்லுவது நியாயந்தான். இதற்கு வழிதான் என்ன?

லை: இந்தச் சட்டத்தை அடித்துவிட்டால் போகிறது. இதை யார் போட்டார்?

வா: ஐயோ! அதில் விரலை வைத்தால் கையை வெட்டிவிடுவார்கள். பள்ளிக்கூடக் கமிட்டியார், நான் வேண்டாம், வேண்டாம் என்று ஆக்ஷேபிக்கும் பொழுதே மற்றப் பள்ளிக்கூடத்து லைப்ரரி சட்டங்களைப் பார்த்துப் போட்டுவிட்டார்கள்.

லை: ஆனல், நீங்கள் மன்னித்துவிடுங்களேன். அதற்காவது அதிகாரம் உண்டோ, இல்லையோ?

வா: இப்பொழுதுதானே நீங்கள் சொன்னீர்கள், பாதிக்கு மேலான புஸ்தகங்கள் உபயோகமில்லை என்று! சட்டம் இருக்கிறது. நீங்களோ அபராதம் போட்டுக்கொண்டிருக்கிறீர்கள். வந்த பிள்ளைகளுக்கெல்லாம் நான் மன்னிப்பையும் கொடுத்தால் அதென்ன சட்டம்? பள்ளிக்கூடக் கமிட்டியாருக்குத் தெரிந்தால் அவர்கள் என்ன சொல்வார்கள்?

லை: இது பெரிய தொல்லைதான். இப்பொழுது என்ன செய்கிறது? சுந்தரம் நிற்கிறானே?

வா: இதற்கு ஏதாகிலும் ஒரு வழி தேட வேண்டியதுதான். இப்பொழுது என்ன செய்யலாம்? சுந்தரம் ஏழை; நல்ல பையன்; அவனிடம் அபராதத்தை எதிர் பார்ப்பது சரியல்ல.

இவ்வாறு சொல்லிக்கொண்டு மேஜையின் மேலிருந்த கைப் பெட்டியைத் திறந்து லைப்ரேரியனிடம் ஒன்றே கால் ரூபாயைக் கொடுத்தார்.

லை: இப்படி நீங்கள் கொடுத்துக்கொண்டே வந்தால் சம்பளத்தில் பாதி ஆகிவிடுமே.

வா. தீராத சமயங்களில் நாம் கொடுத்துத்தான் ஆகவேண்டும். சுந்தரம், நீ வீட்டுக்குப் போ. தகப்பனுரிடம் சொல்ல வேண்டாம்.

வாஞ்சி ஐயா அன்று பள்ளிக்கூடம் விட்ட பிறகு வீடு போகும்பொழுது மறுபடியும் குள்ளிச்சுப்பியைக் கண்டார்.

குள்ளிச் சுப்பி: ஐயோ! காலையிலும் கண்டேனே, இப்பொழுதும் கண்டேனே, என்னால் ஏதேனும் கேடு உண்டோ?

வா விசேஷமில்லை அம்மா! ஏதோ உத்தியோகத்திற்குள்ள உபத்திரவங்களே தவிர வேறில்லை

குள்ளி இந்த ஊருக்குள் நீங்கள் ஒருவரே என்னைக் கண்டு சுமுகமாய்ப் பேசுகிறீர்கள்! உங்களுக்கு ஒரு கேடும் வரக்கூடாது.

வா: ஒரு கேடும் வந்து விடவில்லை. வரும்போல் இருக்கிறது. வந்தாலும் பரவாயில்லை. பெருங் கேடு வந்தாலும் சிலர் சொல்வது உண்டே, 'இதைவிடப் பெருங்கேடு உண்டே; இந்த மட்டில் தெய்வம் நம்மை விட்டுவிட்டதே' என்று. இன்றைப் பொழுது இத்துடன் போனது!

பங்காளிக் காய்ச்சல்

1

சாயங்காலம் ஐந்து மணிக்கு அழுமாட்டாமல், துக்கத்தால் முகம் வாடியவனாய், பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பியவுடன், அனந்தராமன், தன் தாயிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும் என்று கேட்டான். ஒரு நாளும் இல்லாத கோலத்தைப் பார்த்துக் கவலைப்பட்டு அவள், "என்னடா அப்பா?" என்று வினவினாள்.

"இன்று வகுப்பில இங்கிலீஷ்ப் பாடம் நடக்கும் போது, ஓர் அபூர்வ வார்த்தை 'வென்டெட்டா' (Vendetta) என்று வந்தது. இதற்கு அர்த்தம் சொல் லும்போது, நம்முடைய குடும்பத்தை உதாரணமாக உபாத்தியாயர் எடுத்துக் காட்டினார். வகுப்பில் எல்லா ரும் திகைத்துவிட்டார்கள். என்னையும் பெரியகத்துச் சுப்பராமனையும் பார்த்துப் பார்த்துக் 'குசு குசு' என்று பையன்கள் பேசிக்கொண்டார்கள். பள்ளிக்கூடம் விட்ட வுடன் எங்கும் நிற்காமல் சுப்பராமன் வீடு போய் விட்டான். நானும் வந்துவிட்டேன். இதேன் நமக்கு இவ்விதக் கெட்ட பெயர்?" என்று அனந்தராமன் கேட்டான்.

"அந்த இங்கிலீஷ் வார்த்தைக்கு என்ன அர்த்தம் சொல; அது தெரிந்தால்தானே விஷயம் புரியும்?" என்றாள் தாய்.

பிள்ளை சொன்னதாவது: "ஐரோப்பாவின் தென் கிழக்குப் பகுதியில சில தேசங்களில் ஒரு கொடிய வழக்கம் உண்டாம். தலைமுறை தலைமுறையாய் ஒருவ ருக்கு ஒருவர் பழிக்குப் பழி வாங்கிக்கொண்டு, நூறு வருஷம் இரு நூறு வருஷங்கூட ஆண், பெண்,

குழந்தை எல்லாமே பகை பாராட்டுவார்களாம்! உபாத்தியாயர் இதைச் சொல்லிவிட்டு, உடனே, 'நம் மூரில பெரியாத்துக்கும் சின்னாத்துக்கும் இருப்பது போல' என்றார்."

"அப்படியா? உங்களுக்கு வெட்கமாய்த்தான் இருந்திருக்கும். அவர் ஏன் அப்படிச் சொன்னார்? நன்றாய் இல்லையே!" என்று தாய் கூறவே அனந்த ராமன், "அவர் வேண்டுமென்று கூறவில்லை; ஏதோ சட்டென்று உபமானம் தோன்றிச் சொல்லிவிட்டார்" என்றான்.

"அப்படித்தான் இருக்க வேண்டும். எல்லாருக்கும் தெரிந்த கதைதானே! முழுப் பூசினிக்காயைச் சோற்றில் மறைக்க முடியுமா?" என்றாள் தாய்.

"ஏதோ கொஞ்சம் கேட்டிருக்கிறேன். இனி விஷயம் விவரமாய்த் தெரிய வேண்டும். சொல்லு வாயா?" என்று கேட்டான் அனந்தராமன். அதற்கு மேல் அனந்தராமனுடைய தாய் நினைத்து நினைத்து, விட்டு விட்டுச் சொல்லிய கதையை அவள் மொழி யாகவே எழுதுவோம்:

"சுமார் அறுபது வருஷத்திற்கு முன், வடக்கே யிருந்து, சோழநாட்டில் செழிப்பு உண்டு என்று கேள்விப்பட்டு, இவ்வூருக்குச் சாமாவையர் என்ற ஒருவர் தம் பால சம்சாரத்துடன் வந்து குடியேறினா ராம். அவர் அதிருஷ்டம் தொட்டதெல்லாம் பொன்னா யிற்று. பதினைந்து வருஷத்துக்குள் பெரும் சொத்துச் சேர்த்துவிட்டார். அவர்தாம் நம்முடைய கூடஸ்தர். அவருக்கு இரண்டு பிள்ளைகள். வெகு காலம் ஒற்றுமை யாக இருந்து கடைசியில் சண்டை போட்டுப் பிரிந்தார் கள். இதற்குக் காரணம், தம்பிக்கு இளையாளாக வந்தவள்தான். அவள் கைகேயியாம்! இரண்டு தம்பி களுடன் குடும்பத்தில் ஆக்கிரமித்து, வீட்டில எல்லா ருடனும் போராடி ஆஸ்தியை அழித்தாள். மைத்துன

னுக்கு அறுபது வருஷச் சாந்தி நெருங்கி, தக்க ஏற்பாடு கள் செய்து வரும்பொழுது, திடீரென்று இரண்டு நாள் முன்னதாக மார்பு அடைத்து அவர் இறந்து போய்விட்டார். அதற்குக் காரணம் அந்தக் கைகேயி தான் என்றும், ஏதோ சூன்யம் வைத்து ஏவிவிட்டாள் என்றும் வதந்தி ஏற்பட்டது. இதனால் இரண்டு குடும் பங்களுக்கும் பெரிய கலகம் ஆரம்பித்தது. இறந்தவரின் பிள்ளைகள், 'விட்டேனு பார்' என்று கறுவிக்கொண் டிருந்தார்கள். அதற்கு ஏற்றாற்போல், சின்னவருக்கு ஏதோ பைத்தியம் மாதிரி ஒரு வியாதி பிடித்து, சில காலம் மிகவும் கஷ்டப்பட்டு மாண்டுபோனார். இதைப் பங்காளிகள் செய்த மாந்திரீகம் என்று ஊரில் சொல் லிக்கொள்ளவே சண்டை மிகுதியாகிவிட்டது. போக்கு வரத்து நின்றது. இருவகையினருக்குள்ளும் தீட்டுக் காப்பது மட்டும் இருந்ததே ஒழிய வேறு, 'இருந்தாயா, போனயா' என்கிற உறவாட்டமே ஒழிந்தது.

"நில புலன்கள், அவர்களுக்கு அதிகமாகவும் நம்மவர்க்குக் குறைந்தும் வந்தன. ஆனாலும், ஊரில் தொட்டதற்கெல்லாம் போட்டி; சண்டை சச்சரவு; கச்சேரியில் சதா வியவகாரம். இதோடு நிற்கவில்லை.

"ஒரு சமயத்தில் அந்த வீட்டுப் பிள்ளை ஒரு வருக்கு, நல்ல அந்தஸ்து உள்ள ஒருவர் பெண்ணைக் கொடுப்பதாக நிச்சயித்து முகூர்த்தம் வைத்திருக் கையில், பிள்ளைக்குக் காக்காய் வலிப்பு உண்டென்று ஒரு கோள் கடிதம் போய்க் கல்யாணம் நின்றுவிட்டது. கடிதம் எழுதியவர் நம் பக்கத்தில் ஒருவர் என்று புகார் கிளம்பியது. இதற்குப் பதில் செய்யாமல் விடுவார்களா? உன் பாட்டனுருக்குத் தம்பி ஒருவர், இங்கிலீஷ் படித்து, குடும்பத்தை நிமிர்த்திவிடுவார் என்று நம்பி யிருந்தார்களாம். அவர் சென்னப்பட்டணத்தில் படித்தாராம். அவருக்கு, பி. ஏ. பரீக்ஷை நாளைக்கு என்று இருக்க, இன்றைக்கு, 'உன் தாய் இறந்தாள்,

உடனே வருக' என்று தந்தி கிடைத்ததாம். மறு நாள் அவர் இங்கே வந்து, தாய் கலைபோல் கெட்டியாய் இருப்பதைப் பார்த்து, 'ஓகோ! இது தாயாதிக் காய்ச்சல். பெரிய அகத்துக்காரர் செய்த மோசம்' என்று நிச்சயித்தார்.

"இதைச் சும்மா விடக்கூடாதென்று, தந்தி ஆபீஸ் காரரைச் சாட்சி போட்டு வியாச்சியம் துவக்கினார்கள். அதனால இரு குடும்பத்தாருக்கும் மிகவும் நஷ்டம்; மிகுந்த துன்பம். இரண்டு வருஷ காலம் கச்சேரிக்குப் போன வண்ணந்தான்! அந்த வீட்டுக்காரருக்குச் சிட்சையாகி ஜெயிலுக்குப் போக நேரும்போல இருந் தது. யாரோ ஒரு பாரிஸ்டர் துரை தப்பித்துவிட்டா ராம். பத்தாயிரம் ரூபாய் கொடுத்ததாகச் சொல் வார்கள். உங்கள் சின்னத் தாத்தாவுக்கு பி. ஏ. பரீட்சையும் போய், வியாச்சியமும் போய், சீக்கிரத்தில் உயிரும் போய்விட்டது.

"உன் அப்பா நாளில்கூட அசூயையும் அகங் காரமும் குறையவில்லை. சுப்பராமன் அப்பாவுக்கும் உன் அப்பாவுக்கும் எப்பொழுதும் போட்டிதான். அவர் பணக்காரர்; நாமோ எல்லாம் இழந்து ஏழை களாகிவிட்டோம். அவருக்கு எதிரியா நாம்? அவர் எதைத் தொட்டாலும் இவர் தடுக்கிறது; இவர் எதைத் தொட்டாலும் அவர் தடுக்கிறது. இவர் 'இன்சால் வென்டாம்'; ஊரில் தலையெடுக்க விடாமல் அடிக்கப் போகிறாராம். இவர்கள் என்னைக்குத்தான், 'கிருஷ்ணா! ராமா!' என்று தங்கள் காரியத்தை மட்டும் பார்த்துக் கொண்டு ஒழுங்காக இருக்கப் போகிறார்களோ! இவர்களால் ஊரே கெட்டுப் போகிறது. இவர்கள் ஒத்துப்போனால் கீழ மதுரையை, எவ்வளவு நேர்மை யாய் வைத்துக்கொள்ளலாம்! ஒருவர், ஆற்றுக்குப் போகும் வழியைச் சீர்திருத்துவோமென்றால், மற்றவர் கூடாது என்கிறது. ஒருவர் கோயில் உத்ஸவம் நடத்த

வேண்டும் என்று தலைப்பட்டால், அதற்கு ஆயிரம் ஆட்சேபங்களைச் சொல்லுகிறது இன்னொருவர்.

"இந்தப் பள்ளிக்கூடம், ஏதோ நல்ல காலத்தினாலே இவாகள் சச்சரவில் அகப்பட்டு விலகியது. சரிவர நடக்கிறதென்று எல்லாரும் சந்தோஷிக்கிறார்கள். பெரிய அகதத்துக்காரரிடம் பள்ளிக்கூடம் இருந்தபோது, உன் அப்பா, செய்யாத கலகமெல்லாம் செய்து, ஜில்லா போர்டாரிடம் ஒப்பிக்கவேணடும் என்று கட்சி கட்டினதும் மனுப்போட்டதும் கலெக்டரிடம் ஓடினதும் கணக்கு வழக்கே இலலை. போர்டார் எடுத்துக் கொள்வதாக ஏற்பாடானதும், சுப்பராமன் தகப்பனார் விட்டாரா? எத்தனை மேஸ்ரிட்டு? எத்தனை கசசேரி நடவடிக்கை? ஐயோ! போதும் போதும்! சிவ சிவா! சுப்பராமன் படிப்பைக்கூட ஒரு வருஷம் நிறுத்தி விட்டாரே கோபத்தாலே! இல்லாவிடில், அவன் உன்னைவிட இரணடு வருஷம் பெரியவன்; மேல் வகுப்பில் அலலவா இருக்கவேணும்? உனக்குச சரியாக அல்லவோ ஆகிவிட்டான்? தம் அகமுடையாளுக்குப் பந்துவான ஒருவரை ஹெடமாஸ்டராய்ப். போட்ட பிறகுதான் கொஞ்சம் கோபம் தணிந்தது. பிள்ளையை மறுபடியும் பள்ளிக்கூடம் அனுப்பினார். சுப்பராமன் நல்ல பிள்ளை. படாடோபம் இலலை. மரியாதை, மட்டு, படிப்பில் சிரத்தை, ஸ்நானம், ஸந்தி எல்லாவற்றிலும் ஒழுங்கானவன். உங்கள் நாளிலாவது இந்தப் பங்காளிப் புத்தி மாறி ஒற்றுமையாய் வாழுங்கள்! நான் வேறென்ன சொல்லப் போகிறேன்? நம்மது பெரிய புராணம். நல்ல வேளையாக அப்பா இன்று ஊரில் இல்லை. இருந்தால் உங்கள் ஹெட் மாஸ்டர் மணடை உடையும். அவர் வந்தால் நீயும் சொல்லாதே, நானும் சொலலவிலலை."

அனந்தராமன் மிகவும் கூர்மையான புத்தி உடையவன். ஆனால் துள்ளிக் குதிக்கும் மாதிரி அல்ல.

எதுவும் யோசித்துத்தான் சொல்வான், செய்வான்.

மறு நாள் மாலையில் அவன் சுப்பராமனிடம் கலந்து பேசினான். அன்று மதகியான்னம் ஹெட்மாஸ்டரே பெரியகத்துக்குப் போய், தாம் தவறுதலாய் வாயில் வந்ததைச சொல்லிவிட்டதாகவும், தப்பிததைதை மன்னிக்க வேணடும் என்றும் பெரியவரைக் கேட்டுக் கொணடாராம். "எங்கப்பா, 'பரவாயில்லை' என்று சொலலிவிட்டாராம்" என்றான் சுப்பராமன்.

"நாம் இந்த அசந்தாப்பத்தை வளாக்கக்கூடாது. மற்றப் பிள்ளைகள் வம்பு பேசினால் காதில படாதது போல் போய்விடுவது நலம். இரண்டு நாளில் எல்லாம் மறந்துபோய், விடும்" என்று பெரும் போககாகவே தொடாந்து யோசனை சொன்னான் சுப்பராமன்.

ஹெடமாஸ்டா சமரசமாயப் போகிறவா. சின்னவர் திரும்பி வந்ததும் அவரிடமும் நேரில போய்த் தணிவுடன் கும்பிடு போடடுவிடடாா. அவரும், "உள்ளத்தைத்தானே சொன்னீா? அதில என்ன தோஷம்? நான் பெரியகத்துக்குச சளைததேன என்று சொலலவில்லையே! எதிரிககு எதிராக நிற்கிறேன் என்றுதானே சொன்னீா! அந்தப் போதான் எனக்கு 'வேணடியது' என்று பெருமை பாராடடினாா.

2

ஐந்து வருஷங்க ளாயின. சுப்பராமனும் அனந்தராமனும் திருச்சி காலேஜில் ஆனர்ஸ் பி. ஏ. க்குப் படிக்கிறார்கள. வயசு, முறையே இருபததிரண்டும் இருபதும்; பெரியவன் சரித்திரமும், சின்னவன் கணிதமும் எடுததுக்கொண டிருந்தாாகள. சின்னவன் மிகக் கெட்டிக்காரன்; முதல் வகுப்பில் அவன் தேறுவான் என்று எலலோரும் எதிர்பாாத்தாாகள். சுப்பராமனும் அவவளவு துடியிலலாவிடினும் தவறாமல் பரீட்சையில

தேறுவான் என்பது நிச்சயம். நல்லவர்கள் என்று பெயர் வாங்கிச் சிநேகமாகவே இருந்தார்கள். சுப்பராமனுக்குத் தம்பி மீது வெகு கவனம். சுரம், வயிற்று நோய் ஏதாகிலும் வந்தாலகூட உடன் இருந்து உதவுகிறது, வைத்தியரை அழைத்து வருகிறது, மருந்து வாங்கிக் கொடுக்கிறது - இத்தகைய அன்பு முறையைப் பாராட்டி வந்தான். கீழ் மதுரை வந்தால மட்டும், சற்று ஒதுங்கினாற்போல இருந்து வந்தார்கள். இது தகப்பன்மாருக்கு வருத்தம் வரக்கூடாதென்பதற்காக. அவர்களோ பங்காளித் தனத்தைச் சற்றேனும் மறவாது நடத்தி வந்தார்கள். 'பிள்ளைகள் தாயாதி தாமத்தை ஒழுங்காய்க் கடைப்பிடிக்க மாட்டார்கள் போல இருக்கிறதே' என்று இருவருக்கும் சந்தேகம் உண்டு, 'அந்த வீட்டுப் பயலோடு என்ன அவ்வளவு அந்தரங்கம்?' என்று அதிருப்தியாய்ப் பேசுவார்கள். பிள்ளைகளோ கலாசாலை மாணாக்கர் சபையில தலைவனாக ஒருவனும், காரியதரிசியாக ஒருவனுமாய் ஒத்துழைத்து, உபாத்தியாயர், கூடப் படிப்போர் எல்லோருக்கும் நல்லவர்களாய் இருந்து, விள்ளாமல் விரியாமல், ராம லக்ஷ்மணர்கள்போல் இருந்து வந்தார்கள்.

சுப்பராமனை ஐ. சி. எஸ். பரீக்ஷைக்கு அனுப்பும் உத்தேசம் அவன் தகப்பனாருக்கு இருந்தது. சீமைக்கு அனுப்புவதற்குமுன் விவாகம் செய்துவிட வேண்டும் என்று எண்ணி, வரும் ஜாதகங்களைக் கவலையுடன் சோதிக்கலானார்.

உள்ளூர் ஜாதகம் ஒன்று நன்றாக இருந்தது. ஒரே பெண்; அழகி; எஸ். எஸ். எல். ஸி. வகுப்பில் படித்தாள். சொத்து யதேஷ்டம். இருபதாயிரம் முதல், முப்பதாயிரம் வரையில் மதிப்பு உண்டு. தாய் தந்தை இருவரும் கொடுக்கல் வாங்கல் செய்வதில் மிகத் தேர்ந்தவர்கள். சுப்பராமனுக்கு என்று அமைந்த கன்னி என்பது வெகு ஜன வாக்கு. நவ நாகரிகத்தை

ஓட்டி, 'சீமையிலிருந்து திரும்பிய பிறகு யோசிக்கலாம்' என்று பார்த்தான் சுப்பராமன். பலிக்கவில்லை. சீர், தக்ஷிணை முதலியவை தகராறு அதிகமாயில்லாமல் நிர்ணயமாயின. முகூர்த்தம் வைத்துச் சாமான்கள் சேகரித்து அழைப்புக் கடிதங்களும் புறப்பட்டன. வெகு நாளாக இல்லாத முழக்கத்துடன் நடைபெறும் கல்யாணம் என்று சுற்றிலும் உள்ள ஊரிலெல்லாம் உத்ஸாகமாய் எதிர்பார்த்திருந்தார்கள். பெண்ணுக்கு மட்டும் பூர்ண சம்மதமில்லை என்று கொஞ்சம் கொஞ்சமாக வெளியாயிற்று. மணப் பெண் ரூபத்தையே பார்ப்பாள் என்றவாறு ஜானகியின் விருப்பம் வேறு நோக்கம் கொண்டிருப்பதாகத் தெரிந்தது. அவள் தகப்பனார் அதைக் காதில் போட்டுக்கொள்ளவே இல்லை. தாய்க்குமட்டும் ஏதோ மனம் உறுத்திக்கொண்டிருந்தது. முடிவில் அலக்ஷ்யம் செய்யமாட்டாமல் தாய் திறமையுடன் பிரஸ்தாபம் செய்தாள். முதலில் சிறு பெண்களிடம் துவக்கி, ஊர்ப் பெண்டிர்களுக்கெல்லாம் தெரிந்தது. புருஷர்கள் காதிலும் விழவே சுப்பராமன் 'இதென்ன?' என்று விசாரித்தான். விசாரித்தால் வெளியாகாத ரகசியம் கல்யாணக் காரியங்களில் உண்டோ?

சுப்பராமன் பருமன் அதிகம். கைகால்களை வீசி யானைபோல் நடப்பான்! கண் மிகப் பெரிது. 'முழியன்' என்று சிலர் கூறுவதும் உண்டு. வயசு வித்தியாசமும் ஏழு. இதை எல்லாம் வைத்துக்கொண்டு கச்சேரி நடத்த முடியாதா?

சுப்பராமனுக்கு வெகு கோபம். தன்னிடம் காதல் இல்லாவிடினும் பொறுக்கலாம். வெறுப்பும் இருக்கிறதென்று தெரிந்தால் மானம் உள்ளவன் எப்படித் தாங்குவான்? வேண்டாம் என்று வலுவாய்த் தடுத்தான். துணிந்து தகப்பனிடம் ஆக்ஷேபித்தான். ஹெட்மாஸ்டரை மத்தியஸ்தமாய்க் கேட்க அவர், 'விவாகப் பிரயத்தனங்கள் பக்குவமான பிறகு நிறுத்து

வது பாங்கல்ல' என்று சொன்னதைத் தவிர, பெண் பாலர் மீதே கருணை காட்டி ஒரு புதிய நியாயமும் போதித்தார்: 'பெண் வேண்டாம் என்றால் புருஷனுக்கு எவ்விதக் குறையும் இல்லை. வேறு எத்தனையோ பெண்கள் கிடைப்பார்கள். புருஷனால் வேண்டாம் என்று தள்ளப்பட்ட பெண்ணுக்குத் தக்க வரன் கிடைப்பது கஷ்டம்; கூடவே கூடாது' என்று தீர்ப்புச் சொன்னார். ஹிந்துக்களுள் இத்தகைய எண்ணம் பலமாய் ஊன்றியது அல்லவாயினும், தற்சமயம் சந்தர்ப்பத்திற்கு ஒத்துக்கொண்டது. ஆகையால் புருஷர்கள் எல்லாரும் சேர்ந்து. சுப்பராமனை அடக்கி, 'பெண்ணைச் சேர்ந்தவர்கள் வேண்டுமானால் நிறுத்தட்டும்; நாம் நிறுத்தக்கூடாது' என்று ஓங்கி அடித்தார்கள்.

சுப்பராமனுக்கு ஆத்திரம் பொங்கியது: 'என் காரியம் அல்லவா? இதனால் விளையும் நன்மை தீமைகளுக்கு உட்பட வேண்டியவன் நான்தானே? நீங்கள் எப்படி எனக்கு விரோதமாய்த் தீர்ப்புச் சொல்லலாம்? வரன், கன்னிகை இருவரும் வேண்டாம் என்கிற விவாகத்தை நிறைவேற்றும் நாகரிகமும் ஒரு நாகரிகமா?' என்று தெளிவாக வாதாட முடியவில்லை. குழப்பமும் அச்சமும் மேலிட்டு உள்ளத்தில் சமாதானம் இல்லாமல் மிகவும் துயரப்பட்டான். அவன் தாய் ஒன்றும் புரியாமல், பிள்ளையின் மனம் நோகக் கட்டாயப் படுத்தலாமோ என்று தனக்கு அந்தரங்கமான சில பெரிய பெண்டிர்களை யோசனை கேட்க அழைத்தாள்.

கிழவி ஒருத்தி, சுமங்கலி; பத்துப் பிள்ளையும் பெண்ணையும் பெற்றவள். எல்லாவற்றையும் பார்த்தாள்; கேட்டாள். சுப்பராமன் காதில் விழ வேண்டுமென்றே உரக்க முடிவு கட்டித் தங்கு தடையின்றி மொழிந்தாள். "என்னமோ அம்மா, உங்கள் பாடு! நமக்கேன் நடுவிலே? இருந்தாலும் கேட்டீர்களே என்று சொல்கிறேன்: நாமெல்லாம் வாழ்க்கைப்படவில்லையா?

நம்மைக் கேட்டாளா, போனளா? கூனிக்குந்தான் ஓர் அகமுடையான் இருக்கான்; குருடிக்குந்தான் ஓர் அகமுடையான் இருக்கான். தெத்துவாயனுக்குக் கல்யாணம் ஆகல்லையா? காக்காவலிப்புக்காரனுக்குக் கல்யாணம் ஆகல்லையா? இதெல்லாம் அந்த அந்தக் குழந்தைகளைக் கேட்டா நடக்கிறது? பெண்ணாத்துக்குப் போய்விட்டுத் தான் இங்கே வறேன். பெண் பாட்டிலே ஒரு மூலை யிலே உட்கார்ந்திருக்கு. பசுவன் வைத்திருக்கு. நான் ஆனமட்டிலே கேட்டுப் பார்த்தேன். பேசினத்தானே? இங்கிலீஷ் படிச்சுட்டுதாம். என்னேடு பேசப்படா தாம். அதென்னவோ இந்தக் காலத்துக் கெந்தல். பெண்ணைப் பெத்தவாளிடம் சொல்லலாம் என்று சொல்லிவிட்டு வந்தேன். 'இந்தா சாலாச்சி, மேளக்கார னுக்கு அச்சாரங் கொடுத்தாச்சு. பொடவை சோமன் வாங்கி, பீரோ பீரோவா வெச்சிருக்கு. ஊரெல்லாம் அழைச்சாச்சு; முறுக்கு அதிரசமெல்லாம் பண்ணிக் குமிச்சுக் கிடக்கு. அப்பளாம், கறிவடாம் எல்லாம் கூடை கூடையாக நிறைஞ்சு கிடக்கு. ஊறுகாய் கொஞ்சமா நெஞ்சமா? எத்தனை சாமான் போட்டுச் செய் திருக்கு? இதெல்லாம் வீணவா போகிறது? குழந்தை கள் இஷ்டத்தைக் கேட்பதாவது! அதுகள் அப்படித் தான் சொல்லும். என்னத்தைக் கண்டுது? இளங் கண்ணு பயமறியாது. நீ உம்பாட்டுக்குப் பண்ணிப்பிடு! வர வருஷத்தைக் கண்டவாள் யாரு? ஏந்திரு, போ! எல்லாருக்கும் மேலே இருக்கானே, அவன் பாத்துக்கு வான். நம்மாலானதை நாம் பார்க்கணுமோன்னே? இதைத்தான் சாலாச்சிக்குச் சொன்னேன். உனக்கும் அப்படித்தான். இப்படிப் பிள்ளையும் பெண்ணும் சேருவது கஷ்டம். அழகாய்ச் சேர்ந்திருக்கு. சுப்ப ராமனுக்கு ஜானகிதான் வேணும். ஜானகிக்குச் சுப்ப ராமன்தான் வேணும். அதுகளுக்குத் தெரியவில்லை. நாம்ப தெரிஞ்சவா! அதுகள் போன வழி விடலாமோ? நடத்திவிடு. என் வாக்குப் பலிக்கும்'' என்றாள் கிழவி.

3

விவாக ஏற்பாடுகள் விமரிசையாக நடந்தன. கல்யாணத்திற்கு முதல் நாள் மாலையில் மாப்பிள்ளை அழைப்பு நெருங்கியது. ஈசுவரன் கோயிலில் பிள்ளையகத்துக்காரர் கூடுவது வழக்கம். புது உடுப்புக்கள் தயாரித்திருந்ததை அணிந்துகொள்ளச் சுப்பராமனைத் தேடினார்கள்; காணவில்லை. ஓர் இடம் பாக்கி இல்லை. வந்திருந்த அவன் நண்பர்களை எல்லாம் கேட்டார்கள். அனந்தராமனையும் கேட்டார்கள். அவனுக்கும் தெரியவில்லை. ஏழரை மணிக்கு நல்ல வேளை பாாத்திருந்தது தவறி, பதினொன்று வரையில் பார்த்தும் பையன் அகப்படவில்லை. அவன் கிணற்றில் குளத்தில் விழுந்து சாகாமல் இருந்தால் போதுமென்று அவன் பெற்றோர்கள் நினைத்தார்கள். கொஞ்சங் கொஞ்சமாக, அவன் இரண்டு நாளாக இருந்த மாதிரியையும் பேசிய பேச்சுக்களையும் சிநேகிதாகள நினைத்து, எங்கேயோ ஒளிந்திருக்கிறான் என்றே நிச்சயித்தாகள்.

தன்னிடத்தில் சரியான மதிப்பு இல்லாத பெண்ணை எப்படி மணம் புரிவது, அதைவிட இழிவு உண்டா என்று அடிக்கடி சுப்பராமன் ஏங்கியதைச் சொன்னார்கள். 'அவள் ஆசை வைத்திருக்கிற பிள்ளையை நான் அறிவேன். அவன்தான் அவளுக்கு ஏற்றவன். எப்படியாவது அவர்களைச் சேர்த்து வைத்தால் புண்ணியம் உண்டு' என்றுகூட அவன் சொன்னதாக வெளியாயிற்று. "இது பற்றித்தான் ஒதுங்கிவிட்டான்" என்றார்கள்.

மறு நாள் பொழுதுவிடிந்ததும் பிள்ளை வீட்டிற்கு வந்திருந்த கூட்டமெல்லாம் கலைந்தது. பெண்ணகத்துக் காரரோ இரவெல்லாம் படுக்காமல் யோசனை பண்ணினார்கள். 'இவ்வளவு ஏற்பாடுகள் செய்து வீண் போகலாமா? எப்படியாகிலும் இந்தப் பந்தலிலேயே ஒரு

வரனைப் பிடித்துச் சுப காரியத்தை முடிக்கவேண்டும். இப்படி எவ்வளவோ கல்யாணங்கள் நடக்கவில்லையா? இத்தனை பையன்களில் கூடிய வரையில் நேரான பையன் ஒருவன் அகப்படமாட்டானா?' என்று ஒரு வருக்கு ஒருவர் பேசிக்கொண்டார்கள். ஜானகியை யாரும் நினைக்கவில்லை. அவள் தாய் மட்டும், 'நீங்கள் எல்லாம் யோசனை செய்வதில் என்ன குணம்? இந்தக் கல்யாணத்தைக் கெடுத்த அந்தப் பிடிவாதக் காரியைக் கேட்டு அல்லவா மறுபடியும் எத்தனிக்க வேண்டும்?' என்று எச்சரித்தாள்.

ஜானகி மற்றச் சாதாரணப் பெண்களைப் போலவா? பழைய வழக்கங்களை அதிகமாய்த் தொடர் பவள் அல்ல. அவளைக் கேட்டவுடன், "அனந்தராமனைத் தான் உத்தேசித்திருக்கிறேன்" என்று உறுதியாய்ச் சொல்லிவிட்டாள். அந்த ஏழைப் பையனை அவள் கருதியிருப்பாள் என்று அவள் தகப்பனார் நினைக்க வில்லை. "அது எப்படி முடியும்? அந்தக் குடும்பம் சளைத்துக் கிடக்கே" என்றார். "சளைத்தா என்ன? மறுபடியும் வலுக்காதா? புத்தி இருக்கு; படிப்பிருக்கு; குணம் இருக்கு. வேறு என்ன வேணும்?" என்று, ஜானகி துணிந்து கேட்டாள். "இதெல்லாம் என்ன பிரயோஜனம்? பணம் வேணும்; அதிருஷ்டம் வேணும்" என்றார் தகப்பனார். "உங்களுக்கு எப்பவும் பணந்தான்; பணமும் அதிருஷ்டமும் நான் போனால் கூட வரு கிறது" என்று சொன்னாள். கடைசியில் அவள் இஷ்டப் படி செய்வதென்று தாயும் தகப்பனும் தீர்மானித்தார் கள். தகப்பன் மனம் தளர்ந்தவுடன், கல்யாணத் தரகுக் காரர்கள் இங்கும் அங்கும் தூது ஓடிச் சீக்கிரத்தில் முடிவு செய்தார்கள். பிள்ளைக்கு மட்டும் கலக்கம் தெளியவே இல்லை. தனக்கு விவாகம் என்கிற நினைவே சற்றும் இல்லாதவனைத் திடீரென்று பிடிக்கவே, ஒன்றும் திக்குத் திசை புரியாமல் மயங்கினான் அனந்த ராமன்.

"ஆகட்டும்" என்று அவன் வாயால் கணீரென்று சொல்லவில்லை. குருடன் தன் கழுத்தில் விழுந்த மாலையைப் பாம்பு என்று நடுங்கி எறிவதைப்போல, "ஐயோ!" என்று அலறவிடினும், முகத்தில் உதஸாக மாவது, களிப்பாவது தோன்றவில்லை.

4

சுப்பராமனின் கல்யாணத்திற்கு என்று வந்திருந்த சிநேகிதர்கள் இவனிடம் அதே பிரீதி வைத்திருந்ததால் அவனை ஆட்டிக் குலுக்கி, "கொஞ்சம் சிரியேன்" என்று தைரியப்படுத்தினார்கள். "எல்லாம் சரிதான். அண்ணா என்ன சொல்வான்! அவனுக்குத் துரோகம் அல்லவா இது?" என்று மணையில் உட்காரும் வரையில் தயங்கினான் அனந்தராமன்.

அம்மான் தோள் ஏறி, மாலை மாற்றும் பொழுது கூட அவனுக்குத் தெளியவில்லை. ஜானகி மிகக் கூர்மை ஆதலால், அவனுக்குத் தன்னிடம் சுதந்திர புத்தி வர வேண்டும் என்று புன்சிரிப்பாலும் கடைக்கண் நோக்கி னாலும் மயக்கினாள். இதனால் அவன் சங்கோசம் அதிக மாயிற்றே ஒழிய வேறில்லை.

"அண்ணா எங்கே? அவனைத்தான் கண்ணும் மனமும் தேடுகிறது. அவன் ஒப்பவேண்டாமா?" என்று தாலி கட்டியான பிறகுங்கூட அனந்தராமன் திருப்திக் குறைவாகப் பேசினான்.

"அண்ணா இருந்தால் இந்தக் கல்யாணம் ஏது? அவன் மறைந்ததால்தான் இந்தச் சம்பவம்" என்று தோழர்கள் ஆறுதல் சொன்னார்கள்.

"நிச்சயம் அவன் சம்மதிப்பான். அவன் இங்கே இருந்தால் எங்களைவிடச் சந்தோஷப்படுவான். கா தாளம் போட்டுக் குதிப்பான்" என்றார்கள்.

இது போன்ற உறுதிச் சொற்களைக் கேட்டு, ஒரு வாறு தான் செய்வது சரிதான் என்ற எண்ணம் தோன்றி, ஜானகியின் மகிழ்ச்சியைக் கண்டு, தானும் மகிழ்ந்ததாக வெளியில் காட்டிக்கொண்டான். ஆனால் எல்லாச் சந்தேகமும் ஐந்தாவது நாள் ஆசீர்வாதம் நடக்கையில், சுப்பராமனிடமிருந்து வந்த கடிதத்தால் தெளிந்துவிட்டது.

அது தஞ்சாவூரில் இருந்து ஹெட்மாஸ்டருக்கு அவன் எழுதிய கடிதம். கடிதம் கிடைத்ததும் ஹெட் மாஸ்டர் பரபரப்புடன் கொண்டுவந்து உரக்கப் படித்து, இங்கிலீஷில் இருந்ததைத் தமிழ்ப்படுத்திச் சொன்னார். சொற்கள் அதிகம் இல்லை. ஆனால் ஆழ்ந்த உணர்ச்சி நிறைந்திருந்தது: "நான் ஊரை விட்டு வரும் பொழுது என்ன நடந்தால் உத்தமம் என்று கடவுளைப் பிரார்த்தித்தேனோ அதுவே நடந்திருக்கிறது. அதை யும்விட மேன்மையானதொரு பயன் ஏற்பட்டிருக்கிறது. மூன்று தலை முறையாக அல்லும் பகலும் வளர்ந்து வந்த தாயாதிக் காய்ச்சல் இத்துடன் முடிந்தது. எங்கள் தகப்பன்மார்களுக்கும் கண் திறந்து உற்றார் உறவுமுறையார் என்கிற ஞாபகம் பிறக்குமானால் நான் தன்யன் ஆவேன். சீக்கிரம் வந்து நேரில் உங்களுடன் ஆனந்தப் படுவேன்" என்று எழுதியிருந்தது.

ஹெட்மாஸ்டர் கல்யாண வீட்டில் கடிதத்தை வாசித்துவிட்டு. உடனே சுப்பராமனின் பெற்றோரிடமும் சென்று, அவன் அரிய நோக்கங்களைக் கொண்டாடி. "நின்ற கல்யாணத்திற்கு மேலான சம்பவம் இது. நூறு கல்யாணத்திற்குச் சமானம்" என்று மெய்ம் மறந்து மெச்சினார். சுப்பராமனின் தந்தை தம் மனைவி யிடம், "எனக்கு ஒன்று தோன்றுகிறது. ஹெட் மாஸ்டரை அனுப்பிச் சின்னுத்துப் பயலை நல்ல வார்த்தை சொல்லி, உன்னையும் என்னையும் கிருகப் பிரவேசத்திற்கு அழைக்கச் சொல்வோம். அழைத்தால்

போகலாம் என்று நினைக்கிறேன். நீ என்ன சொல்கிறாய்?" என்று கேட்டார். அந்த அம்மணி சொன்னதாவது. "உங்களுக்கு மேல் எனக்கு இருக்கு. சுப்பராமன் யோகீசுவரன் போல் உபதேசிச்சிருக்கான். சின்னாத்துக்காராள் அழைச்சாலும் அழைக்காட்டாலும் பெரியாத்துக்காராள் நாம் போகலாமே! புறப்படுங்கோ!—"

'நம்ப ராமப்பா'

நம்ப ராமப்பாவைப் போலுண்டோ? 'நபூதோ நபவிஷ்யதி.' இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு ஸம்ஸ்கிருதத்தில் சொல்லி என்ன பிரயோஜனம்? 'அப்படி ஒருவர் இருந்ததும் இல்லை, இருக்கப் போகிறதும் இல்லை.' நான் சொல்வது அறுபது வருஷத்திற்கு முந்திய கதை. எனக்குப் பத்துப் பன்னிரண்டு வயசு இருக்கும். ராமப்பாவுக்குச் சுமார் எழுபது இருக்கும். கொஞ்சம் கூனியிருப்பார். நல்ல கறுப்பு. தொட்டால் ஒட்டிக்காதே ஒழிய, கறுப்புத்தான். ஆள் நல்ல வாட்டசாட்டமாயிருப்பார். ஓர் ஆச்சரியம்: கிழவரானாலும் தலை வழுக்கை இல்லை. தலையிலும் முகத்திலும் மயிர் தும்பைப்பூப் போல வெளுப்பேறி இருக்கும். பார்க்கும் போது எங்களுக்கெல்லாம் வேடிக்கையாக இருக்கும். ஏதோ ஒரு வகைக் குரங்குமாதிரி தோன்றும்; முகத்தின் அழகும் ஏறக்குறைய அப்படித்தான்.

அவர் க்ஷவரம் செய்துகொண்டதே எனக்குத் தெரியாது. நாள், நக்ஷத்திரம், திதி எல்லாம் சேர வேண்டுமே! ஊரில் இரண்டு போகளே அம்பட்டர். அவனுக்கு இரண்டு நாள் முன்னமேயே சொல்லி வைக்கவேண்டும். கூலிக்குப் பதக்கு நெல்லைத் துணியில் கட்டிக்கொண்டு போகவேண்டும். அந்த நாளில் அம்பட்டனுக்கு மட்டும் கையிலேயே கூலி கொடுத்தாக வேண்டும். "ஆகட்டுமே, இன்னும் பத்து நாள் போகட்டுமே? என்ன அவசரம்?" என்று சொன்னாலோ, ராமப்பாவின் மயிர் வளர வேண்டியதுதான்.

கையில் எப்பொழுதும் ஒரு கெட்டிக் கழி இருக்கும். சில வேளையில மூங்கில் கழி, சில வேளையில் பூவரசங் கழி. தினமும் காலையில் குடமுருட்டியில் நீராடி வேஷ்டியைச் செவ்வையாய்த்

தோய்த்துக்கொண்டு, செப்புச் செம்பு, செப்புப் பஞ்ச பாத்திரத்தில் தீர்த்தம் எடுத்து வருவார். துணி வெளுப்பாகவே இருக்காது. வண்ணான் கையில் பட்டால்தானே? ஏதோ ஒருவிதப் பழுப்பு நிறம் ஏறி விகாரமாக இருக்கும். சதையெல்லாம் குன்றி, சின்னச் சின்ன வெடிப்பாயிருக்கும். ஆனால் மிகவும் உறுதி; செருப்புத் தோல் மாதிரி. கையைப் பிடித்தாரானால் எங்களுக்குள் ஒரு பையனும் திமிர முடியாது.

தூரப் பார்வைக்கு என்னவோபோல்தான் இருப்பார். கிட்டப்போய்ப் பேசத் தொடங்கினால் உள்ளே ஆள் இருக்கிறார் என்று தெரியும். உலக நடவடிக்கையெல்லாம் நன்றாய்ச் சொல்லுவார். எப்பொழுதும் ஏழெட்டுப் பையன்களாவது சுற்றியிருப்பார்கள்.

சிரிக்கச் சிரிக்கக் கதைகளும் பண்டைக் காலத்து வரலாறுகளும் அவர் மெதுவாய்ச் சொல்லிக்கொண்டேயிருப்பார். கேட்க ஆசையா யிருக்கும். பையன்களெல்லாம்வாயை, 'ஆ!' என்று திறந்துகொண்டே இருப்போம், சொறிந்து கொடுத்த மாடு என்பார்களே, அதுபோலத் தான் சுற்றி யிருப்போம். சுத்த வெகுளி. உள்ளதை உள்ளபடிதான் சொல்வார். ஆனால் எங்களுக்குச் சில வேளை 'அவுட்டாவோ' என்று தோன்றும். யாராகிலும் துணிந்தவன், "என்ன! கொஞ்சம் கைச்சரக்குக் கலந் துட்டாப்பலே இருக்கே?" என்பான். "ஏலே! வழிங்கிப் பயலே! பேசாமல் கேட்பாயா?" என்பார். அதிகக் கோபம் வாராது. 'வழிங்கிப் பயலே' என்று அவர் சொல்வது வேடிக்கையாக இருக்கும். அதைக் கேட்பதற்காகவே சில பையன்கள் அவரைப், 'பொய், புளுகு' என்று சொல்லிச் சீண்டுவார்கள். ஒரே ஒரு தடவைதான் பொறுக்கமாட்டாமல் கோபம் வந்து கழியைத் தூக்கினார். நாங்கள் திக்குக்கு ஒருவராய் ஓடியே போய் விட்டோம். உடனே நம்ப ராமப்பாவுக்கு மனசு இளகிப் போயிற்று. கழியை எட்டித் தூரத்தில் எறிந்தார்.

"வாங்கோடா, வழிங்கிப் பயல்களா!" என்று அழுத்தம் திருத்தமாய்க் கூப்பிட்டார்.

நம்ப ராமப்பாவுக்குப் பசி பொறுக்காது. பசித்தால் பட படப்பும் கோபமும் வந்து விடும். சாப்பாட்டில் நல்ல தேட்டையான ருசி. புகழ வேண்டிய சமயங்களில் புகழுவார்; இகழ வேண்டிய சமயங்களில் இகழவும் இகழ்வார். ஊர்ப் பெண்டிர்களுக்கெல்லாம் ராமப்பாவின் மனம் ஒப்பினால்தான் சமையற்காரி என்று பேர் வரும். இன்னாருடைய சமையல் என்று சாப்பிடும்பொழுதே சொல்லி விடுவார். யார் யாருக்கு என்ன என்ன அம்சத்தில் திறமை உண்டு என்பது அவருக்குத் தெரியும். 'மின்னிலே போட்டு மோர்க்குழம்பு பண்ண வேண்டுமானால் கோடியாத்துக் குப்பிச்சி பண்ண வேண்டும்', என்பார். 'தேங்காய்ப் பாலுக்குப் பிறந்தாள் எங்க அம்மாமி சுந்தராம்பா', 'முறுக்குச் சுற்றுவதற்கு முத்துவுக்கு மிஞ்சி உண்டோ?' 'அணுசாமி ஆமடையாள்தான் ஸோமாசி பண்ண வேணும். ஸோமாசி என்று கூப்பிட்டால் ஏனென்று கேட்குமே?' 'ஸ்¬ய்யன் மேலத்தெரு அபிராமியோடு போச்சு. இனிமேல் ஸ¬ய்யன் உணடோ?', 'போளி தட்டுவதில் ஒண்ணு நம்பர் எங்க மேலாத்து முத்துப் பாட்டி. அவள் பெண் ஸரஸ்வதியும் பரவாயில்லை. சீக்கிரத்தில் அந்தப் பதவிக்கு வருவாள்' - என்று இப்படி அவா வாயால் நன்மதிப்புப் பெற்றவர்களுக்கெல்லாம் பெருமை சொல்லி முடியாது. ராஜகாத்தில் முத்திரை போட்டுச் சாஸனம் வாங்கிவிட்டாற் போல்தான்.

ஸமாராதனைக்குச் சாப்பிடப் போனால் 'நம்ப ராமப்பாவுக்கு இது பிடிக்கும், அது பிடிக்கும்' என்று பெண்களும் புருஷர்களும் மேல் மேலாய்ப் போடுவார்கள்.

ஆனால் அவருக்கு ஒரு தெரியாத்தன்மையும் உண்டு. எது முதலில் நன்றாயிருக்கிறதோ அதையே

அதிகமாய்ச் சாப்பிட்டு விடுவார். பசியின் கொடுமையோ என்னவோ தெரியாது; பின்னால் வந்ததையும் நன்றாக இருந்தால், 'அடடா! மோசம் போனேனே!' என்று விசனப்படுவார். 'வழிங்கிப் பயல்கள், எல்லாரும் பார்த்துக்கொண்டுதானே இருக்கின்றார்கள்? "ராமப்பா, இன்னது இன்னது வரப்போகிறது" என்று சமயத்தில் சொல்ல வேண்டாமா?' என்பார். 'இத்தனை வயசாச்சே? பதார்த்தங்கள் இன்னது இன்னது வருமே! தக்கபடி அளவாய்ச் சாப்பிடவேண்டுமே என்று தெரியாதா?' என்று சமயம் பார்த்து நாங்கள் கேட்பது உண்டு. 'வாஸ்தவந்தான். அதேதோ ஒரு மாதிரி ஆசை. "கையில் ஆப்பிட்டதை விடாமல் தட்டி விட்டால் நல்லது. பின்னால் எப்படி இருக்குமோ என்னவோ?" என்று தோன்றுகிறது. பின்னால் வரப் பட்டதோ முக்கால்வாசி நன்றாகவே இருந்து தொலைக் கிறது. சனி! தர்மசங்கடந்தான். அதையும் வஞ்சனை யில்லாமல் தின்றுவிட்டு முழிக்கவேண்டி வருகிறது' என்பார்.

இவ்வளவு நல்லவ ராயிற்றே! நம்ப ராமப்பாவிடத் தில் எல்லாருக்கும் பயந்தான். ஒருவரும் எதிரில் நின்று சண்டை செய்ய மாட்டார்கள். அவ்வளவு பலமும் தைரியமும் அவருக்கு உண்டு. பெரியவர்கள் ஆகட்டும், சிறியவர்கள் ஆகட்டும், என்ன அடி தடியாக இருந்தாலும் சரி; ராமப்பா வந்து, 'என்னடாது? என்னிடம் சொல்லிவிட்டுப் பிறகு வேண்டுமானால் சண்டை போடலாம்' என்றால், சண்டையை நிறுத்தி அவரிடம் இரண்டு கட்சிக்காரர்களும் தங்கள் நியாயத் தைச் சொல்லிக்கொள்வார்கள். கூடிய வரையில் பக்ஷபாதம் இல்லாமல் சமாதானமும் செய்துவிடுவார். அவருக்கு இரவு, இருட்டு என்ற பயம் கிடையாது. 'பேயாவது, பிசாசாவது! என்னிடம் வரச் சொல், பார்ப்போம்' என்பார். யார் வீட்டிலாவது பெண் கள் பேயாடுகிறார்கள் என்றால், முதலில் தாமே போய்

விடுவார். அவர் நாளில் மந்திரவாதிக்கு விசேஷமாய்ப் பிழைப்பே இல்லை. பெண்களைப் பிரம்பால அடிப்பார். அக்கம் பக்கம் பார்த்துப் பெரியவர்கள் ஒருவரும் இல்லை என்றால் கையாலும் 'பட் பட்' என்று போட்டு விடுவார். வலி பொறுக்காமல் பிசாசெல்லாம் அலறும்.

பேயை ஓட்டத்தான் போவாரோ? - வியாதியை விரட்டவும் போவார். யாராகிலும் வந்து கூப்பிடுகிற வரையில் வைத்துக்கொள்ளமாட்டார். யாருக்கோ, என்னவோ என்று கேட்டால் போதும்; எந்த வியாதியாக இருக்கட்டும். 'இதோ பாருங்களேன், மூணே நாளில் ஸ்வஸ்தம் பண்ணி எழுந்திருந்து ஓடும்படி செய்கிறேன்' என்று தங்கு தடையில்லாமல் தைரியம் சொல்வார்.

மூலிகை, வேர், திராவகம், எல்லாம் தெரியும் என்பார். லேகியம், சூர்ணம், பற்று முதலியவை எதிரில் வந்து கைகட்டிப் பேசும். உப்பில்லாப் பத்தியம், புளியில்லாப் பத்தியம், பட்டினி - எல்லாம் கடுமையாய்ப் போடுவார். நல்ல வைத்தியர் இல்லாத ஊரில் ராமப்பா போல் ஒருவர், 'பயப்படாதேயுங்கள், நான் ஒரு கை பார்க்கிறேன்' என்று வலுவில் வந்து சொன்னால், ஒன்றும் தோன்றாமல் கையைப் பிசையும் ஜனங்களுக்கு ஏதோ ஒரு தெய்வம் கை தூக்கி அபய தானம் கொடுத்ததுபோல் இருக்கும். ராமப்பா ஊரில் இல்லாமலாவது, வேறு யாது காரணத்தாலாவது வரவில்லையென்றால் அதுவே அபசகுனம், துரதிருஷ்டம் என்று எண்ணுவார்கள்.

நான் நேரில் கண்ட ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன். எங்கள் கிராமத்தில் கீழைத் தெருக் கோடியிலே சிவராமன் பிள்ளை கோபாலன் என்று ஒரு வைதிகப் பிராமணன் உண்டு. ஒரு நாள் அஸ்தமிக்கப் போகிற சமயத்தில் பெருங் கூச்சல் அவன் வீட்டில்

கேட்டது. ஊரெல்லாம் கூடிப் போய்விட்டது. கோபாலன் கிழக்கு முகமாக உட்கார்ந்திருக்கிறான். அவன் மனைவியும் பிள்ளையும், சூடம் சாம்பிராணி யெல்லாம் போட்டுச் சுற்றிச் சுற்றித் தூபம் போடு கிறார்கள். 'ஸ்வாமி! மலையேறவேண்டும், ஸ்வாமி! மலையேறவேண்டும்' என்று வணக்கமாய்க் கெஞ்சிக் கதறுகிறார்கள். கோபாலனோ, 'ஆகா, ஊகூ!' என்று அலறிக்கொண்டு, 'கையை விடுங்கோ, இதோ போக வேண்டும்! அதோ பாருங்கோ, பரமசிவன் பார்வதி ஸமேதராய் விருஷபாரூடராய் அழைக்கிறாரே, தெரிய வில்லையா, உங்களுக்கு? மூட ஜனங்களே! இப்படியே ஸசரீரனாய்ப் போகிறேன்', என்று கூச்சல்போட்டு இரண்டு கைகளையும் தூக்கிக் காட்டுகிறான். பிடிப்பவர் யாவரையும் தள்ளிவிட்டு எழுந்திருந்து ஓடிப் போகிற வன்போல் கும்மாளம் போடுகிறான். ஊர்க்காரர்களோ, 'இதென்ன விபரீத காலம்' என்று சிலர் மெதுவாயும், சிலர் உறுதியாயும் பேசிக்கொண்டு பிரமித்து நிற்கிறார் கள். இந்தக் குழப்பத்தில், 'நம்ப ராமப்பா வந்துட்டார்! நம்ப ராமப்பா வந்துட்டார், வழி விடுங்கோ!' என்று சத்தம் கேட்டது.

எல்லாரும் விலகவே, ராமப்பா கோபாலனின் எதிரில் நின்றார். கோபாலன் அவரை ஒரு தரம் பார்த்துவிட்டு முன் போலவே, 'என்னை விடுங்கோ, பகவானை எல்லாரும் பாருங்கோ; ஸாஷ்டாங்கமாய் நமஸ்காரம் பண்ணுங்கோ' என்று உறுதியாய்க் கூவினான். அநேகம் பேர் மேல் துணியை இடுப்பில் கட்டிக்கொண்டு விழுந்து விழுந்து கும்பிட்டார்கள்.

ராமப்பா கொஞ்சமேனும் வணங்காமல் கோபால னின் முகத்தருகில் போய் மோந்து பார்த்தார். ஏதோ திருட்டைக் கண்டு பிடித்தவர்போல் அவன் கைகளைத் தம் கைகளால் கெட்டியாய்ப் பிடித்தார். கோபாலன் பலங் கொண்டமட்டும் திமிரி, "மற்றவர்

களைப் போல நமஸ்காரம் பண்ணடா!'' என்று அதட்டிச் சொன்னான்.

''நமஸ்காரமா உனக்கு? இதோ பார் நமஸ்காரத்தை!'' என்று சொல்லி, வலது கையை ஓங்கிக் கோபாலனின் இடது கன்னத்தில் ஓர் அறை அறைந்தார். 'பளீர்' என்று ஓசை கேட்டது. ''ஐயோ! ஐயோ!'' என்று சிலர் சத்தம் போட்டார்கள். கோபாலனோ ஒரு கணம் அசைவற்று நின்று மயக்கம் தெளிகிறவன் விழிப்பதுபோல் விழித்து, 'அப்பாடா!' என்று கன்னத்தைத் தடவிக்கொண்டு ஓரடி பின் வாங்கி, ''ராமப்பா! இந்தக் கன்னத்திலும் ஓரடி கொடுங்களேன்'' என்றான். அவன் மனைவியும் பிள்ளையும் மற்றும் அநேகரும், ''ஐயோ! வேணடாமே! ஐயோ! வேணடாமே!'' என்று கூச்சல் போட்டார்கள்.

ராமப்பா அவனையே வெறிக்கப் பார்த்து, ''புத்தி தெளிஞ்சு தாடா?'' என்று கேட்டார். ஒன்றும் சொல்லாமல் ஒரு முழி முழித்தான். ''இன்னும் மயக்கம் முழுக்கப் போகலையா?'' என்று சொல்லிக் கொண்டே இடது கையால் அவன் வலது கன்னத்தில் பளீர் என்று அடித்தார். அடித்துவிட்டு, ''உள்ளத்தைச் சொல்லு, என்ன சாப்பிட்டாய்?'' என்று கேட்டார். ''கஞ்சா தின்னேன்'' என்றான்.

''யார் கொடுத்தது?''

''குடியானவத்தெரு சுப்பரமணியன்.''

''கொண்டா அந்தச் சுப்பரமணியப் பயலை!'' என்று சுக்கிரீவன்போல் ஆக்ஞை பண்ணினார்.

இரண்டு பேர் குடியானவத் தெருவை நோக்கி ஓடினார்கள். ''அவனுக்கு என்ன பைத்தியமா? இத்தனை நாழி, 'பஞ்ஞாநாடு பொழுதுவிடிய' என்று ஓடியிருக்க மாட்டானா?' என்று ஒருவருக்கு ஒருவர் சொல்லிக் கொண்டார்கள். ராமப்பா சூடம் சாம்பிராணி

முதலிய தூபங்களைத் தூக்கிக் கொண்டுபோய்ப் போடச் சொல்லிவிட்டு, கோபாலனைக் கிணற்றங்கரையில் உட்கார வைத்து, இரண்டு மூன்று குடங்களை வரவழைத்து, குளிர்ந்த ஜலத்தில் ஐம்பது அறுபது குடம் தலையில் கொட்டி வைத்தார். முக்கால்வாசி மயக்கம் தெளிந்தது. பிறகு கொஞ்சம் மோர் கொடுத்து உள்ளே படுக்க வைத்துத் தூங்கும்படி ஏற்பாடு செய்தார். கூட்டம் கலைந்தது. பிறகு கோபாலனின் மனைவியையும் பிள்ளையையும் அழைத்து, "நன்றாய்த் தூங்கட்டும். பேச்சுக் கொடுக்காதே யுங்கோ. பேச்சுக் கொடுத்தால் குடி கெட்டுப் போச்சு" என்று பயமுறுத்திவிட்டுப் போனார்.

அவர் எழுபத்தைந்து வயசில் இறந்து போனார். துக்கப்படாத ஜனங்கள் அந்த ஊரில் இல்லை. ஒவ்வொருவரும், 'நம்ப ராமப்பா!' என்று அழைக்க வேண்டுமானால் எப்படி இருக்கவேண்டும்? 'மிகவும் நல்ல மனுஷன்: தேகத்தில் எவ்வளவு பலமுண்டோ அவ்வளவு பலமுண்டு மனசிலும். எந்த வீட்டில் சங்கடம் இருந்தாலும் என்ன என்ன என்று தம் காரியம்போல் பார்த்து ஏதாவது ஓர் உபாயம் செய்து விட்டுத்தான் போவார். இனி ஊருக்கு ஒரு தீராத குறைதான். நல்ல உபகாரி. உத்தமமான ஜன்மம் கிடைக்கும். இனிமேல் அந்த மாதிரி எங்கே இருக்கா? விரலை மடக்கு, பார்ப்போம்'......இப்படியெல்லாம் அவர் காலமான பிறகு நெடு நாட்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

முற்றும்

இந்தப் புத்தகம் மகாகனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் அவர்கள் வாழ்க்கையில் நடந்த சில சம்பவங்களையும் அவர் கண்டும் கேட்டும் அநுபவித்த சில செய்திகளையும் அவராகவே சொல்லும் சில கட்டுரைகளைக் கொண்டது.

அந்தக் காலச் சமூக நிலை, ஒரு சமூகத்தில் பழக்கத்தில் இருந்த சில அபூர்வமான பழக்க வழக்கங்கள் முதலியவைகளை அப்படியே நம் முன் காட்டுகின்றன, இந்தக் கட்டுரைகள்.

சிறு கதைகள்

குங்குமச் சிமிழ் - ஆர்வி ரூ. 2/0

இன்பமான சுவையும் தெளிவும் நிறைந்த நடையில் எண்ணச் சுழலேயும் வாழ்க்கைப் பிரச்னேகளேயும் குழைத்துத் தீட்டிய வர்ணச் சித்திரங்கள் போன்ற மணிமணியான் கதைகள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை; ஒவ்வொரு ருசி.

வெள்ளிக் கிழமை - கி. ரா. ரூ. 2/0

சரளமும் விறுவிறுப்பும் கலந்த நடையில் புதுப் புதுக் கருத்துக்களேத் தெளிவாக அமைத்து எழுதிய சிறந்த கதைகளின் தொகுதி.

நல்ல பிசாசு - ஆனே ஸா. குஞ்சிதபாதம் ரூ. 2/8

வாழ்க்கையில் நாம் தினசரி காணும் மனிதர்களின் குண சித்திரங்களேயும் நாம் காணுத அமானுஷ்ய கதாபாத்திரங்களேயும் வைத்து எழுதிய கதைகள்.

கன்னியின் கனவு - க. சந்தானம் ரூ. 2/4

ஆசிரியர் பொருளாதார நிபுணர் மட்டுமல்ல; அழகிய சிறு கதைகளும் எழுதுவதில் வல்லவர். சமூக வாழ்க்கையைப் பல கோணங்களில் நின்று பார்த்து பல பிரச்னேகளேச் சிறு கதைகளாகச் சிறைசெய்து, பல் வேறு சுவைகளே எழுப்புகிருர்.

கலேமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னே-4